சீனஞானம் : ஞானி லாட்சுவின்

வாழ்க்கை வெளிச்சம்

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

கங்கை புத்தகநிலையம்

13, தீனதயாளு தெரு,
தியாகராய நகர், சென்னை – 600 017.

சீனஞானம் :
ஞானி லாட்சுவின்

வாழ்க்கை வெளிச்சம்

கங்கை

சீனஞானம் : ஞானி லாட்சுவின்

வாழ்க்கை வெளிச்சம்

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

கங்கை புத்தகநிலையம்

13, தீனதயாளு தெரு,
தியாகராய நகர், சென்னை – 600 017.

முதற் பதிப்பு : மே, 2001

விலை : ரூ.50.00

TITLE	:	VAZHKAI VELICHAM
AUTHOR	:	Dr. M.S. UDAYAMURTHY
LANGUAGE	:	TAMIL
SUBJECT	:	SELF-IMPROVEMENT
EDITION	:	FIRST EDITION, MAY 2001
PAGES	:	xlvi + 198 = 244
PUBLISHED BY	:	GANGAI PUTHAKA NILAYAM 13, Deenadayalu Street, Thiagaraya Nagar, CHENNAI - 600 017.
PRICE	:	Rs.50.00

Printed at : Ragavendra Agencies, Chennai-600 005 ☎ 8588471, 8548891



அன்புடன், பெருமையுடன்

ஒரு சமர்ப்பணம்

டைரக்டர் கே. பாலசந்தர் எனது இனிய நண்பர். நாங்கள் இருவரும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஒன்றாய்ப் படித்தோம்.

அவர் தமிழ்ப்பாடம் எடுக்கவில்லை; இரண்டாவது மொழியாக அவர் எடுத்துக்கொண்ட பாடம் பிரெஞ்சு. தாவரவியல், விலங்கியல், பிரெஞ்சுமொழி என்ற மூன்று பாடங்களிலும் முதல் வகுப்பு பெற்ற ஒரே மாணவர் இவர். அதிசயமாக நாங்கள் எழுதிய – நான் எழுதிய கதையும், அவரது படைப்பும் ஒரே குமுதம் இதழில் வெளிவந்தன!

நடிகர்கள், நடிகைகளை, முன்வைத்து சினிமா உலகம் ஒரு திரைப்படத்தின் பெருமையை நிர்ணயித்த காலத்தில், அதை மாற்றி இதை யார் ‘டைரக்ட்’ செய்திருக்கிறார் என்று மக்களைப் பார்க்கச் செய்த, மாமனிதர் அவர்.

எனது புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட பிரமுகர்கள், ‘உங்கள் படத்தில் உதய மூர்த்தியை நடிக்க வையுங்கள்’ என்று குரல் கொடுத்த போது, ‘என் படத்தில் உதயமூர்த்தி நடிக்கிறார்’ என்று சஸ்பென்சை ஏற்படுத்தி அதன்பின், “எனது உன்னால் முடியும் தம்பி படத்தின் கதாநாயகன் பெயர் உதய மூர்த்தி” என்று கூறி என்னையும், எல்லோரையும் மயக்க வைத்தவர் அவர். ஒரு நண்பனை இப்படி யார் கௌரவித்திருக்கிறார்கள் என்று எனக்குத் தெரிய வில்லை. ‘உன்னால் முடியும் தம்பி’ எனும் சுலோகம் – மக்கள் சக்தி இயக்கத்தின் சுலோகம்தான். ஆனால் தமிழ் உலகறிய அதைப் பறைசாற்றியவர் அவர். படத்தின் மூலமும் பாடல்களின் மூலமும் புத்துணர்ச் சியை ஏற்படுத்தியவர் அவர். திரைப்பட உலகிற்கும், சமுதாய மாற்றத்திற்கும் அவர் செய்த பணிகளும் செய்து வரும் பணிகளும் அனந்தம்.

அத்தகைய மனிதரை நண்பராகப் பெற்றிருப்பதில் நான் கொள்ளும் பெருமையின் நினைவாக இந்த சீன ஞானியின் கவிதை மலர்களை அவருக்கு சமர்ப்பிக் கிறேன்.

– எம். எஸ். உதயமூர்த்தி

முன்னுரை

லாட்சுவின் சீன ஞானம்

வளர்ந்த தாடி. தலையோ வழுக்கை. இடுப்பில் ஒரு துணி. மேலே ஒரு போர்வை. ஒரு எருமை மாட்டின் மீதேறிக் காட்டை நோக்கிப் புறப்படுகிறார். அவரோ சீனாவின் ஐந்து சக்கரவர்த்திகளுக்கு ஆலோசகராக இருந்தவர். எண்பதுக்கு மேற்பட்ட வயது. வாழ்வை நன்கு அறிந்தவர்; அனுபவ அறிவோ அபாரம். அரசர்களின் அருகில் இருந்து நாட்டு நிர்வாகத்தில் நுட்பமான உண்மைகளை அரசர்களுக்கு எடுத்து உரைத்து அரசை வழி நடத்தியவர். அவர்தான் லாட்சு.

அதுமட்டுமல்ல. கன்பூஷியஸ் என்றொரு பெரியவர், தத்துவமேதை, அந்தக் காலத்தில் வாழ்ந்தார். வயதிலே லாட்சுவை விட சற்று மூத்தவர். சமுதாய வாழ்வில் பல நெறிகளை முதன் முதலாக ஏற்படுத்தி அரசாங்கத்தின் சட்ட திட்டங்களை நிறுவி நாட்டை சீராக ஆட்சி செய்யும் நடைமுறைகளை ஏற்படுத்தியவர்.

ஞானி லாட்சு ஒருபடி மேலே சென்றார் என்றே சொல்ல வேண்டும். இந்த உலகை - இந்த பிரபஞ்சத்தை - ஒரு மாபெரும் சக்தி இயக்குகிறது; அதை நாம் பார்க்க முடிவதில்லை. அது இந்த பிரபஞ்சத்தில் எங்கும் பரவி நிற்கிறது. அது எல்லாவற்றையும் ஒரு ஒழுங்கில் நடத்திச் செல்கிறது. அதுதான் பிரபஞ்ச இயக்கம் - பிரபஞ்ச சக்தி. அது ஒரு ஒழுங்கில் நடைபெறுகிறது. அந்த ஒழுங்குதான் பிரபஞ்சலயம்.

பிரபஞ்சலயம் என்பது இந்த பிரபஞ்சத்திலுள்ள எல்லாம் ஒன்றுடன் ஒன்று இணைந்து ஒரு இசைக்

கச்சேரி போல நடைபெறும் எல்லாம் ஒன்றாக இணைந்த நிகழ்ச்சி.

இந்த சக்திக்கு "இதை பெயரிட முடியாது; அது மறை ஞானம்; புரியாத புதிர். மர்மங்கள் நிறைந்தது. அற்புதம், அதிசயம். பெயரிட வேண்டுமென்று நிர்பந்தித்தால் அதை 'டௌ' என்பேன். டௌ என்றால் பாதை என்று பொருள்; டௌ என்றால் பிரபஞ்ச சக்தி என்றும் பொருள்" — இப்படி விளக்குகிறார் பிரபஞ்ச சக்தியை. ஞானி லாட்சு சீன வாழ்விலே இது வரை இல்லாத ஆன்மீகக் கருத்துக்களை வாழ்வில் கொண்டு வந்தார். இவரது மறை ஞானத்தையும் - மறைந்து கிடக்கும் பிரபஞ்ச பேருண்மைகளையும் அதை லாட்சு விவரிக்கும் விதத்தையும் கண்டு வயதில் மூத்தவரான கன்பூஷியசே வியந்து போனதாக சரித்திரம் எழுதுகிறது.

லாட்சுவின் கவிதைகளை சீனஞானம் என்று சீனா போற்றுகிறது. ஞானம் என்றால் 'உள்ளதை உள்ளபடி அறியும் பேரறிவு' என்று அர்த்தம். எல்லா திசைகளையும் கடந்து எல்லாவற்றிற்கும் பின்னால் நிற்கும் உண்மையைக் காணும் நோக்கு; அக நோக்கு. அகக் கண் காட்டும் — உள்ளுணர்வு காட்டும் — பேருண்மைகளை ஞானியின் கவிதைகளிலே காண் கிறோம்.

இப்படிப்பட்ட ஞானி லாட்சு தன் கடைசிக் காலத்தில் எருமை மீதேறி காட்டை நோக்கி செல்கிறார். நாட்டின் எல்லையைக் கடக்கிறார். அங்கே காவல் புரியும் காவலர் இவரை கண்டு கொண்டு இவர் எல்லா வற்றையும் துறந்து அமைதியை நாடிக் காட்டுக்குச் செல்வதை அறிகிறார். "ஐயா! ஞானி அவர்களே! நீங்களோ ஐந்து சீன சக்கரவர்த்திகளுக்கு ஆலோசகராக இருந்து அரசர்களுக்கெல்லாம் வழி காட்டியவர். நீங்கள்

உங்கள் அனுபவங்களையும் அறிவையும் எங்களுக்குத் தராமல் இப்படிக் காட்டுக்குப் போகலாமா?" என்று கேட்கிறார்.

ஞானி லாட்சு அங்கே அமர்ந்து சுமார் 81 கவிதைகளை எழுதுகிறார். இதுதான் இன்றுவரை போற்றப்படும் ஞானி லாட்சுவின் 'டௌ டே ஜிங்' என்ற கவிதை நூல்.

டௌ என்றால் பிரபஞ்சம்

டே என்றால் பாதை

ஜிங் என்றால் சக்தி

"பிரபஞ்ச பாதையும் சக்தியும்" என்ற இந்த கவிதை நூல் 2600 ஆண்டுகளுக்கு முற்பட்டது. புத்தர் பிறப்பதற்கு நூறு ஆண்டு முன்பு வாழ்ந்தவர் ஞானி லாட்சு.

கன்பூஷியஸ் இதற்கான சூழ்நிலையை உருவாக்கி னார் என்று சொல்லவேண்டும். அதாவது சமுதாயத்தின் நெறி முறைகளையும் நாட்டுக்குத் தேவையான சட்ட திட்டங்களையும் உருவாக்கினார். ஆனால் அதற்கு மேலும் ஒன்று — மறைந்து கிடக்கும் உண்மைகள், ஒரு மாபெரும் சக்தி இயற்கையாய் இயங்கும் தன்மை — என்பனவற்றை எல்லாம் உன்னிப்பாகக் கவனித்து சிந்திக்கும் லாட்சுவின் மனம் எல்லாவற்றையும் இணைத்தது எப்படி?

முதலாவதாக நாம் இந்த உலகில் வாழ்கிறோம். உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க இடமும் செய்யத் தொழிலும் கொண்ட ஒரு அன்றாட உலகில் நாம் வாழ்கிறோம். இதிலே வாழ்க்கை பிரச்சினைகள், போராட்டங்கள், தவிப்புகள், ஏமாற்றங்கள், ஆசைகள்

லட்சியங்கள், உணர்வுகள் என்று பலவும் நம்மை மோதுகின்றன.

இதைக் கடந்து ஒரு உலகம் - சூட்சும உலகம் - நாம் பார்க்க முடியாத - நம் புலன்களுக்கு அப்பாற்பட்ட உலகம் ஒன்று இருக்கிறது.

பிரபஞ்ச இயக்கத்தைத் தெளிவாக, நுட்பமாகப் பார்க்கிறார் ஞானிலாட்சு. சொல்கிறார்:

"களி மண்ணால் பானை செய்கிறோம். உபயோகிப்பதோ வெற்றிடத்தை" என்று எழுதுகிறார். பானையில் உள்ள வெற்றிடத்தில்தான் பால் பொங்குகிறது; சோறு பொங்குகிறோம். அதாவது அந்த வெற்றிடத்தைத்தான் உபயோகிக்கிறோம். அதே போல ஜன்னல்களும் கதவுகளும், கவர்களும் வைத்து வீடு கட்டினாலும் உள்ளே உள்ள வெற்றிடத்தைத்தான் நாம் உபயோகிக்கிறோம். அதில் உள்ள கருத்தை மிக அழகாக எடுத்து வைக்கிறார் ஞானி லாட்சு

"இருப்பதை வைத்துக்கொள்
இல்லாததை உபயோகி"

என்று. பானையை உடைத்துவிட்டால் சோறு பொங்க முடியாது. ஆகையால் பானை தேவை. எனவே "இருப்பதை வைத்துக் கொண்டு இல்லாததை உபயோகி" என்கிறார் — பானையை வைத்துக்கொண்டு அதன் வெற்றிடத்தை உபயோகிப்பது போல.

இதில் மகத்தான உண்மை அடங்கிக் கிடக்கிறது. நாம் வாழும் உலகம் பொருளால் ஆன உலகம். அதே போல பொருளைக் கடந்த உலகம் ஒன்றிருக்கிறது. பொருளைப் பொடியாக்கிக் கொண்டு போனால் என்ன ஆகிறது? காற்றில் மிதக்கும் சிறிய துகள்களாகின்றன. காற்றையும்விட மென்மையாகப்

போனால் என்ன ஆகும்? நாம் பார்க்கிறோமே பூமிக்கும் சூரியனுக்கும், பூமிக்கும் சந்திரனுக்கும் இடையிலே இருக்கும் வெட்டவெளி — ஒன்றுமே இல்லாத உலகம் — சக்தி நிலை – அதுதான் எல்லா சூரிய குடும்பங்களுக்கும் எல்லா பால் வீதிகளுக்கும் இடையே இருக்கிறது. அந்த இல்லாத உலகம்தான் இருக்கும் பொருள் உலகை உருவாக்கியது.

அந்த இல்லாத உலகின் தன்மையை அறிந்து கொள்ள வேண்டும். இவ்வுலகை இயக்கும் அந்த வெட்டவெளி இல்லாவிடில் எல்லாக் கோள்களும் ஒன்றாகியிருக்கும் – அவை இன்றிருப்பது போல் தனித்தனியாக இயங்கமுடியாது.

அந்த மாபெரும் சக்தியை 'டௌ' என்று அழைக்கிறார்.

டௌ என்பது தொடர்ந்து ஊறும் ஒரு ஊற்று. எல்லாவற்றிற்கும் தாய். மூலம். பிரபஞ்சத்தின் துவக்கம். உருவமற்றது; பெயரற்றது; எங்கும் நிறைந்திருப்பது. எல்லாமாகி நிற்பது. நம் முன்னோர்கள் நடந்த பாதை. இதன் விதிகளை அறிந்து அதன் வழி நடந்தார்கள்.

தானே உண்டாகி, தானே ஒரு ஒழுங்கை தனக்குள் உண்டு பண்ணி அதே சமயத்தில் எல்லாவற்றுடனும் இணைந்து இயங்குவது, இது.

மேலே குறிப்பிட்டுள்ள வாக்கியத்தை மீண்டும் படிக்கும்போது எப்படி மானுடம் உருவாக்கப்பட்டி ருக்கிறது. ஜடப் பொருட்களுடனும், தாவரங்களுடனும் விலங்குகளுடனும் – எப்படி எல்லாம் அவற்றினுடனும், இயற்கைச் சூழ்நிலையுடனும் ஒத்து வாழ்கின்றன – தனித் தன்மையை விட்டு விடாமல் – என்பது விளங்கும்

– அவை தனித்தும், இணைந்தும் இயங்குகின்றன. மனித வாழ்வும் அப்படித்தான் இயங்கவேண்டும்.

"டௌ" என்ற பிரபஞ்ச சக்தியைப் பற்றி ஞானி லாட்சு ஒரு பாடலில் எழுதுகிறார். அவருடைய பார்வை நாம் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்று. அவருடைய சிந்தனையோ நம்மை பிரமிக்க வைக்கிறது; எங்கோ அழைத்துச் செல்கிறது – இதுவரை நாம் அறியாத இடங்களுக்கு – அதனால்தான் இதனை மறைஞானம் — மறைந்து கிடக்கும் ஞானம் என்கிறார்களோ?

வானமும் பூமியும் தோன்றுமுன்
ஏதோ ஒன்று இணைந்த நிலையில்
உருவமற்று மறைந்து இருந்தது.

அவ்வளவு அமைதி அவ்வளவு தனிமை
எங்கும் வியாபித்து; எவ்வித மாற்றமுமின்றி
சாஸ்வதமாக, எல்லாவற்றையும் தொட்டு அணைத்து.

உலகின் தாய் இவள்.

எனக்குப் பெயரிடத் தெரியவில்லை
பெயரிட வேண்டுமானால் பிரபஞ்ச இயக்கம் என்பேன்
கட்டாயப்படுத்தினால் மகத்தானது என்பேன்.

மகத்தானது என்றால் தொடர்கின்ற ஓட்டம்;
அப்பாலுக்கு அப்பால் செல்கிறது என்று பொருள்.
அப்பால் செல்கிறது என்றால் திரும்பி விடுகிறது
என்று அர்த்தம்.

எனவே இப்பிரபஞ்ச இயக்கம் உன்னதமான ஒன்று.

பூமியும் வானும் பெரிய விஷயங்கள்.

தலைவனும் அப்படித்தான்
இப்பிரபஞ்சத்தில் நான்கு பெரிய விஷயங்கள்
தலைமைப் பண்பு அதில் ஒன்று.

பூமியின் அமைப்பில் மனிதர்கள் ஆக்கப்படுகிறார்கள்.

பூமியோ விண்வெளிக் கோள்களின் அமைப்பில்
விண் வெளிக் கோள்களோ பிரபஞ்ச இயக்கத்தை
பிரபஞ்ச இயக்கமோ முன் மாதிரியாகக் கொண்டு
எல்லாவற்றிலும் பிரதிபலிக்கும் இயற்கை.

கவிதையைத் திரும்பத் திரும்ப நிதானமாகப் படித்தால் தான் நாம் அதை ரசிக்க முடியும். அவருடன் நாமும் ஆழமாக சிந்திக்க முடியும், புரிந்து கொள்ள முடியும்.

முதலாவதாக வானமும் பூமியும் தோன்றுமுன் உருவமற்றதாய் அவ்வளவு அமைதியுடன் அவ்வளவு தனிமையுடன் எங்கும் வியாபித்து இருந்தது மூலம் என்ற முதற்பொருள். (பூரண அமைதி நிலையை நினைவில் கொள்ளுங்கள்)

இரண்டாவதாக இப்பிரபஞ்சம் தானே தோன்றி தானே இயங்குகிறது. இயக்கம் என்பது செயலைக் குறிக்கும் சொல். இந்தப் பிரபஞ்சத்தின் அடிப்படை செயல் இயக்கம்.

மூன்றாவதாக இந்த பிரபஞ்ச இயக்கம் (ஓட்டம்) அப்பாலுக்கு அப்பாலாய் செல்கிறது என்றால் திரும்பி வருகிறது என்கிறார். செல்கின்ற ஒன்று துவங்கிய இடத்திற்கே வருமானால் வட்ட வடிவமானது அதன் பாதை என்பது பொருள்.

விஞ்ஞானம் தோன்றுமுன் மெய்ஞ்ஞானம் தோன்றி நம்மை அழைத்துச் செல்கிறது. இன்றைய இயற்பியல் (physics) விஞ்ஞானிகள் ஒளி ஒரு

நேர்கோட்டில் செல்வதாக இதுவரை சொன்னார்கள். அது அப்படியல்ல. ஒளிக்கதிரானது செல்லும்போது ஏதோ ஒரு இடத்தை ஊடுருவிச் செல்கிறது. அப்படிச் செல்லும் போது அது செல்லும் இடம் (space) இருக்கிறதே அது ஒளிக்கீற்றை வளைக்கிறது. ஒளிக்கீற்று வளைவதன் விளைவாக அது புறப்பட்ட இடத்திற்கு வட்டப் பாதையில் வருகிறது என்று கண்டு பிடித்திருக்கிறார்கள்.

நான்கு பெரிய விஷயங்கள் என்பதில் உள்ள **நான்காவது.**

"தலைவனும் அப்படித்தான்" என்று இல்லாத உலகையும் இருக்கும் நம் உலகையும், மனித வாழ்வை யும் இணைத்து ஒரு முத்திரை குத்துகிறார். மனிதனும் அதே அச்சில்தான் உருவாக்கப்பட்டிருக்கிறான். தலைவன் தாய்போல எங்கும் வியாபித்து எல்லோருக்கு மாக, அமைதியே லட்சியமாக, செயல்பட வேண்டும்.

நல்லது செய்தால் நல்லதுதான் திரும்பி வரும்; தீயவை தீய பயத்தலால் தீமையே திரும்பவரும் என்ற மாபெரும் உண்மையை மனத்தில் கொண்டு நல் ஆட்சியை, நிர்வாகத்தைத் தர வேண்டும்.

ஏனெனில் நாமும் பிரபஞ்சமும் வேறல்ல. அங்கி ருப்பதுதான் இங்கும் எங்கும் வியாபித்திருப்பது. இங்கு பூமியிலும் அங்கு வானிலும் இருப்பது ஒரே பொருள் தான். எனவே இயற்கையை மதி; இயற்கையுடன் ஒத்துவாழ். இதைத்தான் பிரபஞ்ச இயக்கம் தலைமைப் பண்பாக போதிக்கிறது.

'டௌ' என்ற பெயர்தான் நமக்கு வேறாக தென்படுகிறதே தவிர மற்ற கருத்துக்கள் எல்லாம்

மூவாயிரம் ஆண்டுகட்கு முன் எழுதப்பட்ட நமது மறை நூல்களில் கூறப்பட்டவைதான்.

எங்கே வேறுபாடு? "பிரபஞ்ச இயக்கத்தின் தன்மையைப் புரிந்துகொள். இயற்கையைப் புரிந்து கொள். இல்லாத உலகை இருக்கும் உலகிற்கு கொண்டு வா" என்று வானையும் பூமியையும் இணைக்கிறார் லாட்சு.

"மண் பயனுறவேண்டும்
வானகமிங்கு தென்பட வேண்டும்"

என்றாரே பாரதியார். அந்தப் பாடல்தான் நம் நினைவுக்கு வருகிறது. இரண்டையும் இணைக்கிறார் பாரதி. அவர்கள் ஞானிகள்! இப்படி விளக்கும் ஞானி இதுவரை யாரும் சொல்லாத பல வாழ்க்கை உண்மைகளை நம் முன் வைக்கிறார். அவை பலவும் யோசித்துப் பார்க்குமிடத்து இல்லாத உலகின் (மன உலகின்) தன்மைகளாகவும் மற்றும் பல இருக்கும் உலகின் குணங்களாகவும் விளங்குகின்றன.

- போட்டி இல்லாத உலகம்.
- இல்லாததை உபயோகி
- தேவையா? வேட்கையா?
- வலிமையை வெல்லும் மென்மை
- செயலற்ற செயல்
- இரு வேறு உலகம்
- பிரபஞ்சலயம்

என்று அவரது கருத்துக்கள் நிறைந்த கவிதைகள் நம்மை சிந்திக்க வைக்கின்றன. நம் அகக் கண்களைத் திறக்கச் செய்கின்றன.

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.

பிரபஞ்சத்தில் உள்ள கோள்கள் அனைத்தையும் பார்க்கிறோமே அங்கே ஒன்றுக்கொன்று போட்டி இட்டுக் கொண்டா இயங்குகின்றன? இல்லையே! நாமும் அப்படித்தானே வாழ வேண்டும்! ஏன் இங்கே போட்டி, பொறாமை? போட்டியின் விளைவாக நான் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டவன்; நான் சிறந்தவன் என்ற ஆணவம்! போட்டி இல்லா உலகம் இருக்க முடியாதா என்று கேட்கிறார் ஞானி. உலகம் அப்படித்தான் போட்டி இல்லாமல் இருந்தது. முதலில் அமெரிக்க நாட்டில் வாழ்ந்த நேவஹோ என்ற பழங்குடி இளைஞர்களை பள்ளிக்கு அழைத்து வந்தார்கள் – கல்வி புகட்ட. அங்கே அவர்களை 'வாலி பால்' விளையாடச் சொன்னார்கள். இரு பகுதியாகப் பிரிந்து கொண்டு பந்தை இங்கும் அங்கும் கீழே விழாமல் அடித்து விளையாடினார்கள்.

அப்போது ஒரு ஆசிரியர் குரல் கொடுத்தார்: "ஸ்கோர்'! 'ஸ்கோர்'! நீங்கள் எவ்வளவு தூரம் பந்து கீழே விழாமல் விளையாடினீர்கள்? அவர்கள் எத்தனை முறை அப்படி செய்தார்கள் என்கிற கணக்கு வேண்டும். அதுதான் 'ஸ்கோர்' என்றார்கள்.

பழங்குடி மாணவர்களுக்கு வியப்பு! "அவர்கள் பந்தைப் போடுகிறார்கள் நாங்கள் அடிக்கிறோம். நாங்கள் பந்தைப் போடுகிறோம் அவர்கள் அடிக்கிறார்கள். மாற்றி மாற்றி அடித்து அடித்து ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருக்கிறோம். இதில்

ஸ்கோர் எதற்கு? ஜெயிக்க வேண்டியது யார்? எல்லோரும் தான் ஆனந்தமாக விளையாடுகிறோமே! இதில் 'ஸ்கோர்' எதற்கு?" என்று கேட்டார்கள்.

பழங்குடிமக்கள் எப்படிப் பண்பில், அடிப்படை உண்மைகளில் நம்மை விட மேம்பட்டவர்கள் என்று அறியும் போது நமக்கு நம்மைப் பற்றியே கூச்சம் — வெட்கம் — ஏற்படுகிறது. போட்டியின்றி இயங்கும் பிரபஞ்சத்தில், போட்டியின்றி மகிழ்வுடன் வாழக்கற்றுக் கொண்டிருக்கும் பழங்குடி மக்களைக் கூட, நாகரிகம் என்ற பெயரில், வளர்ச்சி என்ற பெயரில் எப்படி இன்றைய சமூகம் அவர்களை மாற்றி விடுகிறது என்பதைக் கவனியுங்கள்!

பரிணாம வளர்ச்சி என்பது (evolution) மேம் பட்டதை உருவாக்கி நாளும் உலகை மேம்படுத்தும் முயற்சிதான். அங்கே போட்டி இல்லை. மனிதர்களாகிய நாம்தான் இதைப் புரிந்து கொள்ளாமல் பிரிவினையை ஏற்படுத்தி உயர்வு தாழ்வு கற்பிக்கிறோம்; பரிணாம வளர்ச்சியை ஒட்டி மேம்பட்டதை உருவாக்கும் நல்லெண்ணத்துடன் வாழும்போது அங்கே போட்டி இல்லை; போட்டியினால் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பேதம் ஏற்படுகிறது.

நம் மனோபாவம் சரியல்ல. "பிறரைத் தாழ்த்தி விட்டால் நாம் உயர்வோம்" என்ற சாதிக் கொடுமையும், தென்னாப்பிரிக்க வெள்ளையர்கள் மற்ற இனத்தாரை தாழ்த்தி நடத்தியதும் பிரபஞ்ச இயக்கத்திற்கு, பிரபஞ்ச உண்மைக்கு எதிரானவை. என்று நாம் இதை உணர் வோம்? அன்றாட வாழ்வில் கடைப் பிடிப்போம்? ஏன், போட்டியில்லாமல் எல்லோரும் மகிழ்வுடன் வாழ முடியாதா? ஏன் 'நாகரிகம்' எனப்படும் இன்றைய பண்பாடு போட்டி மனப்பான்மையை - உயர்வு

தாழ்வை — வளர்க்கிறது? இன்று இதை ஆரம்பப் பள்ளியிலேயே துவங்கி விட்டோம். "படி. படி. முதல் மார்க் வாங்கு!" என்று விவரமறியா இளங்குழந்தைகளை எத்தகைய மன நெருக்கடிக்கு உள்ளாக்குகிறோம்? அவர்களுடைய பிற்கால வாழ்வு இதனால் எப்படி பாதிக்கப் படுகிறது எண்ணிப்பாருங்கள்.

அடுத்து ஞானி ஒரு புதிய கருத்தை — ஒரு புதிய தத்துவத்தை — நம் முன் வைக்கிறார். "செயலற்ற செயல்" என்ற வாசகத்தை என்றாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ஆங்கிலத்தில் effortless effort என்பார்கள்.

முதலில் இந்த வாசகத்தைப் படித்தபோது வியப்பு மேலிட்டது! எதுவும் செய்யாமல் இருந்து கொண்டு, "செய்கிறேன்" என்று சொல்கிறார்களே அந்த "சோம்பேறிகளின் சொர்க்கம்" தான் செயலற்ற செயலோ, என்ற எண்ணம் ஓடியது.

சென் புத்தக் கதை ஒன்று சொல்கிறது. சீடனைப் பார்த்து குரு கேட்கிறார். "ஒரு கை தட்டும் சப்தத்தை நீ கேட்டாயா?" என்று, ஒரு கை தனியாக எப்படி சப்தத்தை எழுப்ப முடியும்? "சப்தமில்லாத சப்தம் என்பார்களே அது தானோ இது?" என்ற எண்ணம் எழுந்தவுடன் "பேசாத பேச்சு" - 'மௌன உபதேசம்' போன்ற எண்ணங்கள்! சிவன் கோயிலிலே தெற்கு நோக்கி அமர்ந்திருக்கும் தட்சிணா மூர்த்தியும் அவர் முன் அமர்ந்திருக்கும் நான்கு சீடர்களும் என் கண்முன் தோன்றினார்கள். அங்கே நடப்பது பேசாத பேச்சு; சொல்லாத உபதேசம்; கண் மூடிய மௌனம்; எண்ணமற்ற நிலை. எனினும் ஞானி அங்கே கண்மூடி தூங்கவில்லை; வேலை - உபதேசம் - நடக்கிறது. 'செயல் இல்லாத செயல்' நடக்கிறது.

ஒரு பெரிய நிறுவனத்தின் நிர்வாகி என் நண்பர். பக்கத்து நகரிலுள்ள ஒரு மகானைப் பற்றிய பேச்சு வந்தது. "அவரைப் பார்க்க வேண்டும் என்று நெடு நாளாக எண்ணிக் கொண்டிருக்கிறேன்!" என்றார். "ஓ! அப்படியா? வாருங்கள். இப்போதே போவோம்!" என்று உற்சாகம் மேலிடக் கூவினேன்.

அவரும் தன் காரியதரிசியிடம் சொல்லிவிட்டுக் கிளம்பி விட்டார். அப்போதுதான் எனக்கு உறைத்தது. அவர் நிறுவனமோ பெரிய நிறுவனம்! சுமார் ஆயிரம் பேர் வேலை செய்கிறார்கள். பல்வேறு நிலைகளில் வேலைகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. பணி புரியும் பலர் யோசனை கேட்க வருகிறார்கள். வெளியிலிருந்து பலர் அவரைப் பார்க்கக் காத்திருக்கிறார்கள். எனினும் மனிதர் கிளம்பிவிட்டார் என்னுடன்!

"அங்கே சில மணிநேரம் தாமதிக்க நேரிடுமே? நீங்கள் எல்லா வேலையையும் போட்டுவிட்டு எப்படித் திடீரென்று இப்படிக் கிளம்ப முடியும்?" என்றேன், மெலிந்த குரலில்.

அவர் சிரித்தார். "எல்லாம் தானே நடக்கும்" என்ற ஒரு வாசகத்தை மட்டுமே சொன்னார் புன்னகையுடன். "எல்லாம் தானே நடக்கும்" என்ற வார்த்தைகள் என் உள்ளத்தில் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

கட்டடத்தை விட்டு வெளியே வந்தோம். ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தேன். ஆகாயம் சொன்னாற் போலிருந்தது "தானே இயங்கும் பிரபஞ்சம்" என்ற வார்த்தைகளை.

கடவுள் தான் எல்லாவற்றையும் இயக்குகிறார் என்று சொன்னால் - அவரோ எங்கும் எல்லாமாக நிறைந்திருப்பவர்; எல்லாவற்றிலும் இருப்பவர் என்று

சொன்னால் என்ன பொருள்? "மேலே தலைமை என்ற ஒன்றில்லை; எல்லாவற்றிலும் அந்தத் தலைமை வினி யோகிக்கப்பட்டு ஒவ்வொன்றும் அதனதன் வேலையை இயல்பாக ஒரு ஒழுங்கிலே செய்கின்றது" என்று தான் எண்ண வேண்டி இருக்கிறது.

மனித உடலுக்குள் நிகழும் நிகழ்ச்சிகளில் கூட நாம் எதுவும் செய்வதில்லை. இதயம் தானே இயங்கு கின்றது; மூச்சு நம் முயற்சி இல்லாமல் தானே ஓடிக் கொண்டிருக்கிறது. உணவை உள்ளே போடுகிறோமே தவிர செரிப்பதெல்லாம் தானே நடக்கிறது. இதில் ஏதேனும் நமது முயற்சியா? ஏதோ தத்துவம் பேசுகிறார் ஞானி என்று எண்ணிவிடாதீர்கள்!

நாம் வாழும் அன்றாட உலகிற்கு வருகிறார்.

நாம் வாழும் இந்த உலகம் பொருளால் ஆன உலகம். இங்கே செயலினால், உழைப்பினால்தான் எதையும் சாதிக்க முடியும். வீடுகட்ட செயல் தேவை. படித்து முன்னேற உழைப்புத் தேவை. எனவே இது செயலால் ஆன உலகம்.

செயலற்ற செயல் என்றால் செயலைக் கடந்த - செயல் இல்லாத - நாம் எதையும் செய்யாமல் நிகழும் காரியம் என்பதுதான் அர்த்தம். செயலைக் கடந்து - சிந்தனையைக் கடந்து (சிந்தனையும் ஒரு செயல்தான்) செல்கிறோம் என்றால் எங்கே செல்கிறோம்?

பேரமைதி நிலைக்குச் செல்கிறோம். பரிபூரண மோன நிலை. எண்ணமற்ற நிலை. பிரபஞ்சத்தின் துவக்க நிலை. இதிலே என்ன அப்படி உயர்வு? பெருமை? உன்னதம்?

சிந்தனையற்ற பேரமைதி நிலையில் நாம் மூலத்துடன் ஒன்றுகிறோம். பரம் பொருள், கடவுள்,

இப்பிரபஞ்சத்தை இயக்கும் மாபெரும் சக்தி என்றெல்லாம் சொல்கிறோமே - அந்த மூலத்துடன் ஒன்றுகிறோம். அங்கே நிகழ்வதுதான் சப்தமில்லா சப்தம். பேச்சற்ற உபதேசம். ஞானம் பெற்ற மோன நிலை.

அங்கே அசைவு ஏற்பட்டபோதுதான் மேடு பள்ளம், என்ற இரட்டைத் தன்மை உருவாகியது; நாம் வாழும் பிரபஞ்சம் உருவாகியது என்று ஞானிகள் கூறுகிறார்கள்.

இதை அன்றாட வாழ்வில் நாம் உபயோகிக்க வேண்டுமெனில் மனத்தைப் பேரமைதி நிலைக்கு — பரம்பொருளுடன் அல்லது வெட்ட வெளியுடன் ஒன்றிய நிலைக்கு - ஒன்றுமில்லாத நிலைக்கு — மனத்தை எடுத்துச் செல்லுங்கள். அங்கே உங்கள் எண்ண விதையைப் போடுங்கள். அதனால் அசைவு ஏற்படுகிறது. நாம் விரும்பும் காரியம் சாதனையாக இவ்வுலகில் உருவாகிறது.

இதனால்தான் இவர்களைச் சித்தர்கள் என்கி றோம். நினைப்பதை நிகழ்த்துபவர்கள் என்கிறோம். நினைத்துப் பார்த்தால் இந்த சித்தர்கள், இல்லாத உலகை, இருக்கும் உலகிற்கு கொண்டுவந்து, நமது உடலைப்பற்றிய ஞானத்தை மூலிகைகள் மூலமும், உள்ளத்தைப் பற்றிய ஞானத்தை தியானம், யோகம் - யோக நூல்கள் மூலமும் தந்துவிட்டுப் போயிருக் கிறார்கள்.

ஞானி அவர்களின் கவிதையைப் பார்ப்போம்.

கவிதை

> *உனத்து உள்ளத்தையும் உடலையும் ஒன்றிணைத்து*
> *உன்னால் பிளவின்றி நிற்க முடியுமா?*
> *உன்உள் உணர்வுகளை சுத்தப்படுத்தும்போது*
> *அதில் கறை ஏதுமின்றி இருக்க முடியுமா உன்னால்?*
> *சொர்க்கத்தின் கதவுகளைத் திறக்கும் போதும் மூடும் போதும்*
> *பெண்மையின் தன்மையாய் நீ மாற முடியுமா?*
> *தெளிவாக எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளும்போது*
> *உன் தர்க்கவாத அறிவால் அதைப் பின்னப்படுத்தாமல் இருக்கமுடியுமா?*

என்று கேட்கிறார்.

'உள்ளமும் உடலும் ஒன்றிணைந்த நிலையில் இரு' எனும்போது அந்தப் பேரமைதி நிலையைக் குறிப்பிடு கிறார். 'மனத்துக் கண் மாசிலன் ஆதல்' என்று வள்ளுவர் கூறுகிறாரே அதையே "மனத்தைத் தூய்மையாக வைத்துக் கொள் கறை ஏதுமில்லாமல்" என்று சொல்கிறார். கடைசி வரிகளில் ஞானம் பெற்ற மோன நிலையில் 'உன் தர்க்க வாத அறிவால் அதை பிளவு படுத்தாதே' என்கிறார்.

எந்தப் பாடலிலுமே சொல்லாத ஒரு இங்கிதமான சிந்தனையை நம் முன் வைக்கிறார்.

உடலுறவின் இணைப்பில் - அந்த ஆனந்தத்தில் பெண்மையின் தன்மையை - பெண்மையின் செயலற்ற நிலையை - நீ உன் வாழ்வில் கொண்டுவர முடியுமா என்று கேட்கிறார்! இதைச் சொல்லுமுன் அவர் எவ்வளவு நாசுக்காக "சொர்க்கத்தின் கதவுகளைத்

திறக்கும் போதும் மூடும் போதும்” என்று சிற்றின்பத்தை வள்ளுவம் போல் கையாள்கிறார் என்பதைக் கவனியுங்கள்! உடலுறவில் பெண்மை செயல்படாமல் இல்லை. எனினும் செயலற்ற நிலை என்ற ஒன்று நிலவுகிறது! அந்தப் பெண்மையின் தன்மையை நமக்குத் தெளிவு படுத்துகிறார்! இவருக்கா வயது எண்பத்து ஐந்து? சே, இருக்காது! உடல் உறவில் விதைகள் எங்கே விதைக்கப்படுகின்றன? செயலற்ற செயலின் போது. அப்படியானால் நாம் எங்கே எண்ணங்களை விதைக்க வேண்டும்? செயலற்ற, செயலைக் கடந்த, சிந்தனையைக் கடந்த, பேரமைதி நிலையில், ஞானம் நிறைந்த மோன நிலையில்.

மற்றொன்றை மிக முக்கியமாக நாம் இங்கே சொல்ல வேண்டும். இந்திய மக்களாகிய நாம் எளிமையி லிருந்து வேறு எங்கோ போய்க் கொண்டிருக்கிறோம். எளிமைக்கு உதாரணமாக மகாத்மா காந்தியிலிருந்து, வினோபா பாவேயிலிருந்து எத்தனையோ காந்தீய வாதிகளை நாம் நம் கிராமங்களில் இன்றும் பார்க் கிறோம்.

இன்று நம் பண்பாடுகளுக்கு எதிராக வாழும் அரசியல் படாடோபங்களைப் பார்க்கிறோம். மேனாட்டு இசை என்ற பெயரில் கர்ண கடூரமான இசையில் காதைச் செவிடாக்கிக் கொள்ளும் இளைஞர்களைப் பார்க்கிறோம். ஆண் பெண் உடலுறவு என்பதும், பெண்மை என்பதும் உலகம் அறியாத ஒரு அதிசயம் என்று சொல்லி அதை வியாபாரமாக்கி வருகிறது பெரும் கும்பல்.

‘பணம் பணம்’ என்கிற வேட்கை மனிதனை மனிதத் தன்மையற்றவனாக மாற்றிக் கொண்டிருக்கிறது. விளம்பரங்கள் போடும் தூபம்! பணம் அதிகமாக, ஆக

தேவையற்ற பொருட்களை வாங்கும் மோகம்; காற்றையும் பூமியையும் பாழ்படுத்தும் பாபம் - இப்படித் தொடர்கிறது.

இவை அனைத்தையும் குறிப்பிடும் ஒரு பெயர்தான் (Consumerism) 'கன்சுமரிசம்' என்ற ஆங்கில வார்த்தை. அதாவது "தேவையோ, தேவையில்லையோ வாங்கு! ஆசையைத் தீர்த்துக் கொள்! வீணாக்கினால் பரவாயில்லை" என்ற ஒரு கேடு இன்று நாட்டைச் சூழ்ந்திருக்கிறது. இப்படிச் செல்லும் இன்றைய நாகரிக வாழ்க்கை, பிரபஞ்ச இயக்கத்தின் அடிப்படைகளை உணராத வாழ்க்கை மற்றும் சுயநலம்! "உனது சுகம், உனது ஆசை, உனது சௌகரியம், இதுதான் முக்கியம். உலகம் உனக்காகத்தான் படைக்கப்பட்டிருக்கிறது" என்ற சுயநல ஆணவ எண்ணங்களை வளர்க்கின்றன. போட்டியை உருவாக்கி அணு குண்டையும் விண்வெளியில் பாயும் ஆயுதங்களையும் உருவாக்கி வருகிறது. ஞானி லாட்சு சொல்கிறார்.

> "பேராசை அநாவசியச் செலவுகளில் முடிகிறது
> ஆசைகளின் பின்னால் ஓடாதே.
> எளிமையான வாழ்வுதான் இயற்கையுடன்
> இயைந்த வாழ்வு.
> எதையும் வீணாக்காதே - யாரையும் வீணாக்காதே
> பொருட்குவிப்பு திருடனை உருவாக்குகிறது."

தேவைக்கு மேல் சாப்பிட்டால் என்ன ஆகும்? - அஜீரணம்; வயிற்றுவலி. உடலுறவு இன்பம் தருகிறது என்று அதிலேயே ஒருவன் மூழ்குவானானால் என்ன ஆகும்? உடலிலுள்ள எல்லா உறுப்புக்களும் செயலிழக்கும். காற்றால் கார் புகையைப் பரவவிட்டால் என்ன ஆகும்? ஆஸ்த்மா மற்றும் நுரையீரல் வியாதிகள்

ரசாயன உரங்களை உபயோகித்துக் கொண்டே போனால் என்ன ஆகும்? விளைச்சல் குறைந்து கொண்டே வரும்.

இந்த பிரபஞ்சத்தில் உயிரற்றது - ஜடம் - என்ற ஏதுமில்லை. எல்லாவற்றிற்கும் உயிர் இருக்கிறது. அறிவு இருக்கிறது. இதுதான் இன்றைய விஞ்ஞான உண்மை. நாம் சூழ்நிலையை - இயற்கையை - பாதித்தால் சூழ்நிலை நம்மை பாதிக்கும்

இயற்கையுடன் ஒத்து வாழ் என்று இயல்பாக நம் முன்னோர்கள் வாழ்ந்தார்கள். தேவைக்கு மேல் உபயோகிக்க நமக்கு உரிமையில்லை. பிறருக்குத் தேவைப்படக் கூடிய பொருளை நாம் நமக்கு வேண்டும் என்று கூறி வீணாக்குவது விவேகமாகாது. அது நியாயமற்ற செயல்.

சொல்கிறார் ஞானி லாட்சு, "எதையும் வீணாக்காதே" என்று. அதற்கு மேலும் ஒருபடி சென்று "யாரையும் வீணாக்காதே" என்கிறார். வேட்டையாடு கிறேன், என் வீரத்தை காட்டுகிறேன் என்று புலியையும் கரடியையும் மானையும் கொல்கிறீர்களே, நீ எல்லோரையும் போன்ற மனிதனல்ல. புத்தி பேதலித்து விட்ட மனிதன். மற்ற ஜீவன்களை உயிருள்ள மற்ற ஆத்மாக்களாக பார்க்க முடியாத நிலையில் உன் புத்தி பேதலித்து விட்டது" என்று கடுமையாகச் சாடுகிறார்.

சொல்கிறார் ஞானி "எதையும் வீணாக்காதே. யாரையும் வீணாக்காதே!" என்று. நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வெள்ளைக்காரர்கள் வேட்டையாடுவதைப் பார்த்து 'நமக்கும் அந்தப் பெருமை வேண்டும்' என்று நமது நாட்டு ஜமீன்தார்களும் பணக்காரர்களும்

புலியின் தலையையும் மானின் தலையையும் வீட்டில் மாட்டி வைத்திருக்கிறார்களே, அதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

கோயில் யானை என்று சொல்லி, அதைக் கட்டி வைத்து, அதன் சுதந்திரத்தைப் பறித்து, அதைப் பிச்சை கேட்க ஊரறிய அழைத்துச் சென்று அவமானப்படுத்து கிறோமே, நாம் நம்முடையை மனச்சாட்சியைக் கேட்டுக் கொள்ளவேண்டும்.

எல்லோரிடம் அன்பும் கருணையும் காட்டும் ஆண்டவன். "யானையைக் கட்டிப் போடு! நான் அதன் மீது ஊர்வலம் வரவேண்டும்! அது எனக்கு கட்டியங்கூற வேண்டும்!" என்றா சொல்கிறான்? அப்படி மறந்தும் சொல்வானா?

ஓ ஆஸ்திகர்களே! ஒரு பக்கம் யானையை விநாயகராக, விக்னேஸ்வரராக, பிள்ளையாராக கொழுக்கட்டை செய்து திருப்திப்படுத்தும் நீங்கள் அந்த விநாயகர் உயிருடன் உருவமெடுத்து வரும்போது ஏன் இழிவு படுத்துகிறீர்கள்? எங்கே நியாயம்? என்று ஞானி லாட்சு கேட்காமல் கேட்கிறார்.

'தம்பி! மகளே! கேள்!

எதையும் வீணாக்காதே! யானையை வீணாக்காதே. மயிலை வீணாக்காதே. கரடியை, குரங்கை, மைனாவைப் பிச்சை எடுக்க வைக்காதே. பறவைகளைக் கூண்டிலடைத்துப் பிறர் துன்பத்தில் நீ இன்பம் அனுபவிக்க ஆசைப்படாதே! ஓ புத்தி பேதலித்தவனே!" என்கிறார்.

யாரையும் வீணாக்காதே என்னும் போது அடித்தள மக்கள் அறியாமையில் வாழ்கிறார்களே,

பிடிப்புமில்லாமல் பணமுமில்லாமல். 'அவர்களையும் சமூகத்தின் அங்கமாக்கு, வீணாக்காதே' என்கிறார்.

அதேசமயம் ஒரு புத்திசாலி, கெட்டிக்காரன் இருக்கிறான் என்றால் அவர்களால்தான் நாடு மேன்மையுறுகிறது. எனவே மற்றவர்களை உயர்த்துவதற் காக அவனைத் தாழ்த்தி, அவனைப் பயனற்றவனாக அடிக்காதே என்கிறார்.

"எப்படி பிறரைத் தாழ்த்துவதன் மூலம் மற்றவன் உயர முடியும் என்று எனக்குப் புரியவில்லை" என்று காந்தி தென்னாப்பிரிக்காவில் நடந்த இனக் கொடுமையைப் பற்றிச் சொன்னார்.

உலகிலேயே தொழில் நுட்பம் நிறையப் படித்த மக்கள் இந்தியாவில்தான் அதிகம் என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. ஏன் அவர்கள் வெளிநாடு செல்கிறார்கள்? ஏன் அவர்கள் திறமை இந்தியாவில் இருக்கும்போது வெளிவருவதில்லை? பணம் செல வழித்துப் படிக்க வைத்து, படித்தவர்களை நாம் வீணாக்குகிறோம் என்றால்.................. நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஒரு நாடு அதனுடைய புத்திசாலிகளாலும், அறிஞர்களாலும், ஞானிகளாலும், நிபுணர்களாலும் அல்லவா முன்னேறுகிறது; வளர்கிறது; மேன்மையுறு கிறது. இந்த சமுதாயம் இவர்களால் பயன்பெற அதற்கான வழிகளை அல்லவா கண்டுபிடிக்க வேண்டும்? படிக்க விரும்புபவர்களுக்குப் பள்ளியில் இடமில்லை; வேலைகளில் வாய்ப்பில்லை என்பது என்ன நியாயம்?

கேட்டார் மயிலாடு துறையின் சுவற்றிலே பொன் மொழிகளைத் தாரினால் எழுதிக் கொண்டிருந்த

சுப்பையா: ஆண்டவனே! சுமை அதிகமாயிருக்கிறதே என்று கவலைப்படவில்லை; முறையிடவில்லை. முதுகை அகலமாக்கித் தா என்றுதான் கேட்கிறேன்" என்று.

நம் சமுதாயம் நீதி நேர்மையின்பால் அக்கறை கொண்ட சமத்துவ நாடாக இருக்க வேண்டுமானால், ஜனநாயகம் என்ற பெயருக்கு உண்மையிலேயே அருகதை உடையதாக இருக்க வேண்டுமானால், நாம் நம் முதுகை அகலமாக்க வேண்டும். யாரையும் வீணாக்கக் கூடாது. சமுதாயத்தில் ஒவ்வொருவருக்கும் ஒரு பங்கு, ஒரு பணி, ஒரு இடம் இருக்கிறது.

வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்று அவர் சொல்லும்போது முதலில் நாம் வியப்படைகிறோம். பின் சிந்திக்கத் துவங்குகிறோம். "நல்லவனுக்கு நான் நல்லவன்" என்று துவங்குகிறார். உடனே நமக்கு சகஜமாக வரும் எண்ணம் அடுத்துச் சொல்லும் வார்த்தை " நான் பொல்லாதவனுக்கு பொல்லாதவன்" என்பதுதான்.

ஆனால் அவரோ

"நான் நல்லவனுக்கு நல்லவன்
பொல்லாதவர்களுக்கும் நான் நல்லவனே"

என்னும்போது ஒரு வித்தியாசமான பார்வையைக் காண்கிறோம். தன்னை வேறுபடுத்திக் கொள்கிறார். அதை அடுத்து ஒரு திகைப்பு. எப்படி நல்லவன் அல்லாத தீயவனுக்கும் நாம் நல்லவனாக இருக்க முடியும்?

ஆனால் கவிதையின் மூன்றாவது வரியில்

தீயவனுக்கும் ஏன் நல்லவனாய் இருக்க வேண்டும் என்பதன் காரணத்தைக் கூறுகிறார்.

"ஏனெனில் நல்லெண்ணம் சக்தி வாய்ந்தது" என்று முடிக்கிறார்.

நல்லெண்ணத்தை எந்தத் தீயசக்திகளும் சிதைத்து விட முடியாது. ஏனெனில் அதுதான் வெல்லும். நவகாளியில் உண்ணாவிரதமிருந்து பேசக்கூட இல்லாத நிலையில் நாட்டில் பிரிவினையின் காரணமாக நிகழ்ந்து கொண்டிருந்த, வன் முறையைக் கண்ட மகாத்மா காந்தி சொல்கிறார் ஈனஸ்வரத்தில்—

"உண்மை வெல்லும் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது" — அஹிம்சைதான் உண்மை; அன்புதான் உண்மை என்கிற அர்த்தத்தில்

"கட்டுண்டோம் பொறுத்திருப்போம்
காலம் மாறும்
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்"

என்கிறார் பாரதி.

ஞானி லாட்சு, புத்தர் பிறப்பதற்கு நூறாண்டு களுக்கு முன். வாழ்ந்தவர். ஞானி லாட்சு புத்தமதக் கொள்கைகளைப் படிக்கவில்லை. அதே போல புத்தரும் ஞானி லாட்சுவின் கருத்துக்களை அறிய வாய்ப்பில்லை. உலகின் பிரச்சினைகளுக்கு புத்தர் கண்டுபிடித்த எட்டு வழிப் பாதையான நல்லறிவு, நல்சிந்தனை, நல்வாக்கு, நல் செயல், நல்வாழ்வு, நல்முயற்சி, நல்கவனம், நல் உண்மை என்ற எல்லாமே நல்லெண்ணம் என்ற ஒரு சொல்லின் விரிவாக்கமே. அதைத்தான் ஞானி லாட்சு நல்லெண்ணம் மிகுந்த சக்தி வாய்ந்தது என்று கூறுகிறார் ஒருவரியில்.

பரிணாம வளர்ச்சி (Evolution) என்று சார்ல்ஸ் டார்வின் கண்டுபிடித்துக் கூறினார் "எது தகுதி உள்ளதோ அது ஜீவிக்கிறது, வாழ்கிறது" என்று (Survival

of the fittest). ஆனால் உண்மையில் டார்வின் கொள்கையைக் கடந்த கொள்கையான நல்லெண்ணங்கள்தான் உலகை மேன்மைப்படுத்துகின்றன. எனவே பரிணாம வளர்ச்சி என்ற முன்னேற்றம் நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் ஏற்படுகிறது. ஏனெனில், என்ன தகுதி வாய்ந்ததாக இருந்தாலும் - வலிமை, வியூகம், சமயோசித புத்தி, தர்க்கவாத அறிவு என்று எது இருந்தாலும் - அவை தீமைக்குத் துணை போகும்போது ஒரு நாளும் வெற்றி பெற முடியாது. சமுதாயம் மேன்மையுறாது. பரிணாம வளர்ச்சி தகுதியை - வாழும் திறமையை - நோக்கி செல்வது அல்ல; அது நல்லெண்ணத்தை நோக்கித் தான் நகர்கிறது, நடைபெறுகிறது என்பதுதான் உண்மை. நல்லெண்ணம் சக்தி மிகுந்ததாய் இருப்பதனால்தான் மனித இனத்தை மேலும் மேலும் உயர்ந்த நிலைக்குப் பரிணாம வளர்ச்சி அழைத்துச் செல்கிறது. வாழ்க்கை தேவனாகும் முயற்சி என்று அடிக்கடிக் குறிப்பிடுகிறோமே அந்த நிலைதான் மானுட வாழ்வின் லட்சியம்.

அடுத்து அவர் கூறும் மற்றொரு கருத்து நம் கண்களை அகல விரிய வைக்கிறது.

> *"வளர்ந்த மனிதர்கள் திறந்த மனத்தோடு எதையும் பார்க்கிறார்கள்*
>
> *குழந்தைகள் போல."*

அன்றாட வாழ்வில் பல பிரச்சினைகளையும் பல நிகழ்ச்சிகளையும் நாம் எப்படி அணுகுகிறோம்? நமக்குத் தெரிந்த அளவில்; நம் அறிவுக்கும் அனுபவத்திற்கும் ஏற்ப. ஒரு மனிதரைப் பற்றியோ ஒரு சம்பவத்தைப் பற்றியோ ஒரு முடிவுக்கு வருகிறோம். பிறகு அதைப்பற்றி மீண்டும் மீண்டும் சிந்திக்கும்போது அந்த நம் எண்ணம் வலுப்படுகிறது.

இதனால் நம்மால் மாறுபட்ட கருத்துக்களை உடனடியாக ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. ஒரு சம்பவத்தின் உண்மையை நம்மால் பார்க்க முடிவ தில்லை. அதாவது பொதுவாக நாம் திறந்த மனத்துடன் எதையும் அணுகுவதில்லை. இதனால் எனக்கு என்ன பயன் என்றோ இதன் உள் நோக்கம் என்ன என்றோ நாம் சிந்திக்கிறோம். இந்த எண்ணம்தான் முந்துகிறது.

நாம் எண்ணியிருப்பது தவறு என்று நன்றாக நமக்குப் புரியும்போது கூட நமது ஆணவமும், தற்பெருமையும், சுயநலமும் அதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. யோசித்துப் பார்த்தோமானால் திறந்த மனமும் தவறைத் திருத்திக் கொள்ளும் மனப் பக்குவமும் இல்லாததனால்தான் பல பிரச்சினைகளும், சச்சரவுகளும், மனஸ்தாபங்களும், வன்முறையும் போரும் நிகழ்கின்றன ஞானி சொல்கிறார்: "திறந்த மனத்துடன் அணுகுங்கள் - குழந்தைகள் போல - கள்ளங்கபடின்றி." அவை இரண்டும் அடி நீரோட்ட மாய் கலந்து ஓடும்போது அவை நம்மைக் கைவிடுவ தில்லை. அது நமக்கு வாழ்வு தருகிறது.

மகிழ்வுடன் இனிமையுடன் வாழ்வதன் அடிப்படையே திறந்தமனமும், தவற்றினை ஏற்றுக் கொண்டு தன்னைத் திருத்திக் கொள்வதில்தான் இருக்கிறது. அவர்களை 'வளர்ந்தவர்கள்', பக்குவப்பட்ட வர்கள் என்கிறார் மற்றோர் கவிதையில். மேலே நாம் குறிப்பிட்ட 'கலவை'யைக் குறிப்பிடுகிறார்.

ஆண் தன்மையை அறிந்து கொள்ளுங்கள்
பெண் தன்மை கையில் இருக்கட்டும்
உலகின் அடி நீரோட்டம் அதுதான்

பெண்களுக்கென்று சில சிறப்பான குணங்கள் இருக்கின்றன. அவர்களுக்கே உரித்தான அல்லது ஆண்களைவிட மேம்பட்ட நிலையில் சில குணங்கள் இருக்கின்றன.

அவை: உள்ளுணர்வு - மன ஒருமைப்பாடு, ஒரே விஷயத்தில் கவனம் செலுத்தும் இயல்பு, மூன்றாவதாக வைராக்யம். கற்பு என்று சொல்லலாம். விரதம், நோன்பு, உபவாசம் என்று ஒரு காரியத்தை அதே நினைவாக இருந்து செய்து முடிக்கும் திறனை வளர்க்கிறார்கள். நான்காவதாக: தாய்மை, ஒரு குழந்தையை சுமந்து பெற்று, பாலூட்டி, சீராட்டி வளர்க்கும் வாய்ப்பு பெண்களுக்கே உண்டு. இந்த தாய்மை குணம் பெண் களுக்கே அதிகம் உள்ள ஒரு குணம்.

உள்ளுணர்வு (Intuition) என்பது சாதாரணமான விஷயமல்ல. பிரச்சினைக்கு முடிவு காணும் வழி காரண காரியம் காட்டும் தர்க்கவாத அறிவு (பகுத்தறிவு) ஒன்று. மற்றொன்று காரண காரியத்தைக் கடந்து "எனக்கு இப்படித்தான் படுகிறது" என்று சொல்லும் திறன்.

அமெரிக்கா நாட்டில் வெற்றி பெற்ற தொழிலதிபர்களை அவர்களது வெற்றிக்குக் காரணம் என்ன என்று கேட்ட போது அவர்கள் (90 சதவிகிதம்) தங்களது உள்ளுணர்வு தந்த முடிவின்படிச் செயல் பட்டது தான் காரணம் என்றார்கள். இதே போன்று பெண்களிடம் மேவி நிற்கும் மன ஒருமைப்பாடு, வைராக்யம், தாய்மை இவைபற்றியும் நிறையச் சொல்லலாம்.

ஆண் தன்மையை அறிந்து கொள்ளுங்கள்.

பெண் தன்மை கையிலிருக்கட்டும். இது சமயத்தில் தேவைப்படும். அப்போது இதைத்தான் உபயோகிக்க

வேண்டும் என்று சொல்லும் லாட்சு உலகின் அடி நீரோட்டம் இந்த இரண்டும் கலந்த கலவைதான் என்று தன் முத்திரையைக் குத்துகிறார்.

இந்தியத் திருநாட்டில் நமது பெண்களின் நிலை என்ன ? பெண் சமுதாயம் எப்படி நடத்தப்படுகிறது ?

பெண் என்பவள் வீடு நிலம் கார் என்பவற்றைக் கருதுவதுபோல தனக்கே உரிமையுள்ள ஒரு பொருளாகத்தான் (Property) கருதப்பட்டாள்; இன்றும் இன்னமும் கருதப்படுகிறாள். தன் காலிலே நிற்கும் பொருளாதார சுதந்திரம் – தனக்கென்று ஒரு சம்பாத்தியம் – உள்ளவர்கள் ஓரளவு சுதந்திரம் பெறலாம். இந்த அடிப்படை அவசியமான ஒன்றாக வளரும்போதுதான் பெண்கள் சம உரிமை பெறுவார்கள். பெண் சிசுக் கொலை, வரதட்சணைக் கொலை, குடிகாரனான கணவன் செய்யும் கொலை, குடும்ப நிலை தாங்காமல் பெண்கள் தற்கொலை, பெண் கற்பழிப்பும் கொலையும் என்று பட்டியல் நீள்கிறது. எங்கே இருக்கிறது சமத்துவ சமுதாயம் ? என்று போவது இந்த சமத்துவ நிலைக்கு அருகே? பெண்கள் சமுதாயத்தின் தனித் தன்மைகளை எல்லாம் பூரணமாக பயன்படுத்திக் கொள்ளும்போதுதான் ஒரு சமுதாயம் உயரும். “உலகின் அடி நீரோட்டம் இது” என்று சொல்லும் லாட்சு,

“இந்த இரண்டின் கலவையால்
உலக அமைப்புக்கள் உருவாகும்போது
அங்கே எழும் அழகின் சக்தியில்
மனிதன் பிரபஞ்சத்தின்
எல்லை காணா நிலையை உணர்கிறான்”

என்று தனிமனித வாழ்க்கையைப் பற்றிக் கூறுகிறார். குடும்பத்தை நிலைநிறுத்தும் உறவின் மென்மையைப் பற்றி "மென்மை வெல்லும் வலிமையை" என்று எழுதுகிறார். ஒரு நிறுவனத்தை நடத்தத் தேவைப்படும் நிர்வாகக் கலையிலிருந்து, ஒரு பேரரசை நடத்தத் தேவைப்படும் வியூகங்கள் வரை விளக்குகிறார்.

அவர் சொல்லும் அறிவுரைகளுக்கு அவரே உதாரணமாக வாழ்ந்திருக்கிறார். ஒரு எல்லைக் காவலருக்கு மதிப்பளிப்பதிலிருந்து ஐந்து சக்கரவர்த்தி களுக்கு ஆலோசனை கூறும் பொறுப்பில் இருந்தவர் அவர்.

தத்துவ ஞானி கன்பூஷியசே கண்டு ஆச்சரியப் படும்படி வாழ்வின் — இப்பிரபஞ்சத்தின் — ஆன்மீக அடிப்படைகளை எல்லாம் எப்படிக் கண்டுபிடித்தார்? இந்த ஆன்மீக அடிப்படைகளை மறை ஞானம் என்பார்கள். அதாவது மறைந்து கிடக்கும் உண்மைகள் - மறைந்து இயங்கும் தெய்வீக நியதிகள் - இவற்றை எல்லாம் எப்படிக் கண்டுபிடித்தார் ஞானி?

அவரே சொல்கிறார்:

"மனிதன் தன் அகக்கண் மூலம் பார்க்கிறான்; உள் உணர்வின் மூலம் உண்மைகளை அறிந்து கொள்கிறான்" என்று எழுதுகிறார். மற்றோரிடத்தில், வரிசையாக பல உண்மைகளை எழுதும்போது தானே ஒரு கேள்வியை எழுப்புகிறார். அதற்கான பதிலையும் அடுத்த வரியில் வெளியிடுகிறார்.

"இதை எல்லாம் நான் எப்படி அறிந்தேன்?"

பதிலாக "இப்படித்தான்!"

மேலே "எப்படி அறிந்தேன்?" என்று கேள்வி கேட்டேன் அல்லவா? அப்படிக் கேள்வி கேட்டுச் சிந்தித்துச் சிந்தித்துப் பதில் பெற்றேன் என்கிறார்.

ஒரு பொருளைப் பற்றித் தீவிரமாக சிந்திக்கும் போது நாம் அதனுடன் ஒன்றி விடுகிறோம். நாம் அதுவாகி விடுகிறோம். நடிக்கும் ஒரு நடிகன் தானே கதாபாத்திரமாக மாறிவிடுவது போல 'அவன் அதுவாகிப் போகிறான்!' என்பதைத்தான் **தத்துவ மசி** என்ற உபநிடத வாசகம் கூறுகிறது.

அப்படி "ஒன்றுடன் ஒன்றிப் போகும்போது பார்க்கப்படும் பொருள் தன்னைப் பூரணமாக வெளிப் படுத்திக் கொள்கிறது" என்று ஸ்ரீ அரவிந்த அன்னை கூறுகிறார். உபநிடதம் கூறுவதும் அதுவே.

யோசித்துப் பார்த்தோமானால் விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்கள் எல்லாம் இப்படி அதே விஷயத்தைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பதன் மூலம்தான் கண்டுபிடிக்கப்படுகின்றன என்பது தெரிய வரும்.

இதை இன்னும் அழகாகக் காஞ்சிப் பெரியவர் "தெய்வத்தின் குரல்" நூலில் கூறுகிறார்.

சீடன் குருவைக் கேட்கிறான்.

சீடன் :"கிம் சம்சாரம் சாரம்?" [சம்சார வாழ்க்கையின் அர்த்தம் – அதன் சாரம், லட்சியம் என்ன?

குரு : "அதே தான்."

சீடன் : "எதே தான்?"

குரு : "நீ இப்போது கேட்டாயே அதை அப்படியே கேட்டுக் கொண்டே இரு. [கிடைக்கும் பதில்]

என்று எழுதுகிறார்.

ஞானி லாட்சு தான் கூறும் உண்மைகளுடன், தத்துவங்களுடன், அனுபவங்களுடன் ஒன்றிப் போய்

விடுகிறார். அதன் விளைவாக, உள்ளதை உள்ளபடி அறியும் அறிவு ஏற்படுகிறது. அதைத்தான் ஞானம் என்கிறோம். அதனால்தான் அவரை ஞானி லாட்சு என்று அழைக்கிறோம்.

டௌ என்பதைப் பற்றி எழுதுகிறார் என்றால் டௌ எனப்படும் அந்த மூலத்துடன் ஒன்றிப் போனதனால்தான் அதைப் பற்றி அவர் கூற முடிகிறது. மூலத்துடன் ஒன்றிய ஞானி அவர்.

சில உண்மைகளைக் கூறி நம்மைச் சிந்திக்க வைக்கிறார்:

"உற்பத்தி செய்; உரிமை கொண்டாடாதே.

அடைந்து அனுபவி; ஆதிக்கம் செலுத்தாதே

அணைத்து வளர்; ஆணையிடாதே.

இதுதான் மறை ஞானம். மறைந்திருக்கும் ஞானம்."

தர்க்கவாத அறிவு ஓரளவுதான் உபயோகப்படும் அதற்குமேல் உள்ளுணர்வைத் தொடு. மூலத்துடன் தொடர்புகொள். அது உனக்கு வழிகாட்டும். இப்படிப் பட்ட மறை ஞானம் ஏராளமாக மறைந்து கிடக்கின்றது கவிதைகளில்.

உள்ளே செல்லுங்கள்.

ஒரு முறைக்கு இருமுறை, பலமுறை படியுங்கள்.

மறைந்து கிடக்கும் நியாயங்களை நீங்களே கண்டு பிடித்து ஆனந்தப்படுவீர்கள். அந்த ஆனந்தமே தனி. கண்டுபிடித்ததைக் கடைப்பிடியுங்கள். உயர் மனிதன் உருவாவான். உங்களைப் போன்ற உயர் மனிதர்கள் உருவாகும்போது ஒரு உயர் சமுதாயம் தானே உருவாகும்.

சகபயணி எம்.எஸ். உதயமூர்த்தி

சென்னை 41
ஏப்ரல் 8, 2001

என்னுரை

உள்ளே போகுமுன் ஒரு சில வார்த்தைகள்

ஞானி லாட்சுவின் கவிதைகள் ஆழம் நிறைந்தவை. கற்பனையைத் தூண்டுபவை; நம்மைச் சிந்திக்க வைப்பவை. புரிந்து கொண்ட மனிதனை மகிழ வைப்பவை. புதிய கருத்துக்களையும் வாழ்வின் நுட்பமான உண்மைகளையும் காட்டி நம்மை பிரமிக்க வைப்பவை.

ஞானி லாட்சு தன் கவிதைகளிலே தனி மனித வாழ்வைப் பார்க்கிறார்; சமுதாய வாழ்வை ஆராய் கிறார். ஆள்பவர்களுக்கு வேண்டிய குணங்களை பதியுமாறு தெளிவுபடுத்துகிறார். அதனால் தான் இன்று அமெரிக்க தொழில் நிறுவனங்கள், அவருடைய நிர்வாக கருத்துக்களுக்காக, நிர்வாகத்தின் நுட்பமான விஷயங் களுக்காக அவரைப் போற்றுகிறார்கள். அதுபற்றிப் பல புத்தகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அத்துடன் இந்த பிரபஞ்ச இயக்கத்தையும் அதன் ஆற்றலையும் கண்டு அதிசயிக்கிறார். அவற்றை அன்றாட வாழ்வில் கொண்டுவந்து நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தைச் சொல்லாமல் சொல்கிறார். எல்லா வற்றிற்கும் மேலாக, தனிமனிதனுக்கும், சமுதாயத்திற் கும், ஆட்சி செய்வோருக்கும், நிர்வாகத்திற்கும் வேண்டிய உயர் குணங்களை, லட்சிய குணங்களை வெகு எளிதாகப் புலப்படுத்துகிறார்.

இந்த பிரபஞ்ச இயக்கம் ஜடம் போன்றோ அல்லது யந்திரம் போன்றோ செயல்படுவதல்ல.

எல்லாம் ஒரு லயத்தில் செயல்படுகின்றன. அப்படித் தான் வாழ்க்கை ஒரு லயத்தில் செல்ல வேண்டும். அப்போது வாழ்வு அர்த்தம் நிறைந்ததாகவும் முன்னேற்றம் கொண்டதாகவும், இனிமை நிறைந்த தாகவும் இருக்கும்.

அப்படிப்பட்ட குணங்களை விவரித்து அவர் களை வளர்ந்தவர்கள் என்கிறார். அப்படிப்பட்ட சமுதாயம் நடந்து கொள்ளும் விதி முறைகளை விளக்கி இதுதான் சொர்க்க லோகம் என்கிறார்.

வாழ்வின் இரட்டைத் தன்மையை எந்த நாட்டு வேத நூல்களைவிட, இலக்கிய கலாசார நூல்களைவிட சீன சமுதாயம்தான் அதை யின் என்றும் யாங் என்றும் பெயர் கொடுத்து மிக விரிவாக விளக்கி இருக்கிறது.

Duality எனப்படும் இரட்டைத் தன்மையின் உதாரணங்கள்தான் இருள் ஒளி, இளமை, முதுமை, பகல் இரவு, இன்ப துன்பம், லாப நஷ்டம், நன்மை தீமை, மேடு பள்ளம் நீர் நெருப்பு, நேர் மின்சாரம் எதிர் மின்சாரம், வடதுருவம் தென் துருவம், ஆண் பெண், திடம் – மென்மை, வெற்றி தோல்வி என்று இந்த இரட்டைத் தன்மைதான் வாழ்வில் எங்கும் வருகிறது.

துன்பம், தவிப்பு, ஏமாற்றம், நஷ்டம், நோய், பலவீனம், தோல்வி என்று இவற்றைக் கண்டுதான் மனிதன் பயப்படுகிறான்.

ஒரு வட்டப் பாதையில் இவை இருப்பதால் இன்பமும் துன்பமும் மாறி மாறித்தான் வரும். ஒரு காந்தக் கட்டையின் வட துருவத்தையும் தென் துருவத்தையும் நாம் தனித் தனியே பிரித்தெடுக்க முடியாது. துன்பம் வரும்போது இதுவரத்தான் வரும், இது உலக இயற்கை என்ற எதிர்பார்ப்புடன் நடந்து

கொண்டோமானால் அஞ்சத் தேவையில்லை. துன்பமானவை இன்பத்தை நோக்கித்தான் நடைபோடு கின்றன என்றோ அல்லது துன்பம் என்பது வேஷம் போட்டுக் கொண்ட நன்மை என்றோ உணர்ந்து கொண்டோமானால் நாம் துன்பத்தைச் சமாளித்து விடலாம். எல்லாம் எப்படிப் பார்க்கிறோம், எப்படி எடுத்துக் கொள்கிறோம், என்ன மனோபாவத்துடன் அணுகுகிறோம் என்பதைப் பொறுத்தது.

கொஞ்சம் மாற்றி நாம் பார்க்கும் விதத்தை ஆராய்ந்தால் போதும். வாழ்வில் ஆண்தான் வேண்டும் என்றோ பெண்தான் வேண்டும் என்றோ கூறுவதில்லை. இரண்டும் தேவை. எனவே வருகின்ற துன்பங்கள் எல்லாம் நாம் முன்னேற வந்த படிப்பினைகள் என்கிறார்கள் ஞானிகள்.

இதைவிட முக்கியமான விஷயம் ஒன்றை ஞானி லாட்சு கூறுகிறார். வாழ்வில் எப்போதும், எந்த மறுகோடிக்கும் போகாதீர்கள். உணவு என்றால் ஒருமிதமான அளவு. தேவை - ஆசை என்றிருந்தால் கூடுமானவரை தேவையுடன் நிறுத்திக் கொள்ளுங்கள். வேறு வார்த்தைகளிலே சொன்னால் மிதம் இதம்; ஒரு நடுநிலையில் நிற்கப் பழகுங்கள் என்கிறார். ஒரு சம நிலை பற்றிப் பல இடங்களில் குறிப்பிடுகிறார் லாட்சு.

சமநிலை வாழ்வே யோகம் என்பது பகவத் கீதை. வாழ்வில் நாம் சம பாவனையுடன் நிற்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

“நமது அரசியல் சாசனம் We the people என்று ஆரம்பிக்கிறது. இந்நாட்டு மக்களாகிய நாம் ---- என்று துவங்கும்போது, அது இந்த நாட்டின் மிகப் பெரிய பணக்காரர்களையும், மிகவும் தாழ்ந்த ஏழையையும்

ஒன்றாக, சமமாகப் பாவித்து, எல்லோரும் மகிழ்வுடன் வாழும் ஒரு நாட்டை உருவாக்கும் உள்ளர்த்தம் அதில் அடங்கி இருக்கிறது" என்கிறார் முன்னாள் நீதிபதி வி.ஆர். கிருஷ்ண ஐயர்.

உயர் லட்சியங்கள்தான் வாழ்வின் உரைகல். அப்போதுதான் அதில் நாம் நம் வாழ்வை உரைத்துப் பார்த்து நம்மை நாமே சரிப்படுத்திக் கொள்ள முடியும். அதனால்தான் ஞானி லாட்சு நமக்குத் தேவைப் படுகிறார்.

இப்படி தான் பெற்ற தெளிவுகளை மறை பொருளாகப் பல இடங்களில் நம் முன் வைக்கிறார். இதனால்தான் இவருடைய கவிதைகள் வாழ்வின் பல கட்டங்களிலும், எல்லா இடத்திற்கும், எல்லா நிர்வாகத்திற்கும் பொதுவாக இருக்கின்றன. ஒவ்வொரு துறைக்கும் பாடம் போதிப்பவையாக உபயோகமான தாக இருக்கின்றது. அப்படி இதன் பொருத்தம் மறைந்து கிடக்கிறது. அதுமட்டுமல்ல அவர் சொல்கிற புதிய புதிய பல கருத்துக்கள் இதுவரை வெளிவராதவை; யாராலும் சொல்லப்படவில்லை. உதாரணமாக, "இருப்பதை வைத்துக் கொண்டு இல்லாததை உபயோகி" என்பதா கட்டும், "செயலற்ற செயல்" என்பதாகட்டும் அப்படிப் பட்ட புதிய கருத்துக்கள்தான்.

அழகு மறைந்திருக்கும்போதுதான் அதை அறியும் ஆர்வம் நம்மிடம் கூடுகிறது. சிதம்பர ரகசியத்தின் முன் திரை போடப்பட்டிருப்பதனால்தான், அதை ஆரா தனையின்போது ஆவலுடன் பார்க்கக் காத்திருக் கிறோம்.

அந்த அழகு அல்லது ரகசியம் வெளிப்படும்போது நமக்கு முதலில் பிரமிப்பு ஏற்படுகிறது. நம்முள்ளே புதிய

புதிய கற்பனைகள் கண்டுபிடிப்புக்கள் தோன்றுகின்றன. அந்த அனுபவத்தை லாட்சுவின் கவிதைகள் நமக்குத் தருகின்றன. கவிஞர்கள் கட்டுரையாளர்களல்ல! எதற்கும் உவமை காட்டி மறைத்துச் சொல்பவர்கள். நம்மைச் சிந்திக்க வைப்பவர்கள். அதை நிறையச் செய்கிறார் லாட்சு!

கவிதைகளை ஒரே மூச்சில் படித்துவிட முடியாது; பிடித்துவிடவும் கூடாது!

காலைக் காப்பியை ரசித்துக் குடிக்கலாம்; அல்லது விழுங்கலாம்! அதை முணர் முணராக வாங்கி அதன் மணத்தை ரசிக்க வேண்டும்; அதன் கசப்பை அனுபவிக்க வேண்டும்; அதன் சூட்டை உணர்ந்து புல்லரிக்க வேண்டும். அதில் மறைந்து கிடக்கும் இனிப்பைக் கண்டுகொள்ள வேண்டும். அதன் மொத்தத்தையும் உதடுகளும், வாயும், நாக்கும் தொண்டைவரை அனுபவிக்கின்றன. அதன் முழு பரிணாமமும் நம்மை மெய் சிலிர்க்க வைக்கின்றன. கல்கி அவர்களின் வார்த்தைகளில் 'பேஷ் பேஷ்!' என்று வாயும் மனமும் முகமும் உச்சரிக்கும்.

'அடாடா! அத்தனை விஷயமா?' என்று நம்மை ஒன்றன்பின் ஒன்றாக கண்டுபிடிக்க வைக்கிறார் லாட்சு. அடாடா! இவ்வளவு நுட்பமான கருத்துக்களா? இதைப் புரிந்து கொள்ள என்ன பாக்கியம் செய்தேன் என்ற ஒரு சிலிர்ப்பு.

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண்
சிரிப்பும்
– – – – காண –
மனித்தப்பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே"

என்று திருநாவுக்கரசர் தில்லை நடராசரைப் பற்றிப் பாடுகிறார். அதுபோல திருக்குறளின் மேன்மையையும் திருமூலரின் தெளிவையும் ஞானி லாட்சுவின் புதிர்களையும் ஆழத்தையும் பார்க்கும்போது நாமும் நம்மை மீறிக் கூறுகிறோம், மனித்தபிறவியும் வேண்டு வதே இந்த மாநிலத்தே என்று.

கவிதைகளை நிதானமாகப் படியுங்கள். என்ன சொல்கிறார் என்பதை அறிய விளக்கத்தைப் படியுங்கள் அடுத்து. பிறகு ஒருமுறை அல்லது இருமுறை அந்தக் கவிதையை மீண்டும் படியுங்கள்.

படிக்கும்போது நாம் மகிழ்கிறோம். சில சமயம் ஆச்சரியப்படுகிறோம். சிலசமயம் பொறியில் தட்டினாற் போல உடலும் உள்ளமும் சிலிர்த்துப் போகிறோம்.

இதை முதன் முதலில் ஒரு இருபது ஆண்டுகளுக்கு முன் நான் படித்தபோது இந்த கவிதைகளுக்கு விளக்கம் கூறி வெளிவந்த புத்தகங்கள் ஒரு மூன்று அல்லது நான்கு இருக்கலாம். ஆனால் கடந்த 15 ஆண்டுகளில் நூற்றுக் கணக்கான புத்தகங்கள் வெவ்வேறு துறை நிபுணர் களால் எழுதப்பட்டு வெளி வந்திருக்கின்றன.

நான் இதைப் பல ஆண்டுகளாகப் படித்து ரசித்தேன். திருக்குறள் போல, சிலப்பதிகாரம் போல. இது மொழி பெயர்க்கப்பட்டால் பலருக்கும் பயன் தருமே என்ற எண்ணம் இருந்தும் ஞானி லாட்சுவை மொழி பெயர்த்து அவரைப் பூரணமாக வெளிப்படுத்த முடியுமா என்ற பயமும் சந்தேகமும் இருந்தது.

பல ஆண்டுகளில் இதை மூன்று முறை தமிழில் மொழி பெயர்ந்து விளக்கங்களையும் எழுதினேன்.

எழுதி அதைப் படித்தபோதும் வாசகர்கள் புரிந்து கொள்வார்களா என்ற சந்தேகம் இருந்தது பலமாக.

ஆனால் அதையும் மீறி அன்று ஆனந்த விகடனில் பொறுப்பாசிரியராக இருந்த ராவ் அவர்களிடமும் விகடன் நிர்வாக ஆசிரியரான திரு. பாலன் அவர்களிடமும் கொடுத்தேன்.

அவர்களிடம் என் சந்தேகத்தையும் தயக்கத்தையும் கூறியபோது பதிலாகச் சொன்ன வார்த்தைகள் என்னைக் கிறுகிறுக்க வைத்தன!

“நாம் நம் வாசகர்களை அடுத்த கட்டத்திற்கும் அழைத்துச் செல்ல வேண்டாமா?” என்ற கேள்விதான் அது! வாசகர்கள் கேட்பதைக் கொடுப்போம்! அவர்களுடைய ஆசைகளைப் பூர்த்தி செய்வோம் என்னும் உலகில் இப்படி ஒரு மனிதர். அவர்களை மேலே அடுத்த கட்டத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டாமா என்று கேட்பவர்!

நான் வாயடைத்துப் போனேன்! இந்தக் கவிதைகள் வைரங்களாலும், மரகதங்களாலும், மாணிக்கக் கற்களாலும் ஆக்கப்பட்ட ஆபரணங்கள். அவற்றைக் கையிலெடுங்கள். கழுத்தில் அணியுங்கள். கண்ணாடி முன் நின்று பாருங்கள். ஆகா என்ன ஒளி! என்ன அழகு! என்ன மின்னல்கள், வர்ண ஜாலங்கள்!

வானிலிருந்து இறங்கிய தேவன் போல, தேவதை போல அல்லவா ஜொலிக்கிறீர்கள். ஆம்! வாழ்க்கை தேவனாகும் முயற்சிதான்!

சகபயணி – எம்.எஸ். உதயமூர்த்தி

சென்னை 41
ஏப்ரல் 8.2001

பொருளடக்கம்

1

வாழ்க்கை வெளிச்சம்



ஒரு வயோதிகர். 160 வயது வாழ்ந்ததாகச் சொல் கிறார்கள். நீண்டு வளர்ந்த தாடி. எருமை மாட்டின் மீதேறிக் கோட்டையின் வாயிலை, ஊரின் எல்லையைக் கடந்துகொண்டிருக்கிறார். உற்றுப்பார்க்கிறார் காவல் காரர்

'அடடா! நமது அரச பரம்பரைக்கே ஆலோசக ராக, அமைச்சராக இருந்த ஞானி லாட்சு அல்லவா போய்க் கொண்டிருக்கிறார்!' என்ற எண்ணம் மேலிடக் கேட்கிறார்...

"ஞானி அவர்களே! எங்கே செல்கிறீர்கள்... இப்படி ஊரைவிட்டு...?"

"தனிமையை நாடிக் காட்டுக்குச் செல்கிறேன். எல்லா சீனச் சக்ரவர்த்திகளுக்கும் அமைச்சராக இருந் தாகிவிட்டது. எல்லாம் பார்த்தாகிவிட்டது... போதும்!"

"அப்படிச் சொல்லலாமா நீங்கள்..? உங்கள் ஞானம் என்ன... அனுபவம் என்ன... அத்தனையும் வீணாவதா...? நாட்டுக்குப் பயன்படவேண்டாமா...?" என்று பதைக்கிறார் காவல்காரர்.

இதன் விளைவாக, ஞானி லாட்சு தனது வாழ்க்கை அனுபவத்தை எல்லாம் 81 பாடல்களில் எழுதுகிறார். அந்தக் கவிதைகள்தான் ஞானி லாட்சுவின் ஆழமான, நுட்பமான உலக ஞானத்தை சாஸ்வதமாக இன்னும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

லாட்சு, கி.மு 604ஆம் ஆண்டில் வாழ்ந்தவர். கன்பூசியஸ் இவருக்கு வயதில் கொஞ்சம் மூத்தவர். ஆனால், இருவரும் சம காலத்தவர்கள்.

இவர்கள் விளக்கிய மாபெரும் இறைத்தத்துவம் 'டவ்' (TAO) என்ற பெயரால் அழைக்கப்பட்டது. இன்று டவ் என்ற வார்த்தை, சீன மொழியின் மிகப்பெரிய தத்துவத்தை விளக்க உபயோகிக்கப்படும் ஒரு வார்த்தையாகிவிட்டது. இதன் விளைவாக உறவும் 'டவ்'வும், நிர்வாகமும் 'டவ்'வும், நிரந்தர உண்மைகளும் 'டவ்'வும், 'டவ்' காட்டும் உலக ஞானம் என்று பல்வேறு தலைப்புகளில் இருபதுக்கும் மேற்பட்ட ஆராய்ச்சி நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன!

என்ன காரணம், இப்படிப் பல நூல்கள் வெளிவர..? 'டவ்' தத்துவத்தை முன்நிறுத்தி லாட்சு எழுதியுள்ள பாடல்களையும் வரிகளையும் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் நாம் உபயோகிக்கலாம். எல்லாவற்றுக்கும் பொருந்துகிறாற்போல, அவ்வளவு ஞான விளக்கங்களுக்கு இடமளிக்கிறது.

கடந்த பதினைந்து ஆண்டுகளாக அமெரிக்க நாட்டில் ஒரு புதிய உச்சகட்ட வரவேற்பைப் பெற்று இருக்கிறது. 2,600 ஆண்டுகளுக்கு முன் — புத்தர் பிறப்பதற்கு முன் — எழுதப்பட்ட 81 பாடல்கள் இன்று உலக இலக்கியமாக, வாழ்க்கை இலக்கியமாகப் போற்றப்படுகின்றன. நாட்டை ஆளும் தலைவர்களுக்



கும் தொழில் நிர்வாகிகளுக்கும் பொறியில் தட்டும், கண்களைத் திறக்கும், கையேடாகப் பயன்படுகின்றன.

திருக்குறள் எப்படித் தனித் தன்மை பெற்றிருக்கிறதோ — இன்னொன்றிலிருந்து உருவாகாத தன்மை கொண்டதோ — இதுவரை வெளிவராத வாழ்க்கை

விளக்கமோ, அதுபோல இந்தத் தனித்தன்மை வாய்ந்த நூல்களை உலகம் போற்றுகிறது.

நாடகத்தைவிட பெர்னாட்ஷா எழுதும் முன்னுரையின் நீளம் அதிகமாக இருக்கும். அதுபோல இந்த 81 பாடல்களுக்குப் பலரும் எழுதிய முன்னுரைகள், விளக்கங்கள் இந்தப் பாடல்களின் நீளங்களைவிட அதிகம்!

எனவே, முன்னுரையைவிட மூலத்தை முதலில் தெரிந்து கொள்ளுங்கள். பின், நீங்களே நீளமான விளக்கங்களை எழுதுவீர்கள் என்று சொல்லி, உங்களை அழைக்கிறேன்...



2

பிரபஞ்சப்பாதையில்

கவிதை

பிரபஞ்ச இயக்கம் (டௌ)
என்று
தெளிவாகச்
சொன்னால்
அதன் பூரணத்தை, முழுமையாகக்
குறிப்பிடுவதாகாது

புரிந்துகொள்வதற்காக அதைப்
பெயரிட்டு
அழைப்பதோ
பூரணத்தின் முழுமையைக்
கொண்டுவராது.

இந்தப் பெயரில்லாதது,
சொர்க்கத்தையும்
பூமியையும்
உருவாக்கியது

பெயரிட்டு அழைக்க முயல்வதோ
அதைப் புலனுக்குள்

கொண்டுவரும்
முயற்சி

எதிர்பார்ப்புகளையும் ஆசைகளையும்
கடந்த மனிதன்
எப்போதும் புலனுக்கு
அப்பாற்பட்டதைப் பார்க்கிறான்

எதிர்பார்ப்பும் ஆசைகளும் கொண்ட
மனிதன்
புலன்களின் எல்லையில் நிற்கிறான்.
இந்த இரண்டின் மூலமும் ஒன்றேதான்
பெயர்தான் வேறு.

இரண்டும் ஜோடி சேர்ந்ததை
முழுமை பெற்ற மூலம் என்கிறோம்.

இது ஆழமான மர்மம் நிறைந்த
அற்புதம்
பிரபஞ்ச மூலம் என்பது
நுட்ப உண்மைகளின் நுழைவாயில்!

விளக்கம்

இந்தப் பிரபஞ்சத்தை இயக்கும் ஒரு மாபெரும் சக்தி இருக்கிறது. அதுதான் எல்லாவற்றுக்கும் மூலம். அதுதான் இந்த உலகை, இந்தப் பிரபஞ்சத்தை, அனைத்தையும் உருவாக்கியது.

சீனர்கள் அதை 'டௌ' (TAO) என்கிறார்கள். அந்த மாபெரும் சக்திக்குப் போய் பெயரிட முடியுமா? இதைத்தான் சொல்கிறார்கள் நம் தேவாரப் பாடல்களில் —



'ஒரு நாமம், ஓர் உருவம்
ஒன்று இல்லார்க்கு
ஆயிரம் திருநாமம் பாடி'

என்கிறார்கள்.

இன்றைய அறிஞர்களோ இறைவன், கடவுள் என்றுகூடச் சொல்லத் தயங்குகிறார்கள். எனவே, அந்த மூலத்தை 'மாபெரும் சக்தி' என்கிறார்கள். அறிவாற்றல் (Pure Consciousness) என்கிறார்கள். தூய ஒளி (Light) என்கிறார்கள். எல்லை இல்லாப் பேராற்றல் (Infinite

Potential) என்கிறார்கள். எப்படிச் சொன்னாலும் அதன் முழுமையை நம்மால் சொல்ல முடிவதில்லை. அந்த முழுமையின் ஓர் அம்சத்தைத்தான் குறிப்பிட முடிகிறது.

அந்த மாபெரும் சக்தியை, ஆண்டவனைப் பார்க்க வேண்டுமா? பார்க்கலாம்; பார்க்க முடியும். கண், காது, மூக்கு, நாக்கு, தோலில் தெரியும் உணர்வு என்று இந்த ஐம்புலன்களையும் வெளிநோக்கிச் செலுத்துவதைவிட்டுக் கண்களை மூடிக்கொண்டு, காதில் ஏதும் விழாத ஒரு நிலையை ஏற்படுத்திக் கொண்டு மனிதன் உள்ளே — தனக்குள்ளே — செல்லும்போது காண்கிறான் என்கிறார் லாட்சு.

இந்த ஐம்புலன்களை மட்டும் உள்ளுக்கு இழுத்தால் போதாது. மனம் என்று ஒன்று இருக்கிறது. அதில் ஆயிரமாயிரம் எண்ணங்கள் உதித்தவண்ணம் இருக்கின்றன.

தெரியாத ஓரிடத்துக்குச் செல்லும்போது — உதாரணமாக, தாஜ்மகாலுக்கு — அது இப்படித்தான் இருக்கும் என்று நாமே கற்பனை செய்து கொண்டு எதிர்பார்த்துச் செல்கிறோம். அங்கே போய்ப் பார்க்கும் போது அது நம் கற்பனையை மீறியதாக, பிரமாண்டமாக இருக்கிறது. ஆகவே, அவனைப் பார்க்க நாம் திறந்த மனத்துடன் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் உள்ளே செல்லவேண்டும்.

நாம் அந்தப் பரம்பொருளை, மாபெரும் சக்தியைத் தரிசிக்கவேண்டுமென்றால் இவ்வுலகப் பிணைப்புகளை விடவேண்டும். இவ்வுலகப் பிணைப்புகள்-பந்தங்கள்-ஆசைகள் இருக்கும்வரை நாம் இங்குதான் இருப்போம். இதைக் கடந்து செல்லும் மனிதன் புலனுக்கு



அப்பாற்பட்ட ஒன்றை, ஒரு மாபெரும் சக்தியைப் பார்க்கிறான்.

பொருளைக் கடந்து, பொருளால் ஆன உலகத்துக்கு அப்பால் உள்ளதாக இருப்பதால்தான் அதைத் தமிழில் பரம்பொருள் என்கிறார்கள். பொருளால் ஆகவில்லை என்றால் என்ன அர்த்தம்? பொருளுக்கு அப்பால் — பொருளை உடைத்து, உடைத்துச் சிறிதாக்கிக் கொண்டே போனால் — எல்லாமே சக்திநிலையில் நிற்கிறது.

அதாவது பரம்பொருள் சக்தி நிலையில் இருக்கிறது. அதனால்தான் கடவுளை எங்கும் பரந்து எல்லையில்லாமல் நிற்கிறார் என்கிறோம்.

ஆக, ஐம்புலன்களுக்கு உட்பட்ட நாம் வாழும் உலகம் ஒன்று: இந்தப் புலன்களுக்கு அப்பாற்பட்ட சக்தி நிலையில் உள்ள பார்க்க முடியாத உலகம் ஒன்று. இதைத்தான் உலகின் இரட்டைத்தன்மை என்கிறோம். அதாவது, இவ்வுலகில் எல்லாமே இரட்டைத்தன்மை கொண்டதாக இருக்கிறது. பொருள்-சக்தி, ஒளி-இருள், இறப்பு-பிறப்பு, நன்மை-தீமை, லாப-நஷ்டம், ஆரோக்கியம்-நோய், மேடு-பள்ளம், நேர் மின்சாரம்-எதிர் மின்சாரம். (பாசிட்டிவ் முனை - நெகட்டிவ் முனை) ஆண்-பெண் என்று எங்கு பார்த்தாலும் இந்த தன்மையைப் பார்க்கிறோம்.

இவை எல்லாம் எங்கிருந்து வந்தன? இந்தப் பிரபஞ்சம் துவங்கியபோது ஒரே ஒரு மூலத்திலிருந்து.

அந்த மூலத்துக்குள்தான் எத்தனை-எத்தனை விந்தைகள், ஆற்றல், அறிவு அன்பு, அதிசயம்!

மூலத்தில் எத்தனை அதிசயங்கள்! நுட்பமான உண்மைகள்! நமது உபநிடதம் அதை விளக்குகிறது ஓரிடத்தில் -

'தோற்றம் பெறாத மூலம் பூரணமானது.

அந்தப் பூரணத்திலிருந்து பூரணம் உருவாகியது.

பூரணத்திலிருந்து பூரணத்தை எடுத்துவிட்டாலும்.

எஞ்சுவதும் பூரணமே.'

பூரணத்திலிருந்து பூரணத்தை எடுத்துவிட்டால் மிஞ்சுவது பூஜ்யம். பூரணத்தை ஒன்பது என்று வைத்துக் கொண்டால், ஒன்பத்திலிருந்து ஒன்பதை கழித்தால் சைபர்தான் வரும். ஆனால், உபநிடதம் சொல்கிறது:

ஒன்பதிலிருந்து ஒன்பதைக் கழித்தால் வருவதும் ஒன் பதே என்று!

இதைத்தான் அதிசயம், அற்புதம், அறிவுக்கு அப்பாற்பட்ட உண்மைகள் என்கிறார் லாட்சு.

'கண்டவர் விண்டிலர்
விண்டவர் கண்டிலர்'

பார்த்தவர்களுக்கோ சொல்ல முடியவில்லை. சொல்ல முனைபவர்களோ பார்த்ததில்லை! அதனால் தான் சொல்கிறார் ஞானி லாட்சு, 'தம்பி! பிரபஞ்ச மூலம் என்பது நுட்ப உண்மைகளின் நுழைவாயில்' என்று.

கொஞ்சம் யோசியுங்கள்... என்ன அந்த நுட்ப உண்மைகள்? எப்படி அந்த நுழைவாயிலில் நாம் நுழைய முடியும்?



3

போட்டியில்லாத உலகம்

கவிதை

போற்றப்பட வேண்டிய
உயர்குணம் நீர் போன்றது
அதனால் எல்லாவற்றுக்கும் நன்மை;

அதற்கும் மேலும்
முணுமுணுக்காமல்
மூலைமுடுக்கெல்லாம் நிரப்புகிறது

ஆகவே, பிரபஞ்ச இயக்கத்தை
ஒத்திருக்கிறது.
எப்படி?

குடி இருப்பின் மதிப்பு அது
இருக்குமிடம்தான்.

மனதின் மதிப்பு அதன் ஆழம்தான்.
உறவின் மதிப்பு உதவும்
குணங்களில்தான்
வார்த்தைகளின் மதிப்பு அதில் நிலவும்
நாணயத்தில்தான்.



தலைமையின் மதிப்பு
ஒழுக்கத்தில்தான்.

வேலையின் மதிப்பு, மேவும்
திறமையில்தான்

அவை ஒன்றுக்கொன்று
போட்டியிடுவதில்லை.

எனவே, அங்கே வெறுப்பு
இல்லை; பகை இல்லை.

விளக்கம்

தண்ணீர் தன்னைக் காட்டிக் கொள்வதில்லை. பிறர் வெறுத்து ஒதுக்கும் இடங்களிலெல்லாம் சென்று நிரப்புகிறது. வெறுப்பின்றி, தடையைப் பற்றிக் கவலைப் படாமல் தான் இருக்கும் நிலையில் முன்னேற்றத்தை ஏற்படுத்துகிறது.

வளர்ந்தவர்கள் — பெரியவர்கள் — மேலிடத் துக்குச் செல்லப் போட்டியிடுவதில்லை. மாறாக, தாழ்ந்த இடங்களிலே நிறைவுடன் நின்றுகொள்கிறார் கள். ஒரு மனிதன் வெற்றிபெற வேண்டுமானால், ஆதிக்க உணர்வுடன் போராட வேண்டும் என்ற உலகியல் கருத்துக்கு மாறாக இருக்கிறது, நீரின் குணம்.

இந்த உலகிலே நாம் போட்டி இல்லாமல் வாழலாம். ஏனெனில், எல்லோரும் எல்லாமும் பெற எல்லாம் ஏராளமாக இருக்கிறது.

ஒரு வீட்டுக்கும் அது குடியிருக்கும் இடத்துக்கும் போட்டி என்பது உண்டா? உதவும் குணங்கள் உறவை உயர்த்துகின்றனவே தவிர, போட்டியா இடுகின்றன?

போட்டி இயற்கை அல்ல.

பிரபஞ்ச இயக்கத்தில் போட்டி ஏதும் இல்லை. பூமி சூரியனுடனா போட்டியிடுகிறது? அல்லது சந்திர னுடன் போட்டியா?

இவ்வுலகில் எல்லோருக்கும் எல்லாம் இருக்கிறது. ஆதிக்க உணர்வு எதற்கு? சுயநலத்தால் ஏன் நாம் சூழப்படவேண்டும்?

அளவுக்கு மீறிச் சேர்த்து வைப்பவன் திருடர்களை உருவாக்குகிறான். அங்கே சுயநலம் பயத்தை எழுப்பு



கிறது. நாம் விரும்பும் பொருளை இழந்தபின் பரிதவிப்புக்கு ஆளாகிறோம்.

சேமித்து வைப்பவர்கள் எல்லோரும் பகிர்ந்து கொள்கிறார்கள் எனும்போது அங்கே போட்டி இல்லை. எல்லோருக்கும் மகிழ்ச்சி.

தண்ணீர் தாழ்ந்து நின்று தன் காரியங்களைச் சாதித்துக் கொள்கிறது. புயல் வருகிறது என்றால் போட்டியிட வேண்டாம்... ஒதுங்கி நின்றால் போதும்.

போட்டி எண்ணங்கள் இல்லாதபோது, மனம் திறந்த மனமாக விழிப்புற்ற நிலையில் இருக்கிறது. அமைதியாக இருக்கிறது. உள்ளுணர்வை (Intuition) வரவேற்கும் நிலையில் இருக்கிறது.

ஆதிக்க உணர்வு எதையும் சாதிப்பதில்லை. காம, குரோத, மோக, மத, மாச்சரியம் என்னும் பஞ்சமா பாதகங்களைவிட ஒரு மனிதனை வீழ்த்துவது ஆணவம் தான் என்கிறார்கள் கீழைநாட்டு அறிஞர்கள். 'நான் பெரியவன்' என்கிற ஆணவம்தான் போட்டிக்கு வித்து.

உலகில் உண்மையில் யார் பெரியவர்கள்? எல்லோரும் ஒவ்வொரு வேலையைச் செய்கிறோம்... அவ்வளவுதான்!

4

இருப்பதை வைத்துக் கொள்... இல்லாததை உபயோகி!



கவிதை

இருபத்துநாலு கால்கள் கொண்ட
சக்கரம் செய்கிறோம்
உபயோகிப்பதோ நடுவில் உள்ள வெற்றிடத்தை,
களிமண்ணால் பானை செய்கிறோம்
உபயோகிப்பதோ வெற்றிடத்தை,

கதவுகளும் ஜன்னல்களும் வைத்து வீடு கட்டுகிறோம்
உபயோகிப்பதோ உள்ளே உள்ள வெற்றிடத்தை,

எனவே

எது இல்லையோ அதை உபயோகி
எது இருக்கிறதோ அதன் நன்மைகளைப்
பெற்றுக்கொள்.

விளக்கம்

இல்லாத உலகம் ஒன்று இருக்கிறது. அதைப் புரிந்துகொள்; அதை உபயோகி என்கிறார் ஞானி லாட்சு. சுருக்கமாகச் சொன்னால், எண்ணங்களை நாம் பார்க்க முடிவதில்லை. ஆனால், அதைத்தான் நாம்

உபயோகிக்கிறோம். இல்லாத உலகம்; பார்க்க முடியாத உலகம்.

இருபத்துநாலு கால்கள் வைத்துச் சக்கரம் செய்கிறோம். எப்படிச் சக்கரம் உருளுகிறது... நடுவிலே இருக்கும் வெற்றிடத்தில்தான் அச்சைக் கோக்கிறோம். அந்த வெற்றிடத்தை உபயோகிக்காவிட்டால் சக்கரம் உருளாது.

களிமண்ணால் ஆன பானை செய்கிறோம்... எங்கே சோறு பொங்குகிறோம்? பானையின் உள்ளே இருக்கும் வெற்றிடத்தில். டம்ளர் என்ற அமைப்பில் தண்ணீர் குடிக்கிறோம்... எங்கே தண்ணீர் நிற்கிறது? உள்ளே இருக்கும் வெற்றிடம்தான் நமக்கு உதவுகிறது.

ஜன்னல்களும் கதவுகளும் கவர்களும் வைத்து வீடு கட்டுகிறோம். எங்கே படுக்கிறோம்? எங்கே விருந்தினர்களை வரவேற்கிறோம்? எல்லாம் அந்த ஹாலில், சமையலறையில்... அந்த வெற்றிடத்தில்தான்.

தொலைபேசி என்னும் கருவியில் நாம் பேசும் ஒலித்துடிப்பை மின்காந்த அலைகளாக மாற்றிவிடுகிறார்கள். அப்படி வரும் மின்காந்த அலைகளை நம் வீட்டில் மீண்டும் நாம் புரிந்துகொள்ளும் வண்ணம் ஒலி அலைகளாக, பேச்சாக, மாற்றிவிடுகிறார்கள்.

மின்காந்தம் என்பதை நாம் பார்க்க முடியாது, கேட்க முடியாது, சுவைக்க முடியாது, நுகர முடியாது, உடலால் உணர முடியாது. அதாவது, நம் புலன்களுக்கு அப்பாற்பட்ட ஓர் உலகம் இருக்கிறது. அதை நம் முன்னோர்கள் சூட்சும உலகம் என்கிறார்கள். நாம் வாழும் உலகை சட உலகம் என்கிறார்கள்.

வாழ்வதற்கு இரண்டும் தேவை.



யோகிகள் "அட்டமா சித்திகள்" எனப்படும் அதிசயங்களைச் செய்கிறார்கள் – எந்தவிதமான கருவியும் இல்லாமலேயே.

மனம் ஒன்றுதான்; மனத்தில் எழும் எண்ணங்களை மட்டுமே உபயோகிக்கிறார்கள். அது ஓர் இல்லாத உலகம். அந்த 'இல்லாத உலகி'லிருந்து நாம் பார்க்கும், உணரும் உலகில் அதிசயங்கள் நிகழ்வதைப் பார்க்க முடிகிறது. யோகிகள், 'இல்லாத உலகின்' தன்மைகளைப் பூரணமாக உணர்ந்திருக்கிறார்கள். அதை ஒரு சாஸ்திரமாக, முறையாக அறிந்துகொள்ளும் நூலாக உருவாக்கி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒன்றுதான்

பதஞ்சலி யோக சூத்திரம். இல்லாத உலகை இருக்கும் உலகுக்கு இழுத்து வரும் பாடங்கள் கொண்டது.

சித்தார்த்தர் என்ற இளைஞர் வாழ்வில் மூப்பு, பிணி, சாக்காடு என்று பார்க்கிறார். ஏன் இப்படி என்ற கேள்வி. ஏன் துக்கம்? துக்கம் என்பது என்ன? அதன் காரணம் என்ன? அதைப் போக்கும் மார்க்கங்கள் என்ன? எது சரியான வழி என்று ஆராய்கிறார்.

எல்லாம் மனத்தால் ஆராய்கிறார், மனத்துக்குள் நடப்பதை, எல்லாவற்றுக்கும் அடிப்படையான விதி முறைகளைக் கண்டுபிடிக்கிறார். நல்லெண்ணம் என்ப தன் விரிவாக்கமாக நல் சிந்தனை, நல் முயற்சி, நல் நோக்கம், நல்ல சொல், நல் செயல் என்று வரிசையாக ஓர் எட்டு வழிப் பாதையைக் கண்டுபிடிக்கிறார்.

நம் முன் எழும் மிகப்பெரிய கேள்வி இதுதான்: இவை நாம் வாழும் பொருளால் ஆன உலகில் இருக் கின்றனவா? இல்லை, இல்லவே இல்லை. நல்லெண் ணம் என்ற சொல்லின் விரிவாக்கம் எல்லாம் புலன் களுக்கு அப்பால் உள்ள, இல்லாத உலகிலிருந்து பெறப் பட்டவை. எண்ணங்களால் ஆன மன உலகிலிருந்து பெறப்பட்டவை. அந்த இல்லாத உலகிலிருந்து பெறப் பட்ட கருத்துகள்தான், அறிவுதான், எண்ணங்கள்தான் நாம் வாழும் பொருளால் ஆன உலகைக் கட்டுப்படுத்து கின்றன. இதையேதான் நேர்மை யாயிரு, சமமாகப் பழகு, சுதந்திரமாக இரு, உண்மையைப் பேசு, நல் லெண்ணத்துடன் வாழ், ஒழுங்கை-ஒழுக்கத்தைக் கடைப்பிடி, சுயகட்டுப்பாட்டுடன் நடந்துகொள் என்று எல்லா மதப் பெரியவர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

வாழ்வதற்கான வழிமுறைகள் எங்கிருந்து வரு கின்றன...? இல்லாத உலகிலிருந்து. நாம் இல்லாத

உலகைப் பூரணமாக உணர்ந்துகொள்வோமானால் இவ்வுலக வாழ்வை நாம் விரும்பும்படி அமைத்துக் கொள்ளலாம்.

அப்படிப்பட்ட இல்லாத உலகைக் கண்டு பிடிக்கும் முறைதான் யோகம், தியானம் எல்லாம்.

யோகம் என்பது என்ன? மன எண்ணங்கள் அடங்குவதுதான் யோகம் என்கிறார் பதஞ்சலி. அப்போது என்ன நேரிடுகிறது? அவன் தன் சொந்த சொரூபத்தைக் காண்பான் என்கிறார். (தான் ஓர் ஆத்மா — தான் இறைவனின் ஒரு பகுதி, என்பதை — தன்னுள் இருக்கும் இறை உணர்வைக் காண்பான், அறிவான்.)

இன்றைய விஞ்ஞான உலகம் பொருளை உடைத்து-உடைத்துச் சென்று பொருளுக்கு அப்பால் உள்ள உலகைக் கண்டுபிடித்து வருகிறது. அந்தப் பொருளுக்கு அப்பாற்பட்ட உலகம் ஞானி லாட்சு சொல்வது போல, பதஞ்சலி முனிவர் சொல்வது போலத்தான் இருக்கிறது என்பதை இன்றைய விஞ்ஞானிகள் கண்டுபிடித்து வருகிறார்கள்.

புத்தர், இல்லாத உலகத்தைக் கண்டுபிடித்தார். அதை இருக்கும் உலகுக்குக் கொண்டுவந்தார்.

பகவான் ரமணர் இறப்பின் எல்லைக்குப் போனார். தனக்குள் ஆத்மா என்ற இறைத்தன்மை இருப்பதைக் கண்டுபிடித்தார்.

இல்லாத உலகம், இருக்கிற உலகை உருவாக்கு கிறது. இல்லாத உலகம், இருக்கிற உலகுக்கு உதவுகிறது.

“இருப்பதை வைத்துக்கொள். இல்லாததை உபயோகி” என்கிறார் ஞானி. இருப்பது பானை. இல்லாத — ஒன்றும் இல்லாத — இடம் உள்ளே

இருக்கிறது. அதில்தான் பால் பொங்குகிறோம். இருக்கின்ற பானையை உடைத்துவிட்டால் அதில் பால் காய்ச்ச முடியாது. அதுபோல நாம் வாழும் உலகை ஏற்றுக் கொள்ளவேண்டும். இல்லாத உலகை உபயோகிக்க வேண்டும். இல்லாததைப் புரிந்து கொள்ளும் புத்திசாலித்தனத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

5

ராஜபாட்டையில் செல்லுங்கள்



கவிதை

சிறிதளவு ஞானத்தைக்கொண்டு
நான் ராஜபாட்டையில்
நடக்கிறேன்
நான் பாதையைத்
தவறவிடுவேனோ என்கிற பயம்
அடிக்கடி.

ராஜபாட்டை நடப்பதற்கு ஏற்ற
நல்ல சமதளமாய் இருக்கிறது,
எனினும் மக்கள் சந்து
பொந்துகளை நாடுகிறார்கள்.

ஓர் அமைப்பு பிளவுபடுமானால்
ஒரு பக்கம்
வயல்களில் புல் மண்டிக்கிடக்கிறது,
கடைகளில் சாமான்கள் இல்லை;
இடம் காலி.

மறுபக்கம்
பட்டுத்துணிகளில்

படாடோபமாகப் பலர்
கூர்மையான வாள்
இடுப்பில் தொங்க
குடியும் விருந்தும்
கொடிகட்டிப் பறக்க
பொன்னும் பொருளும் இரும்புப்
பெட்டிக்குள் சேமிக்கப்பட்டு.

ஊரைக் கொள்ளையடிப்பது
என்று இதற்குப் பெயர்.

ஒருதலை வளர்ச்சி
நிச்சயமாகச் சரியான பாதை அல்ல.

விளக்கம்

பிரபஞ்ச இயக்கத்தில் எல்லாம் சமமாக இயங்கு கின்றன. சூரியனைச் சுற்றிப் பூமி வருகிறது என்றால், பூமியைச் சுற்றிச் சந்திரன் வருகிறது. எல்லோருமே ஒருவருக்கொருவர் உதவியாக, நியாயமாக, அன்புடன், அக்கறையுடன், கரிசனத்துடன் இயங்குகிறார்கள்.

இதுதான் ராஜபாட்டை. நேர்மை, சமத்துவம், சுதந்திரம், உண்மை, ஒழுங்கு, நல்லெண்ணம் என்று எல்லாமே சேர்ந்து ஒருங்கிணைந்து இயங்குகின்றன. இதைத்தான் பிரபஞ்ச இயக்கத்தின் ராஜபாட்டை என்கிறோம். இதில் நடக்க எந்தப் பெரும் தனிப்படிப்பும் தேவை இல்லை. பாதை தவறாமல் நடந்தால் போதும். ஆனால், பலர் என்ன செய்கிறார்கள்?

ராஜபாட்டை இருக்க.... இவர்கள் சந்துபொந்து களில் நடக்கிறார்கள். உணர்வு தேடும் தீனிதான் இவர்களுக்குச் சரியான பாதையாகத் தெரிகிறது.



காரணம்: சுயநலம். அளவுக்கு மீறிய ஆசை. 'நான், எனது, எனக்கு' என்ற ஆணவம். பொருள்கள் மீதுள்ள பற்று. இதனால் வேற்றுமை. பேதம். இதனால் பிளவுகள்.

ஓர் அரசு ராஜபாட்டையில் நடக்க வேண்டும். மக்களுக்காக, மக்களுடைய அரசாக. அமைச்சர்கள்

தனித்து நின்று, நாங்கள் பெரியவர்கள், வேறுபட்டவர்கள், உயர்ந்தவர்கள், என்று எண்ணுவார்களானால் அங்கே மக்களுக்கும் அவர்களுக்கும் இடையே பிளவு ஏற்படுகிறது.

இதனால் பலர் அவதிப்படுகிறார்கள்; சிலர் நன்மை பெறுகிறார்கள்.

ஒரு பக்கம் ஏழைகள்.

மறுபக்கம் செல்வத்தில் தவழும் பணக்காரர்கள். பட்டுத் துணி மேலங்கியாக, துப்பாக்கி சொருகிய படைவீரர்கள் பாதுகாவலர்களாக முன்னே செல்ல, குடியும் விருந்தும் போதை தலைக்கு ஏற, பொன்னையும் பொருளையும் நிலத்தையும் சேமித்து வைக்கிறார்கள் — வாரிசுகளுக்காக!

இதற்குப் பெயர்தான் ஊரைக் கொள்ளை அடிப்பது என்பது. வறுமை ஒரு பக்கம். மாட மாளிகைகள், விருந்துகள் மறுபக்கம். தேவைக்கு அதிகமாக உபயோகிப்பதைப் பெருமையாக நீங்கள் பிறருக்குக் காட்டலாம். பாதுகாவலுடன் பவனி வருவது வீரமாக, பெரிய மனிதத்தனமாகக் கருதப்படலாம். உண்மையில் அது ஏழையை ஏழையாக வைத்து ஊர் சொத்தை அபகரிக்கும் திருட்டுதான்.

இது சமநிலை தவறிய நிலை.

இயற்கைக்கு முரண் நிலைக்காது.

இதைத்தான் சொல்கிறார் லாட்சு.

6

வளர்ந்த மனிதர்கள்



கவிதை

உலகில் அழகை அழகென்று
உணரும்போது
அங்கே அவலமும் மறைந்திருக்கிறது.
நல்லதை நல்லதென்று அறியும்போது
தீமையும் அங்கே ஒளிந்திருக்கிறது.
வாழ்வும் சாவும் ஒன்றை ஒன்று பின்னி
வருகின்றன.

கஷ்டமானதும் சுலபமானதும்
ஒன்றுக்கொன்று முழுமை
தருகின்றன.
மேடும் பள்ளமும்
ஒன்றை ஒன்று
தீர்மானிக்கின்றன.
குரலும் நாதமும் ஒன்றை
ஒன்று இதப்படுத்துகின்றன.

வருங்காலமும் இறந்தகாலமும்
ஒன்றன்பின் ஒன்றாய்த்
தொடர்கின்றன.

எனவே ஞானிகள் -
வளர்ந்தவர்கள் - அமைதியாக
இருக்கிறார்கள்.
காரியம் தானே
நடைபெறுகிறது.
வார்த்தைகளின்றி உபதேசம்.

மனிதன் எல்லாவற்றிலும்
உள்ள
ஓர் அங்கம்
யாரையும் எதையும் அவர்கள்
உதறித்தள்ளுவதில்லை.
உருவாக்குகிறார்கள் - உரிமை
கொண்டாடுவதில்லை.
செயல்படுகிறார்கள் - ஏதும்
எதிர்பார்ப்பில்லை.
சாதனை புரிகிறார்கள் - புகழை
நாடுவதில்லை.

விளக்கம்

'டௌ' எனப்படும் சீனத் தத்துவத்தின் அடிப்படை இதுதான்:

பிரபஞ்ச இயக்கத்தில் என்ன பார்க்கிறோம்? எந்தச் செயலுக்கும் அதை ஒட்டிய எதிர்க்குணம் கொண்ட செயல் இருக்கிறது; இறப்பு என்றால் பிறப்பு — இப்படி, லாபம்-நஷ்டம், நன்மை-தீமை, மேடு-பள்ளம்,



பொருள்-சக்தி, ஒளி-இருள், ஆண்-பெண், நேர் மின் துகள்கள்-எதிர் மின்துகள்கள் என்று எங்கு பார்த்தாலும் இந்த இரட்டைத் தன்மையைத்தான் பார்க்கிறோம். அதைச் சீன மொழியில் 'யின்' (Yin) என்றும் 'யாங்' (Yang) என்றும் சொல்கிறார்கள். நாம் கூறுகிற அதே இரட்டைத் தத்துவம்தான்.

'இருவேறு உலகத்து இயற்கை' என்கிறாரே திரு வள்ளுவர், அதே கருத்துதான்.

ஒரு காந்தக் கட்டையில் வட துருவம், தென் துருவம் என்ற பாகுபாட்டைப் பார்க்கிறோம். ஆனாலும் இரண்டு துருவங்களும் ஒரே காந்தக்கட்டையில் இருக்கின்றன; இரண்டும் ஜோடியாக ஒரு தளத்தில் இருக்கின்றன.

பூமியில் எப்படி வட துருவம், தென் துருவம் என்றும், அணுவில் புரோட்டான், எலெக்ட்ரான் என்றும் எப்படி ஜோடி சேர்ந்திருக்கின்றனவோ அதே போலத்தான் வாழ்விலும் இந்த இரட்டைத் தன்மை அமைந்திருக்கிறது. ஒன்றுதான் வேண்டும் என்று ஒன்றைத் தனித்து நாம் பிரித்துவிட முடியுமா?

வளர்ந்த மனிதர்கள், நாம் வாழும் பௌதீக உலகைப் பார்க்கிறார்கள். இயற்கையின் விதிமுறைகளை உணர்கிறார்கள். தாங்கள் பெற்ற விழிப்பு உணர்வை உபயோகித்து மனித வாழ்வை அமைத்துக் கொள்கிறார்கள்.

எனவே, வாழ்வில் ஒன்று வந்ததென்றால் மற்றதும் வரத்தான் வரும். காந்தக்கட்டையில் ஒரு துருவத்திலிருந்து நகர்ந்தால் அடுத்த துருவத்துக்குப் போகிறோமல்லவா — அதுபோல!

நாம் என்ன செய்கிறோம்? வாழ்வில் கஷ்டங்களும் நஷ்டங்களும் சோகங்களும் விபத்துகளும் ஏமாற்றங்களும் ஏற்படும்போது புலம்புகிறோம் — ஏதோ இது நமக்கு மட்டும் ஏற்பட்டது என்று எண்ணி. அதுவா உண்மை? இல்லை; இல்லவே இல்லை! இது உலக இயல்பு.

'இதுதான் உலக இயல்பு' என்பதை உணரும்போது இது 'வரத்தான் வரும்' என்று நாம் ஏற்றுக் கொண்டு தத்துவ ரீதியில் சமாதானமடைகிறோம். தீமை

என்று வந்தால் என்ன ஆகும்? நாம் நகர்ந்தோமானால் — அதாவது நாம் இருக்கிற இடத்தில் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்துகொண்டு நகர்ந்தோமானால் — தீமை மாறிவிடும். ஏனெனில், தீமையின் — தொடர்ச்சி அடுத்த கட்டம் — நன்மை. நஷ்டத்தின் தொடர்ச்சி லாபம்தான்.

வாழ்வில் எல்லோரும் இதன் வழியாகத்தான் போகவேண்டி இருக்கிறது.

மற்றொரு விஷயத்தைப் பாருங்கள்! நமக்கு ஒரு கஷ்டம் வருகிறது; தீமை ஏற்படுகிறது என்றால் என்ன செய்யலாம்?

நாம் பார்க்கும் விதத்தை மாற்றிக் கொண்டால் 'இது நன்மைக்குத்தான் வந்திருக்கிறது' என்று எடுத்துக் கொண்டால் அது நன்மையாக மாறிவிடும்! இதுதான் உண்மை! இதைத்தான் 'தீமை போல வேஷம் போட்டுக் கொண்டு வந்தது நன்மை!' (Blessing in Disguise) என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். தீமை வரும்போது என்ன சொல்லவேண்டும்? 'ஓ! எனக்குத் தெரியாதா? நீ புலிவேஷம் போட்டுக்கொண்டு வந்த மனிதன்தான், நான் பயப்படப் போவதில்லை' என்று.

நீங்கள் கேட்கலாம், 'இது உண்மையா?' என்று. உண்மைதான். கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் தீமை தீமையே அல்ல என்பதுதான் அடிப்படை உண்மை. நாம்தான் அடிப்படை உண்மை அறியாது நாமாக இது தீமை என்று அங்கலாய்க்கிறோம். நன்மை தீமைபோல உள்ள இரட்டைத்தன்மைகளான ஆண்-பெண், நேர் மின்துகள்-எதிர் மின்துகள், பொருள்-சக்தி என்ற விஷயங்களைக் கவனியுங்கள்.

யாராவது ஆண் தீமை என்றோ பெண் தீமை என்றோ ஒதுக்கி விட முடியுமா? அதே போலத்தான் துன்பத்தையும் நாம் அணுக வேண்டும்.



7

உணர்வை வென்ற மனிதன்

ஆண்தான் வேண்டும், பெண் தேவையில்லை என்பதில் ஏதேனும் அர்த்தம் இருக்க முடியுமா?

அதேபோல, நன்மை-தீமையில் வித்தியாசம் பாராட்டத் தேவை இல்லை. இது நன்மைக்கே என்று எடுத்துக்கொள்ள வேண்டும்.

வளர்ந்த மனிதர்கள் விஷயங்களின் எந்தக் கோடிக்கும் போவதில்லை. தீமை அவர்களை அசைப்ப தில்லை. நன்மையும், செல்வமும், புகழும் வந்தபோதும் அவர்கள் தற்பெருமையால், ஆணவத்தால் அடித்துச் செல்லப்படுவதில்லை என்கிறார் ஞானி லாட்சு.

நிதானம் அவர்களை ஆள்கிறது.

அவர்கள் சூழ்நிலையைக் கட்டுப்படுத்துகிறார்கள்.

அவர்கள் சூழ்நிலையால் ஆளப்படுவதில்லை.

மிதம்-இதம் என்ற மிதமான நடுநிலையில் இருக் கிறார்கள். எனவே, இரண்டுமே அவர்களைப் பாதிப்ப தில்லை.

கஷ்டமான வேலை என்ற ஒன்று இருந்தால் அதன் அருகே சுலபமான என்று ஒன்றும் இருக்கத்தான் வேண்டும் என்கிறார் ஞானி லாட்சு. இதைக் கேட்கும்

போது நமக்கு நினைவுக்கு வருவது மெக்கார் மிக் என்ற அமெரிக்க இளைஞன்தான்.

மைல்கணக்கில் அறுவடைக்குக் காத்திருக்கும் கோதுமை வயல்களைப் பார்க்கிறான். அங்கே அரி வாளை வைத்துக்கொண்டு பிடி பிடியாக அதை அறுவடை செய்யும் தொழிலாளர்களைப் பார்க்கிறான். 'இதைவிட இதற்கு ஒரு சுலபவழி இருக்கவேண்டும்! இப்படியா மனித சக்தி வீணாவது, கஷ்டப்படுவது?' என்று எண்ணுகிறான்.

அந்த எண்ணம், 'சுலப வழி ஒன்று இருக்கிறது' என்று நம் மனத்தில் நாம் சொல்லிக் கொள்கிறோமே, அதுதான் திறவுகோல். மனம், மற்றதைச் செய்கிறது இதை 'வளர்ந்தவர்கள்' அறிந்துவைக்கிறார்கள்.

நம் நாடு மோசமான நிலையில் இருக்கிறது என்று புலம்புவதில் அர்த்தமில்லை. இதிலிருந்து மீள ஒரு சுலப வழி இருக்கிறது என்ற நம்பிக்கை பிறந்தால் போதும்; நம்பிக்கை செயலைத் தூண்டும். இதன் தொடர்ச்சியான அடுத்த கட்டம் தானாக வந்துசேரும்.

வளர்ந்தவர்களிடம் எதிர்பார்ப்பு இல்லை. எதிர் பார்ப்பு இருந்தால்தானே ஏமாற்றம் வரும்? போர்க் களத்தில் போரிடும் ஒரு போர்வீரனுக்கு 'இறந்து விடு வோமோ?' என்ற எதிர்பார்ப்பைப் போக்க 'உன்னை நோக்கி வரும் குண்டில் உன் பெயர் எழுதப்பட்டி ருந்தாலன்றி உனக்குச் சாவு வராது' என்று சொல்லி அனுப்புவார்களாம்.

ஞானி லாட்சு மேலும் சொல்கிறார்:

சாதனை புரிபவர்கள் 'நான் செய்தேன்' என்று மார்தட்டுவதில்லை. தற்பெருமை பேசுவதில்லை.

சாதனைகளுக்குச் சொந்தம் கொண்டாடுவது இல்லையாம்.

சாதனைக்குச் சொந்தம் கொண்டாடாத ஒரு மனிதன் சமநிலையில் நிற்கும்போது, பெருமையும் புகழும் தானாக அவனை நாடி வருகிறது. ஏனெனில், சமதளத்தில் விஷயங்கள் நகர்வது எளிது. அங்கே, விருப்பமில்லை, வெறுப்புமில்லை; அது சமதளம். இதைப் புரிந்து கொண்டோமானால் மனத்தை சம தளத்தில் கொண்டுவருவது சாத்தியம். வாழ்வில் இனிமையைக் கொண்டுவருவதும் எளிது.

மற்றொரு மாபெரும் உண்மையை ஞானி லாட்சு சென்ற அத்தியாயக் கவிதையின் முதல் வரியில் சொல்வதைக் கவனியுங்கள். அழகை அழகென்று உணரும்போது அங்கே அவலமும் ஒளிந்திருக்கிறது என்கிறார். அதாவது, நமக்கு ஒரு மாபெரும் யோசனை ஒன்று தோன்றுகிறது. நாம் உடல் சிலிர்த்துப் போகிறோம். இன்னும் சற்று நேரத்தில் ‘இது என்ன சாத்தியமா? என்னால் முடியுமா? ஊர் உலகம் என்ன சொல்லும்?’ என்ற சந்தேகங்களும் பயமும் தன்னம்பிக்கை இன்மையும் தளர்வும் வருகிறது. ‘நல்லெண்ணம் மனத்தில் எழும்போது அத்துடன் ஒரு கெட்ட எண்ணமும் சேர்ந்துதான் வரும். கவலைப்படாதீர்கள்’ என்கிறார் ஸ்ரீ அரவிந்த அன்னை. ஏனெனில், இது இவ்வுலகின் இரட்டைத் தன்மையின் இயல்பு.

அகக்கண் = உள்ளுணர்வு

கவிதை

ஐவகை வண்ணங்கள் கண்களைக்
குருடாக்குகின்றன.

ஐவகை ஒலிகள் காதைச்
செவிடாக்குகின்றன.

ஐவகைச் சுவைகள் நாக்கைக்
கண்டபடி இழுத்துச்செல்கின்றன.

காட்டில் மிருகங்களைத்
துரத்துவதும் வேட்டை வெறியும்
புத்தியைப் பேதலிக்கச்
செய்கின்றன.

கிடைத்தற்கு அரிய பொருட்கள்
அர்த்தமற்ற வேட்கையில்
மனிதனை சுற்றச் செய்கின்றன.

எனவே

ஞானி தன் கண்களால்
காண்பதில்லை.

அகக் கண் மூலம் – உள் உணர்வின்
மூலம் பார்க்கிறார்.

ஒன்றைத் தேர்ந்தெடுக்கிறார்; மற்றதைத்
தள்ளுகிறார்.

விளக்கம்

வாழ்வில் இவ்வுலகோடு நம்மை ஈடுபடுத்துவது நமது கண், காது, மூக்கு, நாக்கு, தோலின் மீது ஏற்படும் உணர்வு என்ற ஐம்புலன்கள்தான். உதாரணமாக,

ஸ்பரிசம் என்கிற உடல் உறவின் உணர்வைத் தூண்டி விட்டுக் கொண்டே இருந்தால் அது அவன் உடலையும் வாழ்வையும் பாதிக்கும். உடல் உறுப்புகள் செயலிழக் கும். மந்த நிலை அடையும்.

நாக்கின் ருசியால் தொப்பை போட்டவர்கள், குனிய முடியாதவர்கள், குண்டானவர்கள் உண்டு. இன்றைய 'ஜாஸ்' இசையைக் கேட்டுக் காது கேட்காமல் போன இளைஞர்கள் ஏராளம்.

"கசப்புத் தராத திருப்தியே இல்லை" என்கிறார் ஸ்ரீ அரவிந்த அன்னை. புலன் உணர்வுகள் இன்பம் தரு கின்றன; திருப்தி தருகின்றன. ஓரளவுதான் நாம் சினிமா வையோ, இசையையோ ரசிக்க முடியும். திருப்திக்கு மேல் கசப்புதான் மிஞ்சுகிறது.

பலர் தேவை இல்லாமல் மிருகங்களை வேட்டை யாடச் செல்கின்றனர். மறைந்திருந்து துப்பாக்கியால், அம்பால் மிருகத்தைக் கொல்வது ஒரு வீரமா? அதன் தலையைப் பாடம் செய்து வீட்டில் மாட்டிவைப்பது ஒரு பெருமையா?

அடிபட்ட மிருகம் செயலின்றி துடி துடித்துச் சாகும் நிலையையும் தன் கண்களால் பார்க்கின்றனர். 'என்ன செய்தேன்?' என்ற குற்ற உணர்வு அவர்களைப் பேதலிக்கச் செய்கிறது, ஒரு சமயம் இல்லாவிட்டால் மற்றோர் சமயம்.

இன்னும் பலர் கிடைத்தற்கரிய பொருட்களைச் சேமித்து வைக்கின்றனர். ஒரு மனிதர் பழைய மாடல் கார்களை எல்லாம் 1928லிருந்து சேமித்துத் தன் கொட்டகையில் நிறுத்தி இருக்கிறார். ஆண்டுவிழா கொண்டாடுகிறார். அப்போது தனது பழைய 'ரோல்ஸ் ராய்சில்' அவரும் அவர் மனைவியும் பவனி வருகிறார்



கள். என்ன பயன்? சொல்கிற வார்த்தையே, எழுதுகிற
எழுத்தே பயனுடையதாக இருக்க வேண்டும் என்று

வள்ளுவர்கள் எல்லாம் கூறும்போது நம் செயல் பயனுடையதாக இருக்க வேண்டாமா?

"எதற்காக இங்கே வந்தோம், ஏன் நாம் பிறந்திருக்கிறோம், நம்முடைய வேலை என்ன, என்ற சிந்தனை இல்லாமல், வாழ்வின் அர்த்தமே தெரியாமல், வாழ்வைப் பலர் முடிக்கின்றனர்; வாழ்வை வீணடிக்கின்றனர்" என்கிறார் லாட்சு.

வாழ்க்கை ஒரு வாய்ப்பு.

வளர்ந்தவர்கள் — ஞானிகள் — உலக ஞானத்தை வைத்துக்கொண்டு 'தான் யார்' தன்னை இயக்குவது எது?' என்று ஆராய்கிறார்கள். புலன்களுக்கு அப்பால் செல்கிறார்கள். புலன்களுக்கு அப்பால் ஓர் உலகம் இருக்கிறது. கண்களையும் காதையும் மற்ற புலன்களையும் வெளியே ஓடாதவாறு உள்நோக்கித் திருப்பினோமானால், நமக்குச் சில தெளிவுகள், உண்மைகள் தெரிகின்றன. இதைத்தான் "தன்னை அறியும் அறிவு" என்கிறார் திருமூலர். இந்தக் கருத்தைத் திருமூலர் எழுத்திலிருந்து கேளுங்கள்.

பார்ப்பான் அகத்தில் பால் பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பால் பசு ஐந்தும் பாலாய்ச் சொரியுமே.

பார்ப்பான்-பார்க்கின்றவன்-காண்பவன் மனதிலே, அமிர்தமான பாலைச் சொரியும் ஐம்புலன்கள் என்னும் ஐந்து பசுக்கள் உள்ளன. இன்று அவற்றைக் கட்டுப்படுத்துவார் இல்லை; தறிகெட்டு வெறியோடு ஓடுகின்றன. சரியானபடி மேய்ப்பவர்கள் இருந்து அவற்றைக் கட்டுப்படுத்தினால் அவை ஐந்தும் நிரந்தர அமிர்தத்தை, நிரந்தரமான பேரின்பத்தைத் தரும் என்கிறார்.

வளர்ந்தவர்கள் கண்களால் காண்பதில்லை; உள்ளுணர்வால் உணர்ந்து கொள்கிறார்கள். 'எது சரியான முடிவு? எது உண்மை?' என்பதை அவர்கள் உள்ளுணர்வு அவர்களுக்குக் காட்டி உதவுகிறது.

மாபெரும் விஞ்ஞானி ஐன்ஸ்டைன் தனது இரண்டு கண்டுபிடிப்புகளும் உள்ளுணர்வு தந்தவை என்கிறார்.

இந்த உள்ளுணர்வு இன்று அமெரிக்க நிர்வாகத்தில் மிக அதிக முக்கியத்துவம் பெற்று வருகிறது. வெற்றி பெற்ற தொழிலதிபர்கள் ஒரு சர்வேயில் தங்கள் பிரச்னைகளுக்கு உள்ளுணர்வு மூலம் தீர்வுகளைக் கண்டதாகத் தெரிவிக்கிறார்கள். அதுதான் தாங்கள் பெற்ற வெற்றிக்குக் காரணம் என்கிறார்கள்.

எல்லாம் சரி, எப்படி இந்த உள்ளுணர்வைப் பெறுவது?

ஒரு பொருள் அல்லது பிரச்னை பற்றிய எல்லாத் தகவல்களையும், எல்லாக் கோணங்களிலிருந்தும் ஆராயுங்கள். தகவல்களைச் சேகரியுங்கள். அவற்றை மனதில் போடுங்கள்.

அதன்பிறகு மறந்துவிடுங்கள்.

அதாவது, உங்கள் வேலையை வழக்கம் போல் சகஜமாகச் செய்து கொண்டிருங்கள். எனினும் உங்கள் மனத்துக்குள் இதற்கொரு தீர்வு வேண்டும் என்பது அடி நீரோட்டமாக இருக்கிறது.

மனம் எங்கோ சென்று, எதனுடனோ தொடர்பு கொண்டு சரியான வழியைக் கண்டுபிடிக்க அவகாசம் கொடுங்கள். அது சில நிமிடங்களாகவோ, சில மணிகளாகவோ, சில நாட்களாகவோ இருக்கலாம்.

நாம் வேறு ஏதாவது வேலையில் ஈடுபட்டிருக்கும் போது திடீரென்று ஒரு 'ஐடியா' மனதில் தோன்றும்.

அதுதான் உள்ளுணர்வு தரும் விடை, பதில், முடிவு. உள்ளுணர்வு தரும் முடிவுக்கு எந்தவிதமான காரணமும் இல்லை. "எனக்கு இப்படித்தான் படுகிறது" என்கிறோம். காரண காரியத்தைக் கடந்து எங்கிருந்தோ வரும் முடிவுதான் உள்ளுணர்வு. இது நடைமுறைக்கு ஏற்றதா என்று பார்த்து விட்டுச் செயல்படுங்கள்.

8

யாரும் வீணாகக் கூடாது



கவிதை

நல்ல ஓட்டக்காரர்
பாதையின் எல்லையை விட்டுச்
செல்வதில்லை.
நல்ல பேச்சு
குறை சொல்ல முடியாத ஒன்று.
நல்ல கணித விடையை
ஒப்பிடத் தேவை இல்லை.
நல்ல பூட்டுடன் எதையும்
இணைக்கத் தேவை இல்லை
அதைத் திறக்க முடியாது.
இயல்பான முடிச்சு, கயிற்றால்
போடப்பட்டதாகத் தெரியவில்லை.
எனினும் அவிழ்த்துவிட முடியாது.
பண்பாளர்கள் பிறருக்கு உதவ
முனைகிறார்கள்
யாரும் வீணாகக்கூடாது என்பதால்.

பொருட்களைப் பாதுகாக்க
முனைகிறார்கள்
எதுவும் வீணாகக் கூடாது
என்பதால்.

இதுதான் உலக ஞானம்
எனப்படுகிறது.

நல்ல மனிதன் அறியாதவனுக்கு
ஆசிரியனாக அமைகிறான்
இல்லாத மனிதனோ நல்லவனுக்குப்
பயன்படுகிறான் – மாணவனாய்
அறிஞர்களைச் செல்வமாகப்
போற்றாதவர்களும் சரி
கையிருப்பை உபயோகிக்கத்
தெரியாத படித்தவனும் சரி
புத்திசாலிகளாக இருக்கலாம்;
ஆனால் அவர்கள்
இருப்பதை 'இல்லாதது' என்று
இழக்கும் ஏமாளிகள்
இதுதான் வாழ்வின் முக்கியமான
ரகசியம்.

விளக்கம்

முடிச்சுப் போடுகிறோம். முடிச்சில் எந்த நூலை இழுத்தால் முடிச்சு அவிழும் என்பது தெரியவில்லை. எல்லாம் ஒன்றுடன் ஒன்று இணைந்து இயல்பாக கயிறோடு கயிறாக இருக்கிறது. பண்பாளர்களும் அப்படித்தான். இயற்கையுடன் ஒன்றி இயல்பாகச் செயல்படுகிறார்கள். அதிலே ஒரு முழுமை, நிறைவு, ஒரு பூரணத்துவம் நிலவுகிறது. இயற்கை தானே மலர்வது போலக் காரியங்கள் நிகழ்கின்றன. இரண்டும் இரண்டும் நாலு என்று பெருக்கினாலும், கூட்டினாலும் அந்த விடைக்கு மற்றொரு மாற்றுவிடை இருக்கமுடியாது.



அது முடிவான பதில். அத்தகைய சரியான காரியங்களைத் தீர்க்கமாகச் செய்கிறார்கள் பெரியவர்கள்.

அத்துடன் வேறொரு முக்கியமான காரியமும் செய்கிறார்கள். இயற்கை எந்தப் பொருளையும் வீணாக்குவதில்லை. மாட்டுக் கழிவுகூட உரமாகிறது. அதன் மாற்றத்தில் புழுக்கள் உயிர்வாழ இடமளிக்கின்றது. சேறும் மண்ணும்கூட செந்தாமரையைத் தோற்றுவிக்கின்றன.

அதேபோல, பண்பாளர்கள் பிறருக்கு உதவுகிறார்கள். ஏன்? அதுவும், யாரும் வீணாகக்கூடாது என்பதால்! மத்தாப்பைக் கொளுத்தும் குழந்தை ஏழைச் சிறுவன் கையில் அதைக் கொடுத்துக் கொளுத்தச் சொல்வதைப் போல. ஏழையும் அந்த இன்பத்தை இழந்துவிடக்கூடாது என்ற அந்தக் குணம் பண்பின் உயர்நிலை.

இன்னொருவன் வீணாகக்கூடாது என்று கிராமங்களில் திண்ணைப் பள்ளிக்கூடம் நடத்துகிறார்கள் — ஓர் ஏழைச் சிறுவன்/சிறுமி வீணாகிவிடக்கூடாது. அவனால் ஏற்படும் பயனை உலகம் இழந்துவிடக் கூடாது என்பதால்.

கடலின் உப்புநீரை வைத்துக்கொண்டு என்ன செய்ய முடியும் பூமியில் உள்ளவர்கள்? அது ஆவியாகி மழையாகப் பெய்கிறது. வீணாவதில்லை. ஒரு தென்னங்கன்று ஓராயிரம் காய்களைக் கொடுக்கிறது.

பண்பாளன் ஏன் மற்றவனுக்கு உதவுகிறான்? பெருமைக்காகவா? நன்றியை எதிர்பார்த்தா? இல்லை. என் அறிவும் திறமையும் வீணாகாமல் உதவ வாய்ப்புக் கிடைத்ததே என்று பெருமை கொள்கிறான். குழந்தையை வளர்க்க எவ்வளவோ தியாகங்கள் செய்கிறாள் தாய். எதை எதிர்பார்த்து? எதுவுமில்லை! தன்னலமில்லாது செயல்படும் உள்ளத்தை எனக்கு என் குழந்தைப்பேறு கொடுத்ததே என்று மகிழ்கிறாள் அன்னை.

நல்ல மனிதன் அறியாதவனுக்கு ஆசிரியனாக இருக்கிறான். இல்லாதவனோ நல்லவனுக்கு மாணவனாகப் பயன்படுகிறான். பரஸ்பர உதவி. இதில் எங்கே வந்தது ஆணவம்?

இன்றைய நடுத்தர வர்க்கத்தில் படிப்பும், செல்வமும், நிறைவாழ்வு அனுபவமும் பெற்றவர்கள் நிறைய இருக்கிறார்கள். பெரும்பாலோர் கையிருப்பை உபயோகிக்கத் தெரியாதவர்களாக — இருப்பதை இல்லாதது என்று எண்ணும் ஏமாளிகளாக — வாழ்கிறார்களே — வாழ்வின் ரகசியத்தை உணராமல் — என்று துக்கிக்கிறார் ஞானி லாட்சு.

9

லட்சியம் முக்கியம், பிரதாபம் அல்ல



கவிதை

பிரபஞ்ச நியதியைப் புரிந்துகொண்ட
அமைச்சர்கள்
வலிமையில் பெருமைகொண்டு
வழிகாட்டுவதில்லை.
வகுக்கும் வியூகங்கள்
வெற்றியைத் தருவதில்லை.
அதனால் படைகள்
பின்வாங்கித் தோற்கின்றன.

ராணுவப் படைகளைச் சரியான
இடத்தில் நிறுத்தினால்கூட முட்புதர்கள்
வழிநெடுகில் தோன்றுகின்றன.
பெரிய ராணுவப் படையால் –
செலவால் –
நாடே பஞ்சத்தால் பசியால் வாடுகிறது.

நல்லவனோ தன் நோக்கம்
ஈடேறியவுடன்
போரை நிறுத்திக்கொள்கிறான்.

அவன் வெற்றியை
வலியுறுத்துவதில்லை.
காரியம் நிறைவேறியபின் தற்பெருமை
பேசுவதில்லை.
விழா எடுப்பதில்லை.

எதிரியின் தோல்வியை
விவரிப்பதில்லை.
எதிலும் அளவு மீறுவதில்லை.

அவன் லட்சியம் ஈடேறியது என்றால்
அத்துடன் விஷயம் முடிந்துவிட்டது.

அதற்குமேல் வலிமையோ
வன்முறையோ ஏன்?
தேவைக்கு மேற்பட்ட வளர்ச்சி
சரிவில்தான் முடியும்.
தேவைக்கு மேற்பட்ட வளர்ச்சியைப்
பிரபஞ்சத்தில் பார்க்க முடியாது
எது பிரபஞ்ச நியதியற்றதோ
அது நிலைப்பதில்லை.

விளக்கம்

உலகில் இன்று பல இடங்களில் போர் நடக்கிறது. இதுவன்றி உள்நாட்டுப் போர், கலவரம், சண்டை. பதவியின் உச்சியில் ஏறியவுடன் தலைவர்களும், அவருக்கு ஆலோசனை கூறுபவர்களும் வலிமையை வைத்துக் கொண்டுதான் நியாயம் பேசமுடியும்; உடன்பாடு காணமுடியும் என்கிறார்கள்.

எதிரிகள் முட்டாள்களல்ல. அடுத்த போருக்குத் தயாராகிறார்கள். தங்கள் வலிமையைக் கூட்டுகிறார்



கள். உதாரணமாக, இந்தியா-பாகிஸ்தான் போரும் அணு ஆயுதமும், சிறிய நாடான பாகிஸ்தானையும் அணு ஆயுதக் குவிப்பில் இறக்கியது. இலங்கை

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் நடக்கும் போர் வெடிகுண்டிலிருந்து ஏவுகணை வரை வந்துவிட்டது.

நாட்டு மக்களின் நலனுக்குச் செலவிடப்பட வேண்டிய பணம் ராணுவத் தளவாடங்களில் செல் கிறது. மக்கள் ஏழைகளாகிறார்கள்; கஷ்டப்படுகிறார் கள்.

ராணுவப் பலத்தை உபயோகித்து வெற்றிகாண முடியும் என்று வியட்நாம் போரில் அமெரிக்க நாட்டின் மூன்று ஜனாதிபதிகள் ஈடுபட்டார்கள். மூக்குடை பட்டார்கள். ஜான் கென்னடிக்கு ராணுவக் காரியதரிசி யாக, ஆலோசகராக இருந்த ராபர்ட் மக்நமாரா, 'ராணுவத்தினால் வெற்றிபெறலாம் என்ற தவறான ஆலோசனையைச் சொன்னேன்' என்று தன் வாழ்க்கை வரலாற்றில் எழுதுகிறார்.

போரின்றி வன்முறையின்றியும் உங்கள் லட்சி யத்தை ஈடேற்றிக்கொள்ளலாம். அது போர் மூலம்தான் ஈடேற வேண்டும் என்பதல்ல. அப்படிப் போரிட நேர்ந்தாலும் 'நோக்கம் நிறைவேறும்போது போரை நிறுத்திவிடுங்கள். எதிரியைக் கேவலப்படுத்தாதீர்கள். வெற்றியைப் பிரகடனப்படுத்தாதீர்கள். தற்பெருமை பேசாதீர்கள்' என்கிறார்.

தேவைக்கு மேற்பட்டு ஒரு அடிகூட முன்னேறா தீர்கள்; தேவைக்கு மேற்பட்டு ஒரு குண்டுகூடத் தேவை இல்லை. ஆணவத்தைக் காட்டாதீர்கள். எதிரியிடம் பெருந்தன்மை காட்டுங்கள். ஏனெனில், தேவைக்கு மேற்பட்ட வளர்ச்சி சரிவில்தான் முடியும் என்கிறார் லாட்சு.

'காந்தி' படத்தை தான் எடுத்ததற்குக் காரண மாகத் தான் படித்த ஒரு சம்பவத்தைக் கூறுகிறார்

பிரிட்டிஷ் பட டைரக்டர் அட்டன்பரோ. "மோகன் தாஸ் காந்தியும் அவரது உதவியாளரும் டர்பன் நகர் தெருவில் நீதிமன்றம் நோக்கிப் போய்க் கொண்டு இருக்கிறார்கள். எதிரே மூன்று வெள்ளைக்கார இளைஞர்கள் வருகிறார்கள். உதவியாளர், 'நாம் சாலை யோர நடைபாதையில் நடப்பதை இந்த இளைஞர்கள் சகிக்கமாட்டார்கள். நம்மை அடித்து நொறுக்கி விடுவார்கள். சாலையில் இறங்கி நடப்போம்' என்கிறார். காந்தி ஒரு கணம் யோசிக்கிறார். 'பேசாமல் என்னுடன் நடந்து வாருங்கள்' என்று சொல்லி நடக்கிறார். அந்த இளைஞர்கள் எந்தச் சந்தடியுமின்றி கடந்து செல் கிறார்கள். காந்தி தனக்கேற்பட்ட அனுபவத்தைத் தன் வாழ்க்கை வரலாற்றில் எழுதுகிறார்: 'பிறரைத் தாழ்த்து வதன் மூலம் எப்படி மற்றவன் உயரமுடியும் என்று எனக்குப் புரியவில்லை' என்று. இந்த வாசகம் என்னைப் பெரிதும் தொட்டது. இதுதான் நான் 'காந்தி' படத்தை எடுக்கக் காரணம்."

லாட்சுவின் கருத்துகளை மகாத்மா காந்தியின் வாழ்க்கையைவிட வேறெதுவும் அவ்வளவு அழகாக எடுத்துக் காட்டிட முடியாது. எதிரியைத் தாழ்த்துவதில் என்ன லாபம்? அது வெறும் ஆணவம்தான்.



10

புரிந்து கொள்ள முடியாத ஞானிகள்

கவிதை

பழம்பெரும் ஞானிகள் நம்மால்
புரிந்துகொள்ள
முடியாதவர்கள்,
திகைப்பூட்டுபவர்கள்.
ஆழமும் நுட்பமும் நிறைந்த
மேதைகள்.

உள்ளுணர்வு கைவரப்
பெற்றவர்கள்,
அவர்கள் அடக்கமாயிருப்பதால்
அவர்கள் ஆழம் தெரிவதில்லை.
அவர்களை வெளிஉலகம், உள்ளே நடப்பதை
புரிந்துகொள்ள. முடியாததால்
வெளியே தெரியும் அவர்களது
செயல்களை மட்டுமே
சொல்ல வேண்டியிருக்கிறது.
அவ்வளவு கவனம் –
ஓடையின் குறுக்கே
பனிக்காலத்தில்



பனிப்படலம் மீது
நடப்பவனைப் போல் –
மென்மையான பெருந்தன்மை.
சமுதாயத்தில் எங்கு பார்த்தாலும்
இல்லாமை இருப்பது போல –
கனிவான உள்ளம்.
பனிக்கட்டி உருகத்
தயாராயிருப்பது போல –
அடக்கம்.
கல்யாண வீட்டில் ஆசி கூற
வந்தவர் போல –
எளிமை.

உளியினால் தொடப்படாத
மரம் போல –
திறந்த மனம்.
பரந்து கிடக்கும் பள்ளத்தாக்கு போல.

ஓடுவதோ கலங்கிய சேறாக
அடங்கியவுடன் தெரிவதோ
தெளிந்த நீராக
இருப்பதோ அமைதியாக
பழகுவதோ சான்றோராக,
சகஜமாக,
பிரபஞ்ச இயக்கத்தில்
ஒன்றியவர்கள் இன்னும்
வேண்டும் என்ற
ஆசை இல்லாதவர்கள்.
நிரம்பாமலிருந்தாலும் எடுக்க
எடுக்கக் குறையாத நில ஊற்றுப்
போல.

விளக்கம்

ஒரு கற்றுணர்ந்த பண்டிதர், ஒரு புத்தஞானியைப் பார்க்க வருகிறார்.

"தேநீர் பருகுகிறீர்களா...?" என்று கேட்கிறார் புத்தஞானி.

"ஆகா!" என்கிறார் பண்டிதர்.

கிண்ணத்தில், தேநீரை ஊற்றுகிறார் ஞானி. கிண்ணம் நிரம்பி வழிகிறது.

"போதும், போதும்... நிரம்பி வழிகிறது..." என்கிறார் பண்டிதர்.

"நிரம்பி வழிகிறது. ஏனெனில், அங்கே காலி இடம் இருந்தால் அல்லவா, அது எடுத்துக்கொள்ள முடியும்...?" என்கிறார் ஞானி.

பிறர் சொல்வதைக் கேட்கச் செல்லும் நாம், திறந்த மனத்துடன் செல்ல வேண்டும். அவரைப் பற்றியோ, அவர் சொல்வதைப் பற்றியோ முன்னதாகவே ஓர் அபிப்பிராயத்தை உருவாக்கிக் கொண்டு உட்கார்ந்தோமானால், நம்முள் எதுவும் நுழையாது. பிறர் சொல்கிற உண்மை புரியாது. நாம் ஏதும் கற்றுக் கொள்ளமாட்டோம்; வளரமாட்டோம்.

பயிற்சி முகாமுக்கு வருபவர்களுக்கு நோட்டும் பேனாவும் கொடுக்கப்பட்டிருக்கும் — குறிப்பெடுத்துக் கொள்ள. ஆனால், அவர்கள் பேசாமல் எல்லாம் காதில் வாங்கிக்கொண்டால் போதும் என்று உட்கார்ந்திருப்பார்கள். 'நான் ஒன்றும் பள்ளி மாணவன் அல்ல, குறிப்பெடுக்க...' என்ற நினைப்புடன்; 'என்ன சொல்லி விடப் போகிறார்...?' என்ற அலட்சியத்துடன்.

திறந்தமனம் கொண்டவர்கள் முன்னேறுகிறார்கள். மற்றவர்களது அனுபவங்களையும் அறிவையும் பயன்படுத்துகிறார்கள்.

ஞானிகளுக்கு எங்கும் எதைப் பார்க்கும்போதும் திறந்தமனம் — பரந்து கிடக்கும் பள்ளத்தாக்கு போல. அருகிலே ஓடை, சுற்றி மலைகள், எங்கும் மரஞ்செடி கொடிகள், புல், பூண்டுகள். பள்ளத்தாக்கு இன்னும் நிறைய மழையை வாங்கிக்கொள்ளும். வெயிலைத் தாங்கிக்கொள்ளும்.

இந்த ஞானிகளிடம் பல்வேறு சித்திகள் இருக்கின்றன. எப்படிச் செய்கிறார்கள்? நம்மால் புரிந்து

கொள்ள முடிவதில்லை. எனவே, நமக்குத் திகைப்பை, வியப்பை அளிக்கிறார்கள்.

ஆனால், அவர்களும் நம்மைப் போல் இவ்வுலகில் வாழும் மனிதர்கள். ஞானிகளது திகைப் பூட்டும் சித்திகளின் அந்தரங்கங்கள் நமக்குப் புரிவதில்லை. எனவே, நாம் அவர்களது உலக நடவடிக்கைகள் மூலம்தான் அவர்களைப் புரிந்து கொள்கிறோம்.

அப்படியானால், அவர்களுடைய உலக நட வடிக்கைகள் என்ன? இது நமக்கு உபயோகப்படக் கூடும்.

பனிக்காலத்தில் இமயமலைப் பிரதேசத்தில் ஏரித் தண்ணீர் உறைந்து பனிக்கட்டி ஓரடி, இரண்டடி ஆழத்துக்குப் பாறையாக மூடியிருக்கும். பனி துவங்கும் காலத்தில் பனிப்படலமாக இருக்கும். காலை வைத்தால் உடையும்; உள்ளே போகவேண்டியதுதான்! பனிப் படலத்தில் நடப்பதற்குக் கவனம் வேண்டும்.

வாழ்வும் அப்படித்தான். செய்கிற ஒவ்வொரு காரியத்தையும் கவனத்துடன் செய்ய வேண்டும். தொழில் உற்பத்தியிலும் கவனம் இருந்தால்தான் பொருளின் தரம் பாதுகாக்கப்படும். கவனம் என்பது (Concentration - Attention), நடக்கிற காரியத்தில் அதே நினைவோடு செய்வது. தியானப்பயிற்சி இந்தத் திறனை நமக்கு அளிக்கிறது.

அறிஞர்கள், வாழ்க்கையை, உன்னதத்தை நோக்கிய பயணம் என்கிறார்கள். உன்னதமான வாழ்வு வாழ்வதற்கும் ஏதோ வாழ்ந்தோம் என்று வாழ்வதற்கும் வித்தியாசம் வெகுகுறைவு. இதைப் பலர் உணர்வதில்லை. கவனம்! நம்மை நாமே கவனிக்க வேண்டும். நமது வளர்ச்சியை, நமது மனோபாவத்தை, நாம் திறந்த

மனத்துடன் கவனித்துத் திருத்திக்கொண்டே போனால் தான் வளர்ந்தவர்களாக முடியும்.

கவனம் என்பது ஒரு முக்கியமான திறன். இதைப் புத்தஞானிகள் 'இப்போது இங்கேயே இரு' (Be here now) என்பார்கள்.

புத்தர் கூறும் எட்டுவழிப் பாதையில், நிகழ் காலத்தில் வாழ்வதை — சாப்பிடும்போது சாப்பாட்டில் கவனம் செலுத்துவதை, நடக்கும்போது நடப்பதில் கவனம் செலுத்துவதை — `Mindfulness' என்பார்கள். நல்வாழ்வின் எட்டு அம்சங்களில் இது ஒன்றாக இருக்கிறதெனில், இது எவ்வளவு பெரிய விஷயம்! வாழ்வில் செம்மை பெற எவ்வளவு உபயோகமான விஷயம் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

உலகின் யதார்த்த நிலையைச் 'சேறு' என்று கூறுகிறார் ஞானி லாட்சு. அதனுள் விரிந்து கிடக்கும் அமைப்பின் அழகை — அதாவது, அதற்குள்ளே தெளிந்த நீர் இருக்கிறதென்ற உண்மையை — புரிந்து கொள்வதென்றால், நாம் அத்துடன் இரண்டறக் கலக்க வேண்டும். உள்ளுணர்வைப் பயன்படுத்தும்போது, உலக வாழ்க்கை எனும் சேறு தெளிந்த நீராக மாறுகிறது. மனிதன் தெளிவு பெறுகிறான்.

வளர்ந்தவர்கள் தங்களது அறிவையும் திறமையையும் அனுகூலங்களையும் காட்டிக்கொள்வதில்லை. ஏன்? அப்போதுதான் அவர்களது சக்தியும் செல்வாக்கும் பெரும்பயனை, நல்விளைவுகளை ஏற்படுத்துகின்றன. அடக்கத்துக்கு மாறாகத் தற்பெருமை பேசலாம். "தற்பெருமை என்பது நமது பாதுகாப்புக் கவசத்திலே ஓட்டை போடுவது போல" என்கிறார்

ஸ்ரீ அரவிந்த அன்னை. கப்பல்தான்! ஓட்டை விழுந்தால் என்ன ஆகும்?

வளர்ந்தவர்கள் உலகின் விருந்தினர் போல நடந்து கொள்கிறார்கள் என்கிறார். கல்யாண வீட்டுக்குச் சாட்சியாகப் போகிறோம்; பார்வையாளராக ஆசி கூறப்போகிறோம். அதேபோல, உலகில் நடக்கும் சம்பவங்களுக்கும் நம் வாழ்வில் நடக்கும் சம்பவங் களுக்கும் நாம் சாட்சியாக இருந்தோமானால், நம்மை எதுவும் பாதிக்காது. புலன்கள் பாதிக்கின்றன. அவற்றின் தூண்டுதல்களுக்கு உட்படாதே. 'ஓ! நீ தூண்டுகிறாயா என்னை..?' என்று சொல்லிக் கொண்டு சாட்சியாக, பார்வையாளனாக இரு என்கிறார் ஞானி லாட்சு.

அன்றாட வாழ்வையும் — ஆன்மீகத்தின் உச்ச நிலையையும் எப்படி உவமை கூறி இணைக்கிறார் என்பதைக் கவனியுங்கள்.

11



உங்களை நேசியுங்கள்

கவிதை

பிறர் தரும் ஆதரவும் ஒருவிதத்தில்
அவமதிப்பு போன்றதுதான்.

என் ‘சுயகௌரவம்’
பாதிக்கப்படுகிறது. உள்ளே
அச்சமும் எழுகிறது.

உயர்பதவியுடன் ‘நான்’ என்ற
ஆணவம் சேர்வதால், துன்பத்தைக்
கொண்டு வருகிறது.

எனவேதான் அவை எச்சரிக்கைகள்
என்கிறோம்.

எச்சரிக்கை என்றால்
என்ன பொருள்..?

சகாயத்தைப் பெறும்போதும் ‘நான்’,
என் சுயகௌரவம்
பாதிக்கப்படுகிறது.

சகாயம் நீக்கப்படும்போதும் ‘நான்’
என் சுயநலம் பாதிக்கப்படுகிறது.

உயர்பதவியும் அப்படித்தான்;

'நான்' சேர்கிறேன். என் சுயநலமும்
ஆணவமும் சேர்கின்றன.

நான், 'நான்' என்பது பற்றி
அக்கறைப்பட்டால் தன்னலமற்று
இருந்தேனானால், ஏன் துன்பப்பட
வேண்டும்..?

தன்னைப் போலவே உலகை
உயர்வாக எண்ணுபவர்கள்,
உலகுக்குத் தங்களை அர்ப்பணித்துக்
கொள்கிறார்கள்.

தன்னைப் போலவே உலகை
நேசிப்பவர்களிடம் உலகைப்
பாதுகாக்கும் பொறுப்பு
ஒப்படைக்கப்படுகிறது.

விளக்கம்

சில வரிகளில் மிக நுட்பமான கருத்துக்களைப் பூடகமாக, மறை பொருளாக, ஞானி லாட்சு வைத்திருக்கிறார்.

நமக்குப் பிரச்னைகள் வரும்போது நாம் கலங்குகிறோம்; வளமை உள்ளவர்களை அண்ணாந்து பார்க்கிறோம். பிறர் நமக்கு ஆதரவு தருகிறார்கள்; உதவி செய்ய முன்வருகிறார்கள். நாம் மகிழ்கிறோம்.

என்ன நேரிடுகிறது நமக்கு?

என்னிடம் 'நான்' என்ற சுய கௌரவம், தனித்தன்மை இருக்கிறது. பிறர் ஆதரவை நான் ஏற்கும் போது,



என் சுயகௌரவம் பறிபோகிறது; என் சுதந்திரம் பறிபோகிறது. என்னுள் அச்சம், நாணம் எழுகிறது. 'நான் பிறரது கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டேனோ?' என்று நெளிகிறேன்.

சுயகௌரவமுள்ள மனிதன், தன் காலில் நிற்கிறான். பிறரைச் சார்ந்து நிற்பதில்லை. தன் தனித் தன்மையைக் காப்பாற்றுகிறான்.

சுயகௌரவம் நம்மைத் தனித் தீவாக — பிற மனிதர்களிடமிருந்து பிரித்து — ஒற்றைப் பனைமரம் போல நிற்கச் செய்து விடுவதில்லை. இவ்வுலகில் ஒவ்வொரு மனிதனுக்கும் சுயதர்மம் என்ற ஒன்றிருக்கிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் 'சுயகௌரவம்,' சுயமரியாதை இருக்கிறது.

"குழந்தைகளைக் கௌரவம் கொடுத்து வளருங்கள். அப்போது, அவர்கள் நீங்கள் எதிர்பார்க்கும் அளவுக்குப் பெரிய மனிதர் போல உயர்குணங்களுடன் நடந்துகொள்கிறார்கள்,' என்று கலிபோர்னியா பல்கலைக்கழக ஆராய்ச்சி நிரூபிக்கிறது.

இவ்வுலகில் மனிதன் தனித்தும் வாழ்கிறான்; இணைந்தும் வாழ்கிறான். ஒன்றை ஒன்று பாதிப்பதில்லை. நாம் திருமணம் செய்துகொண்ட, நம்முடன் ஒன்றான மனைவி ஆனாலும் அவருக்கென்று தனிக் கௌரவம், தனித் தன்மை, தனி மரியாதை இருக்கிறது. அதை மதிக்காத தாம்பத்திய வாழ்க்கை எங்கும் போவதில்லை. இனிமை தருவதில்லை.

இந்தப் பாடலுக்கு விளக்கம் எழுதுபவர்கள், இது நாட்டுக்கும் பொருந்தும் என்று விளக்குகிறார்கள்.

ஒரு நாட்டின் தலைவன், மக்களைத் தங்கள் காலிலே நிற்கச் செய்ய வேண்டும். அவர்களுக்குச் சகாயம் செய்பவர்களாக, ஆதரவு தருபவர்களாகச் சலுகைகளைக் கொடுக்கும்போது, சார்ந்து நிற்கும் ஒரு சமுதாயத்தை உருவாக்குகிறான். சுயகௌரவம் இழந்து, பிறர் கையை எதிர்பார்க்கும் மனோபாவம் கொண்ட சமுதாயத்தை உருவாக்குகிறான். இது மனிதனுடைய தனித்தன்மையின், — சுயகௌரவத்தின் — மண்டையில் அடிக்கிறது. அவனது சுயமுயற்சியைக் குறைக்கிறது. மறுபடியும் சகாயங்களை, சலுகைகளை நீக்கும்போது, அவர்கள் அதை எதிர்க்கிறார்கள். சலுகைகளை மக்கள் உரிமைகள் என்று எடுத்துக்கொள்வதை நாம் நம் நாட்டிலேயே பார்க்கிறோம்.

நமது தலைவர்கள் தெரிந்தே செய்கிறார்கள். அவர்களுக்குச் சமுதாயத்தைப் பற்றி, தனிமனிதனின்

சுயகௌரவத்தைப் பற்றி ஏதும் அக்கறை இல்லை. அவர்களுக்கு தேர்தலில் ஓட்டுக் கிடைக்கும் என்கிற கணக்குதான்.

லாட்சு ஒரு நுட்பமான விஷயத்தை மேலும் கூறுகிறார். 'ஒரு நாட்டை ஆள்பவன், தனது உயர் பதவியைத் தனது உடல் போலப் பாவிக்க வேண்டும்' என்ற பொருள்பட எழுதுகிறார். தனது உடலை எப்படிப் பேணிப் பாதுகாப்பானோ, அப்படி மக்களைக் காக்கவேண்டும்.

சுயகௌரவம் அரசனுக்கு — தலைவனுக்கு — மட்டுமல்ல; தனிமனிதனுக்கும் அந்த உரிமை உண்டு. மனிதன் வெறும் சோற்றால் வாழ்பவன் அல்ல; சோற்றுக்குமேல் அவனுக்குத் தன்னைப் பற்றிய கௌரவம் இருக்கிறது; ரோஷம் இருக்கிறது.

வள்ளுவர் இதையே -

'மயிர்நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்'

என்கிறார்.

மனிதர்களுடைய சுயகௌரவத்தை இழக்கச் செய்யும் காரியங்களை ஒரு தலைவன் செய்யக்கூடாது என்கிறார். ஏனெனில், தன்னைப் போலவே உலகை உயர்வாக எண்ணுபவர்களை அவன் உருவாக்க வேண்டும். அவனுக்கு மக்களையும் உலகையும் பாது காக்கும் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று எழுதுகிறார். அவனுக்கு எதிர்காலச் சமுதாயத்தையும் காக்கும், உருவாக்கும் பொறுப்பு இருக்கிறது.



12

சரிவைத் தவிர்க்கலாம்!

கவிதை

நிரம்பிக்கொண்டிருக்கும் கிண்ணம் வழிகிறது.
கூர்மையான கத்தி மேலும் தீட்டப்படும்போது மழுங்குகிறது.
பொன்னையும் மரகதத்தையும் பூட்டி வைத்தாலும் பத்திரம் ஏது?
பணம் பதவி புகழுடன் வரும் ஆணவம்
சரிவை நோக்கி நம்மை சாய்க்க காத்துக்கொண்டிருக்கிறது.
காரியம் முடிந்தவுடன் கழற்றிக்கொள்; இறங்கிவிடு.
இதுதான் இயற்கை காட்டும் பிரபஞ்ச உண்மை.

விளக்கம்

எல்லாவற்றுக்கும் ஓர் எல்லை இருக்கிறது. விஞ் ஞான உலகில், ஒரு காலத்தில் ஒளிக்கதிர், நேர்கோடு போலப் போகிறது என்றார்கள். ஐன்ஸ்டைன் காலத்தில் 'இல்லை, ஒளிக்கதிர்கூட வளைகிறது' என்று கண்டார் கள். எல்லாவற்றுக்கும் ஓர் எல்லை இருக்கிறது; ஓர் எதிர்சக்தி இருக்கிறது.

மனைவி அன்போடு, ருசியோடு சமைத்திருக்கிறார். நீங்களோ கொஞ்சமாகச் சாப்பிடுகிறீர்கள். மனைவி, ''இவ்வளவு கொஞ்சமாக சாப்பிடத் தான் இவ்வளவு வேலை செய்தேனா?'' என்கிறார். அவருக்காகச் சாப்பிட்டு விட்டுக் கஷ்டப்பட முடியுமா?

எல்லாவற்றிலுமே மிதமான நிலை ஒன்று இருக்கிறது. அதுதான் இதமான நிலை.



அதற்கு மேலும் செல்வோமானால் அழிவும் அவகேடும் தான்.

குறிப்பாக ஆட்சியாளர்களும் நிர்வாகிகளும் தெரிந்துகொள்ள வேண்டிய முக்கியப் பாடம் இது — அடக்கம், எளிமை, ஆணவமின்மை. இதைக் கடைப் பிடிப்பது எளிதல்ல.

இந்த ஆணவம் என்பது மனிதனுடைய தேவை யாக, ஆசையாக, குணமாக, பழக்கமாக மாறிவிடும் அபாயம் இருக்கிறது.

மனிதனுடைய தேவைகளை வரிசைப்படுத்து கிறார் மனவியல் அறிஞர் மாஸ்லோ. 1. உணவு, உடை, இருப்பிடம் என்ற அடிப்படைத் தேவைகள். 2. இடி, மின்னல், புயல், வெள்ளம், பூகம்பம், மிருகங்கள் — இவற்றிடமிருந்து பாதுகாப்புத் தேவை. 3. பாராட்டு களினால் நாம் வளர்கிறோம், உயர்கிறோம் என்பத னால் பாராட்டு தேவை. 4. சுய கௌரவத்துக்கான பாரம்பரியப் பெருமை, பண்பாட்டுப் பெருமையின் தேவை. 5. தன் முழுத்திறமைகளையும் வெளிக் கொணர்ந்து நிறைவுடன் வாழும் தேவை.

யோசித்துப் பார்த்தால், இதற்கு மேலும் வாழ்க் கைப் பாதை இரு கிளைகளாகப் பிரிகிறது. ஒரு கிளை யில் மனிதன் தன்னை அறிய முயல்கிறான். இவ்வுலகப் பந்தங்களுக்கு அப்பால் செல்கிறான். மற்றோர் கிளை யில் செல்பவன் — இவ்வுலகப் பந்தங்களில் வாழ்பவன் — பணம், பதவி, புகழ் என்ற படிகளில் ஏறுகிறான்.

'பணம் இருந்தால்தான் எல்லாம் செய்யலாம்' என்று நினைக்கிறான். அடுத்து 'பணம் போதாது; பதவி வேண்டும், பதவியின் அதிகாரம், வேண்டும்' என்று எண்ணுகிறான். மூன்றாவதாக 'பணம், பதவி இருந்

தென்ன? புகழ் வேண்டும்... மக்களால் பாராட்டப்பட வேண்டும்!' என்ற ஆசையினால் ஆட்கொள்ளப்படு கிறான்.

பணம், பதவி, புகழ் என்று பெறும் மனிதனிடம் கொஞ்சம் கொஞ்சமாக ஆணவம் தலைதூக்குகிறது. 'தாங்களே எல்லாம்,' 'எது வேண்டுமானாலும் செய்ய லாம்' என்கிற ஆணவம். 'எந்தத் திருட்டையும் செய்ய லாம்; யாரும் கண்டுகொள்ள மாட்டார்கள்; கண்டு கொள்ள முடியாது' என்கிற ஆணவம்.

மக்களுக்குச் சேவை செய்வேன் என்று வந்த தலைவர்களைக் கவனியுங்கள். ஆப்பிரிக்காவில் இடி அமீன், இந்தோனேஷியாவில் சுகர்த்தோ, அமெரிக்கா வில் நிக்ஸன், பிலிப்பைன்ஸில் மார்கோஸ், நமது ஊரில்..... என்று பட்டியல் நீள்கிறது.

"என்னை யாரும் அசைக்க முடியாது என்று ஒரு தலைவன் எண்ணும்போது, அங்கே வீழ்ச்சியின் வித்து விதைக்கப்பட்டிருக்கிறது" என்று சொல்கிறார் ஜேம்ஸ் ஆலன்.

எனவே, வளர்ந்தவர்கள் — ஊர் உலக நடப்பை அறிந்தவர்கள் — என்ன செய்கிறார்கள்?

"மேலும் போனால் என் பெயர் கெட்டுவிடும்; என் குணம் மாறிவிடும்" என்று பதவியிலிருந்து தங் களைத் தாங்களே கழற்றிக்கொள்கிறார்கள். இப்படி ஏற்படும் என்று எண்ணித்தானோ என்னவோ அமெரிக் காவில் ஜனாதிபதி இரண்டு முறைக்குமேல் பதவி வகிக்கக்கூடாது என்று சட்டம் போட்டிருக்கிறார்கள். இது வெளி நிர்ப்பந்தம்.

வளர்ந்தவர்கள் தங்களுக்குத் தாங்களே உள் நிர்ப்பந்தத்தை, உள் ஒளியை ஏற்றிக்கொண்டு 'காரியம் முடிந்துவிட்டது' என்று இறங்கி விடுகிறார்கள்.

இதை அழகாகச் சொல்கிறார் ஞானி லாட்சு — 'நிரம்பும் கிண்ணம் வழிகிறது; கூர்மையான கத்தி மேலும் தீட்டப்படுமானால் மழுங்குகிறது; பொன்னையும் பொருளையும் சேமித்து வைத்தால் திருடன்தான் வருவான்!' என்று.

நமது பழம்பெரும் ஞானிகளின் அறிவுரைகளைப் பார்த்தால் ஒரு விஷயம் புலப்படுகிறது. அவர்கள் திரும்பத் திரும்ப, "நல்லவனாயிரு" என்று சொல்வதை விட கெட்ட விஷயங்களில் — காமம், பகை, பேராசை, ஆணவம், பொறாமை என்பதில் — மாட்டிக்கொள்ளாதே என்றே சொல்கிறார்கள். வள்ளுவரும் 'மனத்தின் மாசுகளை அகற்று' என்று தீயவற்றை அகற்றுவதுதான் பெரிய காரியம் என்று சொல்கிறார்.

ஏனெனில், தீயவற்றில்தான் மாட்டிக் கொள்கிறோம்; இவற்றை நீக்குவதுதான் கஷ்டமாயிருக்கிறது. நாம் அறிந்தோ, அறியாமலோ இவற்றின் கவர்ச்சியால், உணர்வினால், ஈர்க்கப்படுகிறோம்; ஆட்கொள்ளப்படுகிறோம். நம்மை அறியாமலே நாம் கீழே தள்ளப்படுகிறோம்.

நாம்தான் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்; நம்மை நாமே கண்காணித்துக்கொண்டிருக்க வேண்டும். அப்படிக் கண்காணிப்பது சுலபமல்ல. ஏனெனில், தவறைக்கூட நம் மனம் நியாயப்படுத்தி, தவறான பாதையில் நம்மை இழுத்துச் சென்றுவிடும்!

எனவேதான் ஞானி லாட்சு சொல்கிறார்:

"வந்த வேலை முடிந்ததா? எடுத்துக் கொண்ட காரியம் நிறைவேறியதா? இறங்கிவிடு" என்று. இந்த உண்மையை உணராது ஏறியவர்களில் சரிந்தவர்கள்தான் ஏராளம்!

13



சற்றே விலகி இரும், பிள்ளாய்!

கவிதை

சிறந்த தலைவர்கள், அதிகம் மக்களால்
அறியப்படாதவர்கள்.

அடுத்த நிலை தலைவர்கள்
நேசிக்கப்படுகிறார்கள், பாராட்டப்படுகிறார்கள்.
அதற்கும் அடுத்த நிலையில் உள்ளவர்கள்
அஞ்சப்படுகிறார்கள்.

அதற்கும் பின்னால் உள்ளவர்கள்,
ஏளனத்துக்கும் வெறுப்புக்கும் ஆளாகிறார்கள்.
மக்களிடம் நம்பிக்கை வைத்துக்
காரியங்களைச் செய்யாதவனை மக்களும்
நம்புவதில்லை.
வளர்ந்த தலைவன் அதிகம் பேசுவதில்லை.
மிகுந்த கவனத்துடன்,
எச்சரிக்கையுடன் எல்லாவற்றையும் செய்கிறான்.

தலைவன் வழிகாட்டும்போது,
லட்சியம் நிறைவேறும்போது,
மக்கள் சொல்கிறார்கள்;
'நாங்கள் செய்தோம்' என்று.

விளக்கம்

தலைவன் மக்களிடம் நம்பிக்கை வைத்துத் துணிவுடன் செயல்படும்போது, அவர்கள் அதை ஏற்றுக் கொள்கிறார்கள்; ஒத்துழைக்கிறார்கள். தலைவனுக்குக் கொள்கையில் நம்பிக்கை இல்லாதபோது அது, அவன் சொல்லிலும் செயலிலும் பிரதிபலிக்கிறது. நாடு தேங்கிக் கிடக்கிறது.

மக்கள், குழந்தைகள்போல, நாம் எதிர்பார்க்கிற அளவுக்கு உயர்வார்கள். அமெரிக்க நாட்டில் 1930–வாக்கில் பஞ்சம் வந்தது. பிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட் இரண்டு காரியங்களைச் செய்திருக்கலாம். எல்லோருக்கும் இனாம் கொடுத்து, அவர்களது பஞ்சத்தைப் போக்கியிருக்கலாம் அல்லது வேலை அளித்து, அவர்கள் பசியைப் போக்கியிருக்கலாம்.

ரூஸ்வெல்ட் அரசாங்கப் பணத்தைக் கொடுத்து, நிறைய சாலைகளைப் போடச் சொன்னார். சாலைக்குச் சாலைகளும் ஏற்பட்டன; மக்களுடைய பசியும் பஞ்சமும் போயின.

'அவர்களுடைய சுயகௌரவத்தைக் காப்பாற்றி, உழைக்கச் செய்வது நல்லது' என்றால், மக்கள் உடனே அதை ஏற்றுக் கொள்கிறார்கள்.

'மக்கள் ஏழைகள்! அவர்களுக்கு இனாம் கொடுப்போம்' என்றால், 'இன்னும்...இன்னும்...' என்று எல்லாவற்றிலும் எதிர்பார்க்க ஆரம்பிக்கிறார்கள்.

வேலைக்காரனிடம் ஒரு பொறுப்பைக் கொடுத்து 'இவன் செய்வான்' என்று நம்பி, வாய்விட்டுச் சொல்வோமானால், நம் எதிர்பார்ப்புக்கு ஏற்ப அவன் செய்து முடிப்பான்.



'குழந்தை நன்றாகப் படிப்பான். இந்தத் தடவை குறைந்த மார்க் வாங்கிவிட்டான்' என்று நாம் மனைவியிடம் சொல்லும்போது, 'அப்பா, நம்மைப் பற்றி உயர்வாக எண்ணிக் கொண்டிருக்கிறார்' என்று எண்ணி, குழந்தை நாம் எதிர்பார்க்கும் அளவுக்கு உயர்கிறான். இதுதான் மனோதத்துவம். நடைமுறையில் இதைத்தான் தலைவன் செய்யவேண்டும். மக்கள்மீதும் தனது கொள்கைகள்மீதும் அவனுக்கு நம்பிக்கை வேண்டும்.

நல்ல தலைவன், தன் புகழைப் பாட ஒரு கூட்டத்தை மேடை ஏற்றுவது இல்லை. அடைமொழி

களால் அலங்கரிக்கப்படவேண்டும் என்று ஆணை இடுவதில்லை. வீதிதோறும் கொடிகள் என்றோ, கார் போகுமிடமெல்லாம் கட்-அவுட்டுகள் என்றோ கட்டளை இடுவதில்லை.

அவன் அடக்கமானவன். அதிகம் தன்னை முன்னிறுத்தாதவன். 'இதுதான் நல்லது' என்று தீர்மானித்துச் செயல்படும்போது, மக்கள் உண்மையுடன் அதை ஏற்றுக்கொள்கிறார்கள். அவன் வழி காட்டும் பாதையில் சென்று மக்கள் செய்து முடிக்கிறார்கள். காரியம் நிறைவேறும்போது, 'நாங்கள் தான் இந்தத் திட்டத்தைச் செய்து முடித்தோம்' என்று மக்கள் சொல்கிறார்கள்.

நமது ஊரில் என்ன நடக்கிறது? 'எல்லாம் அரசாங்கம் செய்யவேண்டும்' என்ற எண்ணம். அரசாங்கத்தை எல்லாவற்றிலும் எதிர்பார்க்கும் மனோபாவம். 'அரசாங்கம், மக்கள் கொடுக்கும் வரிப்பணத்தால் செயல்படுகிறது' என்ற உண்மைக்கு மாறாக, 'பணம் எங்கிருந்தோ வருகிறது, அரசாங்கத்திடம் பணம் இருக்கிறது. எதையும் செய்யலாம்' என்று மக்கள் எண்ணும்படி, இங்கே கடந்த பல பத்து வருடங்களாகத் தலைவர்கள் காரியமாற்றுகிறார்கள். அவர்கள் மக்களை நம்பவில்லை. அரசாங்கத்தையும் அரசாங்க இயந்திரத்தையும் நம்பினார்கள். மக்களிடம் பொறுப்பைக் கொடுக்கவில்லை; அரசாங்கத்திடம், அதிகாரிகளிடம் பொறுப்பைக் கொடுத்தார்கள்.

பின் என்ன நிகழும்...?

பள்ளிக்கூடத்தில் வாழ்க்கை நெறிகள் சொல்லிக் கொடுக்கவேண்டுமா, வேண்டாமா என்பதைத் தீர்மானிப்பது பெற்றோரல்ல, ஆசிரியர் அல்ல, அரசாங்கம்!

கடலூருக்கு அருகிலுள்ள கிராமங்களுக்கு உதவ ஓர் அமெரிக்க இளைஞர் வந்தார். பெயர் கேரி ஜேக்கப். ‘கரம்பு நிலம், காய்ந்த மண், தண்ணீர் இல்லை’ என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். ‘ஏன் குழாய் இறக்கித் தண்ணீர் எடுக்கக்கூடாது?’ என்று கேட்டால், ‘பண மில்லை’ என்றார்கள். ‘அதற்காகும் செலவு, நிலத்தி லிருந்து வரும் வருமானத்தைவிட அதிகம்’ என்றார்கள் பலர்.

கிராமத்தில் நிலம் கொஞ்சம் இருந்த ஒரு பெண் மணி முன்வந்தார். அவரை அழைத்துச் சென்று, வங்கி யில் கடன் வாங்கிக் கொடுத்தார் ஜேக்கப். குழாய் இறக்கினார்கள். தண்ணீர் வந்தது. வாழைத்தோட்டம் போட்டார். பணம் வந்தது. நேற்றுக் கரம்பாக இருந்த இடம், இன்று வாழைத் தோட்டமாக பழத் தோட்ட மாகக் கனிந்தது!

ஓரிரு ஆண்டுகளில், எல்லோரும் ‘பம்ப்’ போடத் துவங்கினார்கள். ஒரு ஐந்து ஆண்டுகளில் சுற்று வட்டாரமே மாறிவிட்டது — செல்வச்செழிப்பால்! கேரி ஜேக்கப் சொல்கிறார்: “சில அமெரிக்கர்கள் வந்தார்கள்; இந்த மாற்றத்தைக் கொண்டு காட்டினோம்...”, “எப்படி வந்தது இந்த மாற்றம்...?” என்று ஊர் மக்களிடம் கேட்ட போது, “நாங்கள்தான் செய்தோம். எல்லோரும் கடன் வாங்கி, பம்ப் போட்டோம். தண்ணீர் வந்தது...” என்றார் கள். கேரி ஜேக்கப் செய்ததைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லவில்லை. மக்கள் செய்தார்கள்; ஜனங்கள் செய்தார்கள்; இதுதான் ஜனநாயகம், இதுதான் சுய கௌரவம்.

ஒரு பெரிய தொழில் நிறுவனத்திலும் இதே முறைதான். ‘நாங்கள் செய்தோம்’ என்று தொழிலாளர்

கள் எப்போது பெருமைப்படுகிறார்களோ, அப்போது தான் அந்த நிறுவனம் வளரும்.

தலைவன் வெறும் வழிகாட்டிதான். அவரவர் களுக்கும் பங்கிருக்கிறது. எல்லாம் தானே நடைபெறு கிறது.

கடலூருக்கு அருகிலுள்ள கிராம மாற்றம் எப்படி ஏற்பட்டது? தானே நடந்தது. இதைத்தான் 'இருப்பதே தெரியாமல் இயங்கும் அரசாங்கம்' என்று சொல் கிறோம்.

'சற்றே விலகி இரும் பிள்ளாய்
சிவ சந்நிதானம் மறைக்குதாம்'

என்று நந்தனார் பாடுகிறார்.

அதுபோல, நாம் இன்று 'அரசாங்கமே! சற்றே விலகியிரு' என்று சொல்லவேண்டிய காலம் வந்து விட்டது. தலைவன், மக்களுடைய திறமைகளை நம்ப வேண்டிய காலம் வந்துவிட்டது.

14



வெட்டவெளிதனையே

கவிதை

பிரபஞ்சம் இயங்கும் பாதை
இருக்கிறதே (டௌ) அது ஒரு காலி பாத்திரம் போல
சூன்யம், வெற்றிடம்.
ஆனால், அமுதசுரபி போல
அதிலிருந்து எடுத்துக்கொண்டே
இருக்கலாம்.
நிரப்பவேண்டிய அவசியம் இல்லை.
நம்மை ஈன்ற முன்னோர் போல
எல்லாம் உருவாகும் உற்பத்தி
ஸ்தானம்.

இந்த வெட்டவெளி
கூர்மையை மழுங்கச் செய்கிறது.
சிக்கலை அவிழ்க்கிறது.
கூச்சம் தரும் வெளிச்சத்தை
சுகானுபவமாக்குகிறது.
வாழ்வின் சப்தங்களும் ஒன்றுமில்லா
விஷயங்களும் இங்கே ஓய்கின்றன.
தூய்மையாக, அமைதியாக, என்றும்
சாஸ்வதமாக இருக்கிறது, மூலம்.

எங்கிருந்து வந்தது..? அறியோம்!
உருவாக்கினானே ஒருவன்
அனைத்தையும்,
அவன் அச்சில், இது
அவனுக்கு முன்னுரை போல...

விளக்கம்

இந்தச் சூன்யம் என்கிற வார்த்தையைப் புத்த மதத்தினர் அதிகம் உபயோகிக்கிறார்கள். ஏனெனில், இந்தப் பிரபஞ்சத்தில் வெற்றிடம்தான் ஏராளம். ஒரு கோளுக்கும் மற்றொரு கோளுக்கும் — சூரியனுக்கும் சந்திரனுக்கும் — இடையே உள்ள இடம் வெற்றிடமே. பிரபஞ்சத்தில் எத்தனையோ நட்சத்திரங்களும் நட்சத் திரக் குடும்பங்களும் எத்தனையோ பால் வீதிகளும் இருக்கின்றன. இவற்றிடையே எங்கும் இருப்பது வெற் றிடம்தான். சின்னஞ்சிறு அணுவின் மையத்தில் உள்ள புரோட்டானை ஒரு பரங்கிக்காய்க்கு ஒப்பிடுவோ மானால், அதைச் சுற்றி ஓடும் எலெக்ட்ரான், இந்தப் பூமியின் எல்லையில் நின்று வலம்வருகிறது என்கி றார்கள். அதாவது, நடுவிலுள்ள புரோட்டானுக்கும் இதைவிடச் சிறிதாகத் தொலைவில் சுற்றிக்கொண்டி ருக்கும் எலெக்ட்ரானுக்கும் இடையிலே என்ன இருக் கிறது? வெற்றிடம், சூன்யம்.

நீங்களும் நானும் அணுக்கூட்டங்களால்தான் ஆக்கப்பட்டிருக்கிறோம். ஒவ்வொரு அணுவிலும் இப்படி வெற்றிடமே ஏராளம். ஆகவே, நமக்குள்ளே இருப்பதும் வெற்றிடம்தான். இந்த வெற்றிடத்தை நீக்கி, இதிலுள்ள புரோட்டான்களையும் எலெக்ட்ரான்களை யும் அமுக்கி உருட்டினோமானால், ஒரு கடுகளவு கூடத்



தேறாது. எங்கு பார்த்தாலும் ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் இடையில் வெற்றிடம், சூன்யம்தான் நிரம்பியிருக்கிறது. இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள எல்லாமே. இந்த வெற்றிடத்திலிருந்துதான் வந்திருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் அனுமானிக்கிறார்கள்.

இந்தக் கருத்தையே குதம்பைச் சித்தர் பாடுகிறார்:

'வெட்டவெளி தனையே மெய் என்று இருப்போர்க்கு
பட்டயம் ஏதுக்கடி குதம்பாய், பட்டயம் ஏதுக்கடி...?'

"எது உண்மை...? எங்கும் சூன்யம் என்பதுதான் உண்மை. இதை நன்கு உணர்ந்த ஞானிகளுக்கு என்ன விருது வேண்டியிருக்கிறது...? நான் என்ற அடையாளம் என்ன வேண்டியிருக்கிறது? அவர்கள் ஞானம்தான் பூர்த்தியாகிவிட்டதே" என்கிறார்.

இந்தச் சூன்யத்திலிருந்துதான் எல்லாம் — அமுத சுரபியிலிருந்து கிளம்புவது போல — கிளம்பியிருக்கிறது. அப்படியானால், இந்தச் சூன்யம்தான் மூலமா, பிரபஞ்சத்தின் மூலம் இந்தச் சூன்யம்தானா என்று கேட்டால், இந்தச் சூன்யம் எதிலிருந்து வந்தது என்ற கேள்வி எழுகிறது.

சொல்கிறார் ஞானி: "நாம் அறியோம்! இங்கே நடக்கிற விஷயங்கள் மட்டும்தான் புரிகிறது.

"எல்லாவற்றையும் சமப்படுத்திக் கொண்டு, ஒத்த இசைவுடன் எல்லாம் இணைந்து செயல்படும் வேலை தான் நடக்கிறது. பிரபஞ்ச ஓட்டத்தைத்தான் பார்க்கிறோம்; அந்தப் பிரபஞ்ச லயத்தைத்தான் பார்க்கிறோம்" என்று ஒவ்வொன்றாக விளக்குகிறார், பிரபஞ்சத்தின் அம்சங்களை.

இந்த வெற்றிடம், 'கூர்மையை மழுங்கச் செய்கிறது'! இங்கே வெறும், அறிவுக் கூர்மை — தர்க்க அறிவு — பயன்படுவதில்லை; உள்உணர்வு என்ற ஒன்றுதான் நம்மை வாழவைக்கிறது, வழிகாட்டுகிறது.

இந்த வெற்றிடம் 'சிக்கலை அவிழ்க்கிறது'. மனிதன் உலக வாழ்வில் பல்வேறு பிரச்னைகளால் அல்லல் உறுகிறான். பிரபஞ்ச லயம் தெளிவை, ஞானத்தை, உள்ளதை உள்ளபடி அறியும் மெய்யறிவைத் தருகிறது.

'கூச்சம் தரும் வெளிச்சத்தைச் சுகானுபவமாக்குகிறது' என்கிறார். 'உற்று உற்றுப் பார்க்க ஒளிதரும் ஆனந்தமதை நெற்றிக்கு நேர்கண்டு நிலைப்பது இனி

எக்காலம்?' என்று பாடுகிறார் பத்திரகிரியார். வெளியில் இருந்து வரும் ஒளி, கண்களைக் கூசச்செய்கிறது. ஆனால், தியானத்தில் புருவ மத்தியில் தோன்றும் ஒளியோ, நம்மை ஆனந்த சுகானுபவத்தில் ஆழ்த்துகிறது. மேலும் வாழ்விலோ, ஒரே ஆரவாரம், சந்தைக்கடை போல சத்தம்; ஒன்றுமில்லா அற்ப விஷயங்கள், தூசுக்குச் சமானமான சின்ன விஷயங்கள், மனிதனை ஆட்கொள்கின்றன; ஆட்டிப் படைக்கின்றன.

நமக்குள் இருக்கும் வெற்றிடம் — எங்கும் நிறை நாதப்பிரம்மம் — இந்தத் தூசுகளைத் தள்ளி, நமக்குத் தெளிவைத் தருகிறது.

பிரபஞ்ச இயக்கம் — பிரபஞ்ச லயம் — நாம் மட்டும் அத்துடன் ஒன்றிவிட்டோமானால், இவ்வுலகில் வாழத் தேவைப்படும் எல்லா ஆனந்தத்தையும் பெறலாம்.

ஞானி சொல்வதை மீண்டும் கவனியுங்கள். நூலுக்கு முன்னுரை எழுதுகிறோம். நூலின் சாரத்தை, நூல் எழுதியதன் நோக்கத்தை, காரணத்தை விளக்குகிறோம்.

'இந்த சாந்தம், அமைதி மூலத்துக்குப் பிறந்த முன்னுரை, கடவுளுக்குப் பிறந்த குழந்தை போல' என்கிறார் ஞானி. எப்படியாம்? அவன் அச்சில்! அதாவது, அண்டத்தில் உள்ளதுதான் பிண்டத்தில். அவன் அச்சில், அவன் சாரத்தில் நாம் இருக்கிறோம். அவனில் ஒரு பகுதி நாம்.

நம் உள்ளும் வெளியும் வெட்டவெளி என்று உணரும்போது, எங்கும் நம்மைப் பார்க்கிறோம்; எல்லாவற்றைம் நம்முள் பார்க்கிறோம். இதைக் கொஞ்சம் யோசியுங்கள் — நாம்தான் பிரம்மம்!

'அகம் பிரம்மாஸ்மி.'



15

உள்ளே இருக்கிறது விஷயம்

கவிதை

திறமையுடன் நிலைநிறுத்தியதை
எளிதில் கெல்லி எறிய முடியாது.

நன்கு புரிந்துகொள்ளப்பட்ட விஷயம்
நம்மை விட்டு நழுவிப் போகாது

பல தலைமுறைகளாக ஒரு குடும்பம் போற்றப்படுவது
முன்னோர்கள் செய்த தியாகங்களினால்தான்.

நல் நெறிகளுடன் உள்மனிதனை வளருங்கள்
அதன்வலிமை பதர்களை எல்லாம் நீக்கி
விடுகிறது.

நல் நெறிகளை குடும்பத்தில் கடைப்பிடியுங்கள்
குடும்பம் செழிப்புடன் வளரும்.

நல் நெறிகளை சமுதாயத்தில் கடைப்பிடியுங்கள்
சமுதாயம் நிலைத்து நிற்கும்.

நல் நெறிகளை ஒரு நிறுவனத்தில் கடைப்பிடியுங்கள்
அதன் புகழ் பரவும்



நல் நெறிகளை உலகில் பரப்புங்கள்
உலகம் ஒரு குடையின் கீழ் வரும்.

உள்நோக்கிப் பார்ப்பதன் மூலம்தான்
தன்னை அறியும் அறிவைப் பெறுகிறோம்.

வீட்டினுள் புகுந்து பார்க்கும்போதுதான்
கட்டுமான நிலவரம் புரியும்.

ஒரு சமுதாயத்தின் குணங்களை அறியும்போதுதான்
சமுதாயத்தின் நிலை தெரிய வரும்.

ஒரு நிறுவனத்தின் உள் தன்மையை அறியும்போதுதான்
ஒரு நிறுவனத்தின் உண்மை நிலை புரியும்.

உலகைப் பற்றி அறிய
அங்கே நடப்பவற்றை நாம் அறியவேண்டும்.

இதெல்லாம் எப்படி எனக்குத் தெரியும்?
இப்படித்தான்!

விளக்கம்

புளிய மரத்தை வெகு எளிதில் புயல்கூடச் சாய்த்து விட முடியாது. காரணம், அதன் வேர் ஆழமாகப் பூமிக்கு உள்ளே போயிருக்கிறது. அதேபோல, படிக்கும் போது ஒரு விஷயத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்டோமானால், அது நம்முடன் தங்கி விடுகிறது. சின்ன வயதில் படித்தது இன்னமும் ஞாபகத்தில் இருக் கிறது. ஏனெனில், அது ஆழமாக உள்ளே பதிந்திருக்கிறது. அதுபோல, தலைமுறை தலைமுறையாக ஒரு குடும்பம் போற்றப்படுகிறது என்றால், காரணம் அவர்களது முன்னோர் செய்த தியாகங்கள், தானதர்மங்கள், நன்மை கள், சாதனைகள்தான்.

இவையெல்லாவற்றிலும் விஷயம் உள்ளே இருக் கிறது. 'உள்ளே இருப்பது' நன்றாக இருக்குமானால், எதுவும் அதை அசைக்க முடிவதில்லை.

அடுத்து ஞானி லாட்சு, ஒரு மகத்தான உண் மைக்கு நம்மை அழைத்துச் செல்கிறார். "உங்களைப் பற்றி அறிந்துகொள்ளுங்கள்" என்று நம்மிடமே வரு கிறார். நம்மைப்பற்றி அறிந்துகொள்ள நாம் என்ன செய்கிறோம்? 'நான் யார்? ஐம்புலன்களால் ஆன இந்த உடல்தான் நானா?' மனிதன் 'கோமா'வில் இருக்கும் போது இவையெல்லாம் அடங்கிப் போகின்றன. புலன் கள் செயல்படுவதில்லை. அப்போதும் மனிதன் உயிரு டன் இருக்கிறான். ஆகவே, நான் உடல் அல்ல. நான்

இந்த பிராணனா? இந்த மூச்சுதான் என் உயிரைக் காப்பாற்றுகிறதா? இதுவும் இல்லை. மூச்சு நின்ற இரண்டு மூன்று மணி நேரத்துக்குப் பின்னும் மனிதன் உயிரோடு எழுகிறான். எனவே, மூச்சு மட்டுமல்ல மனிதன். அப்படியானால், நான் இந்த மனமா? மனத்தில் எழும் எண்ணங்களை எல்லாம் அடக்கிய பின்னும் யோகிகள் வாழ்கிறார்கள். உடல், மூச்சு, மனம் கடந்த நிலையில் அவர்கள், "நான் ஒரு ஆத்மா" என்பதை உணர்கிறார்கள். அந்த ஆத்மாவுக்கு அழிவில்லை என்பதை அறிகிறார்கள்.

இதைத்தான் திருமூலர்,

'தன்னை அறிந்திடில் தனக்கொரு
கேடில்லை.
தன்னை அறியாமல் தானே
கெடுகின்றான்.
தன்னை அறியும் அறிவை
அறிந்த பின்
தன்னை அர்ச்சிக்க தான்
இருந்தானே'

என்று எழுதுகிறார்.

'தான் யார்?' என்று மனிதன் அறிந்து கொள்ளும் போது — தனக்குள்ளே ஆத்மா என்ற அழியாத ஒன்று, — தனக்குள்ளே பிரம்மம் (கடவுள்) என்ற நிலையான ஒன்று — இருக்கிறதென்பதை உணரும்போது அவன் தன்னையே கடவுளாக அர்ச்சிக்கின்றானாம்!

கண், காது, மூக்கு, வாய், உடல் உணர்வு என்ற இவற்றுக்கு அப்பால் சென்று தியானம் செய்வதன் மூலம்தான் நம் முன்னோர்கள் இப்படிப்பட்ட மாபெரும் உண்மையைக் கண்டார்கள்!

ஆகவே, விஷயம் எங்கே இருக்கிறது? உள்ளே! எல்லாவற்றிலுமே அப்படித்தான்.

“நாம் ஒரு லட்சிய மனிதனாக வரவேண்டும்” என்று விரும்புகிறோம். கண்கள் எங்கோ பார்க்கின்றன. காது எதையும் கேட்பதில்லை. மனம் நாம் செய்த கற்பனையில் விரிகிறது. தானே ஒரு உலகை சிருஷ்டிக் கிறது. அதில் சஞ்சரிக்கிறது. எதை விரும்புகிறோமோ அதை அடைகிறோம். எதைக் கற்பனையில் பார்க் கிறோமோ அதுவே ஒருநாள் நிஜமாகிறது.

நமது உள்நோக்கிய பயணம் — நம் கற்பனை — கொண்டு வந்ததுதான் நம் சாதனை. அப்போது அது நாள் வரை ஒரு சாதாரண மனிதனாக இருந்தவன், சாதனையாளனாக, லட்சிய மனிதனாக உருமாற்றம் பெறுகிறான். இதுதான் கற்பனை உலகின் வித்தை; மன உலகின் சாதனை.

சொல்லப்போனால் நாம் விரும்பும் வீடும் மனை யும், காரும் நிறுவனமும் நாம் விரும்பும் சமுதாயமும் உலகமும் நம்முள்தான் இருக்கின்றன. இன்று இல்லா ததை, நம் மனக்கண் முன் தீர்க்கமாக, தெளிவாகத் தரிசிக்கிறோம். நாளை வரப்போவதைத் தரிசனம் செய்கிறோம். இதுதான் தீர்க்கதரிசனம்.

கனடா பல்கலைக்கழகத்துப் பேராசிரியர் ஜே. காங்கர் என்பவர் ஒரு தலைவனுக்கு வேண்டிய முக்கிய மூன்று குணங்களில் இந்த தீர்க்க தரிசனத்தை முதலில் வைக்கிறார் (தீர்க்கதரிசனம், மற்றவர்களுக்கு தன்னம் பிக்கையும் ஊக்கமும் ஊட்டடல், கருத்துப் பரிமாற்றம் இவைதான் அந்த மூன்று.) ஒரு நாட்டின் தலைவனுக்கு மட்டுமே தீர்க்கதரிசனம் இருக்கவேண்டும் என்பது தில்லை. இது ஒரு நிறுவனத்தின் தலைவனுக்கு, குடும்பத்

தலைவனுக்கு, தனி நபருக்கு என்று அனைவருக்குமே தேவைப்படும் ஒன்று.

'உள்ளே இருக்கிறது விஷயம்' என்கிறாரே... உள்ளே என்ன இருக்கவேண்டும்? நல்ல நெறிகள், உயர் குணங் கள், நேர்மை, சமத்துவம், சுதந்திரம்; நமக்கும் பிறருக்கும் உண்மை; எதிலும் ஒழுங்கு-ஒழுக்கம்; எதிலும் அழகு-தரம் — இப்படி எல்லாமே இருக்கவேண்டும்.

ஒரு சமுதாயம் நிலைத்து நிற்பது அதன் நெறி களால்தான்.

ஒரு நிறுவனம் நீண்ட காலம் நற்பெயருடன் இருப்பது அதன் நெறிகளால்தான்.

ஒரு வீட்டை வாங்குகிறோம் என்றால் மேலை நாடுகளில், இங்கு போல நாமும் நம் மனைவியும் சென்று வீட்டைப் பார்த்துவிட்டு விலை பேசுவது அல்ல. வீட்டின் கட்டட அமைப்பை, உபயோகிக்கப் பட்ட மரத்தின் தரத்தை, வீட்டின் அஸ்திவார பலத்தை, கூரையை என்று பலவிதத்திலும் ஆராய்ந்து அறிந்த ஒரு தொழில் விற்பன்னரை அழைத்துச் சென்று பார்வை யிட்டபின்தான் வாங்குவார்கள்.

எதை நாம் தெரிந்துகொள்ளும் ஆர்வத்துடன் நோக்குகிறோமோ, அப்போது பார்க்கப்படும் பொரு ளுடன் ஒரு தொடர்பு ஏற்படுகிறது; ஓர் உறவு ஏற்படு கிறது. பார்க்கப்படும் பொருள் அப்போது தன்னைப் பூரணமாக வெளிப்படுத்திக் கொள்கிறது என்று பகவத் கீதை குறிப்பிடுகிறது.

பார்க்கப்படும் பொருளுடன் உறவாடுவதால் தான், தானே பார்க்கப்படும் பொருளாக மாறுவதனால் தான் ஒரு விஞ்ஞானி புதிய உண்மைகளையும் புதிய பொருள்களையும் கண்டுபிடிக்கிறார்.

நம் நிறுவனத்தின் முன்னேற்றத்தைப் பற்றி தினமும் காலையில் ஒரு கால் மணி நேரம் எண்ணும் போது அதன் வளர்ச்சிக்கு வேண்டிய ஒவ்வொன்றும் நமக்குப் புலப்படுகிறது. இதன் விளைவாக நிறுவனத்தை மிகத் திறமையுடன், புதிய பொருள்களுடன், புதிய அணுகு முறைகளுடன் நடத்துகிறோம்.

தேவை: பார்வை. கவனம். விழிப்பு உணர்வு. உள் நோக்கிய பயணம்.

மனத்தின் பல்வேறு சக்திகளையும் அது செயல்படும் விதத்தையும் எப்படி அறிந்துகொள்கிறோம்?

மனத்தின் மூலம்தான்! மனத்தின் மூலமே மனத்தை அறிவது என்பது சற்று விசித்திரமாக இருக்கும்!

இவ்வுலகையே நமக்கு அறிமுகப்படுத்துவது, நம்மை வளர்ப்பது எல்லாமே நம் மனம்தான். எனவே, நம் மனத்தை நாம் கேட்கலாம். கேட்பதன் மூலம் அறியலாம்.

காஞ்சிப் பெரியவர் சொல்கிறார், 'தெய்வத்தின் குரலில்'... 'கிம் சம்சாரம் சாரம்?' (வாழ்வின் சாரம், அர்த்தம் என்ன?) என்று ஒரு சீடன் தன் குருவைக் கேட்கிறான்.

"அதேதான்!" என்கிறார் குரு.

சீடனுக்கு விளங்கவில்லை.

"எதேதான்?" என்று மீண்டும் கேட்கிறான்.

"நீ இப்போது கேட்டாயே.... அதையே மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டிரு. பதில் கிடைக்கும்."

"நான் யார்?" என்ற கேள்வியில் அமர்ந்தவர்தான் பகவான் ரமணர். அவருக்குக் கிடைத்ததுதான் ஞானம் — உள்ளதை உள்ளபடி அறியும் அறிவு.

16

எல்லாம் இணைந்து... இணைந்து...



கவிதை

ஆண்தன்மையை
அறிந்துகொள்ளுங்கள்.
பெண் தன்மை கையில் இருக்கட்டும்.
உலகின் அடிநீரோட்டம் அதுதான்.

அடிநீரோட்டமாய் அது இருக்கும்போது
கைவிடுவதில்லை அது நம்மை எப்போதும்.
மீண்டும் புதுவாழ்வு தருகிறது, குழந்தையாக்கி.

வெண்மை நிறத்தைத்
தெரிந்துகொள்ளுங்கள்.
கருமை கையில் இருக்கட்டும்.
இவ்விரண்டின் கலவைதான் இந்த
உலகம்.

இந்த இரண்டின் கலவையால் உலக
அமைப்புக்கள் உருவாகும்போது
அங்கே எழும் அழகின் சக்தியில்
மனிதன் பிரபஞ்சத்தின் எல்லை காணா
நிலையை உணர்கிறான்.

புகழைப் புரிந்துகொள்ளுங்கள் - ஆனால்
நமோதில்லாமல் வாழக் கற்றுக்கொள்ளுங்கள்.

மலைச்சிகரங்களுக்கிடையே பள்ளத்தாக்காக.
பள்ளத்தாக்கிற்கு எதையும் தாங்கும் சக்தி
உண்டு
இதுதான் எளிமைக்குத் திரும்பும்வழி.

எளிமையை உடைத்துப் பார்த்தால்
அதில் உபயோகப்படும் பல கருவிகள் உள்ளே!
வளர்ந்தவர்கள் அவற்றை
உபயோகிக்கிறார்கள்; தலைவர்களாகிறார்கள்
உலகின் மாபெரும் இயக்கம் இப்படித்தான்
செயல்படுகிறது,
எல்லாம் இணைந்து.!

விளக்கம்

பல வீடுகளில், குறிப்பாக மேனாடுகளில், இரவு சாப்பிடும்போது எல்லோரும் சேர்ந்து, சமமாக அமர்ந்து சாப்பிடுவார்கள். சில சமயம் லேசான இசை ஓடிக்கொண்டிருக்கும். கணவனும் மனைவியும் பிரச்னைகளை விவாதிப்பார்கள். இதில் கணவன் - மனைவி என்ற வித்தியாசமோ, 'அவர்கள் குழந்தைகள்' என்ற மனப்பான்மையோ இல்லாமல் எல்லோரும் கலந்து பேசுவார்கள். குழந்தையின் வளர்ச்சிக்கு இது தேவை.

ஆணுக்கென்று சில குணங்கள் இருக்கின்றன. அவன் பொதுவாக பாதுகாவலன். குடும்பத்தைக் காக்கும் பொறுப்பு, சம்பாதிக்கும் பொறுப்பு அவனுடையது. அவனிடம் அதிகம் துணிவும் 'ரிஸ்க்' எடுக்கிற, சவால்களைச் சமாளிக்கும் குணமும் இருக்கும். பெண்களிடம் அதிகமாக அனுமானம் என்ற உள்ளுணர்வு உண்டு. எடுத்துக்கொண்ட விஷயத்தில்



கவனம் செலுத்தும் திறமை உண்டு. வைராக்கியம் அதிகம். தாய்மையின் தனிப்பண்பு ஏராளம்.

சொல்லப்போனால், ஆண்கள் உடலில் பெண் ஹார்மோன்களும் பெண்கள் உடலில் ஆண் ஹார் மோன்களும் ஓடுகின்றன என்பது மருத்துவம் காட்டும் உண்மை.

வாழ்வுக்கு இந்த இரண்டு குணங்களும் தேவை. இந்த இரண்டும் கலக்கும்போது ஏற்படும் அடி நீரோட்டம்தான் வாழ்வின் பிரச்னைகளுக்குப் புதிய புதிய தீர்வுகளை, சமாளிக்கும் சக்தியைத் தருகிறது என்கிறார் ஞானி லாட்சு.

ஜவகர்லால் நேரு ஒருமுறை சொன்னார்: "வாழ் வில் வெள்ளை-கறுப்பு என்ற இரண்டு நிறங்கள் மட்டுமே இல்லை. இது அல்லது அது என்று வெட் டொன்று துண்டிரண்டாக விஷயங்கள் அமைவது இல்லை. வாழ்வில் இரண்டும் — வெண்மையும் கருமை யும் — கலந்து பல்வேறு சாயங்களில்தான் வருகின்றன..." அதுதான் உலக யதார்த்தம். உண்மை நிலை. கறுப்பு நிறத்தையும் வெள்ளை நிறத்தையும் வைத்துத்தான் எத்தனை அழகிய ஓவியங்கள் உருவாக்கப்படுகின்றன. எங்கே மேடு தேவை, எது அதிகம் தேவை என்று தீர்மானிக்கிறானே சிற்பி — அங்குதான், அப்போது தான் நம்முடன் பேசும் சிற்பம் உயிர்பெற்று நம்முன் நிற்கிறது.

இந்த இரண்டின் கலவையின் அழகில் நாம் பிரபஞ்சத்தின் எல்லைக்கே போய்விடுகிறோம் என் கிறார் லாட்சு. நினைவில் கொள்ளுங்கள்: சரியான கலவைதான் வாழ்வு.

அரசியலில் ஒரு முறை புகழின் உச்சிக்குப் போய் விட்டவர்கள் மீண்டும் அதே உச்சிக்குப் போக வேண் டும் என்று ஆலாய்ப் பறப்பதை அன்றாட வாழ்வில்

பார்க்கிறோம். அவர்கள் ஏன் கஷ்டப்படுகிறார்கள்? ஏன் பதவியிலிருந்து இறங்க மறுக்கிறார்கள்?

அவர்கள் நமோதில்லாமல், பெயரில்லாமல் புகழை மறந்து எங்கோ மற்றோர் குடிமகன் போல வாழ வேண்டும் என்பதைக் கற்றுக் கொள்ளாதவர்கள்; கற்றுக்கொள்ள மறுப்பவர்கள்.

ஞானி லாட்சு சொல்கிறார்: மலைச்சிகரங்கள் இருக்கின்றன. இவற்றின் இடையே பள்ளத்தாக்கு இருக்கிறது. வெள்ளம் வந்தாலும் அதற்கு இடம் கொடுத்து ஓடச் செய்கிறது. மலையே சரிந்து விழுந்தாலும் கவலைப்படுவதில்லை; அமைதியாகப் பெற்றுக் கொள்கிறது. பள்ளத்தாக்காயிருப்பதால் எங்கும் பசுமை, குளுமை, மூலிகைகள், மரங்கள், கனிகள் என இதமாக இருக்கிறது.

எவ்வளவுக்கெவ்வளவு பெரிய பதவியில் இருக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு, எளிமையோடு வாழும் போதுதான் நாம் மனநிறைவுடன் வாழமுடியும். காந்தியின் எளிமை, காமராஜரின் எளிமை, லால்பகதூர் சாஸ்திரியின் எளிமை — இவற்றை எல்லாம் நினைவில் கொள்ளவேண்டும்.

வார்தாவில் மகாத்மா காந்தியின் வீட்டில் நேரு, பட்டேல், ஜின்னா, ராஜாஜி போன்ற பெரும் தலைவர்கள், இந்திய சுதந்திரத்தைப் பற்றியும் போராட்டங்களைப் பற்றியும் தீவிரமாக விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். கூட்டத்திலிருந்து எழுந்து, ‘மன்னியுங்கள்’ என்று சொல்லிவிட்டு வெளியே நடக்கிறார் காந்தி. “இது ஆடுகளுக்கு உணவு அளிக்கவேண்டிய நேரம். புல் போடப் போகிறேன்...”

ஆட்டுக்குப் புல்போடுவதும் இந்தியப் பிரச்னைகளை விவாதிப்பதற்கு சமமான முக்கிய விஷயம்தான் என்பதைத்தான் இங்கே பார்க்கிறோம்! நாம் நம் விவாதத்தைக் காரணம் காட்டி அந்த வாயில்லா ஜீவன்களை அலட்சியப்படுத்தி விடமுடியுமா?

இதைத்தான் சொல்கிறார் ஞானி. உலகின் மாபெரும் இயக்கத்தில் பலவேறு பகுதிகள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் முக்கியமானது. இந்த மாபெரும் இயக்கம் இப்படித்தான் செயல்படுகிறது — இணைந்து என்று முத்தாய்ப்பு வைக்கிறார்.

நீங்கள் இன்று காக்கைக்குச் சோறு போட்டீர்களா, சாப்பிடுமுன்? வீட்டில் காலை எழுந்ததும் அரிசி மாவினால் (சுண்ணாம்பினால் அல்ல) கோலம் போட்டு வீட்டையும் அழகுபடுத்தி, எறும்புக்கும் உணவளித்தீர்களா? இணைந்து வாழ்வோம்!

17

மந்தைக் கூட்டமும் – நானும்



கவிதை

மனப்பாடம் பண்ணுவதா கல்வி?
வேண்டாம் இந்த வெட்கக்கேடு!
அனுசரித்துப் போதலும் அடிபணிதலும் ஒன்றுதானா?
நன்மைக்கும் தீமைக்கும் வித்தியாசமில்லையா?
எல்லோரும் போற்றுவதை நாமும் போற்ற வேண்டுமா?
என்ன நியாயம் இது? என்ன பேதைமை!

மந்தைக் கூட்ட மனோபாவம் வளர்கிறது;
விரிவடைகிறது.
மந்தையுடன் நடப்பதில் விருந்து சாப்பிட்ட மகிழ்ச்சி.
வசந்த காலத்தில் திறந்தவெளியில் காற்று வாங்கும்
சுகம்.
இந்தக் கூட்டத்தில் எனக்கு வேலை இல்லை; நான்
சேர்வதில்லை.
நானோ, இன்னும் சிரிக்கத் தெரியாத, பிறந்த
குழந்தை போல்;

சாதாரண மக்களுடன் தொடர்புமில்லை;
வேறெங்கும் போக எனக்கு இடமுமில்லை.

சாதாரண மக்கள் புத்திசாலிகளாக,
அறியப்பட்டவர்களாக;
நானோ மந்த புத்திக்காரனாய், ஊர் பேர்
இல்லாதவனாய்.

சாதாரண மக்கள் சாமர்த்தியசாலிகளாய், எல்லாம்
அறிந்தவர்களாய்
நானோ அடங்கிய நிலையில் அபாக்கியவானாக.

நானோ கடல் போல யாரையும் சட்டை செய்யாமல்
காற்று போல எங்கும் நிற்காமல்
மந்தைக் கூட்டமோ எங்கும் எங்கும் நிறைந்து.

நான் என் ஆசைகளினால் வேறுபட்டவன்.
அன்னை என்னை ஊட்டி வளர்க்கிறாள்.
அதுதான் என் பாக்கியம்.

விளக்கம்

ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி நல்ல யோசனைகள் சிலவற்றைச் சொல்கிறார்; தலைவனோ முரண்பாடாக சுயநலத்துடன் செயல்படுகிறான். 'இது சரியல்ல' என்று அதிகாரி ஒதுங்கிக் கொள்கிறார். மற்றவர்களோ 'நீங்கள் எடுத்த முடிவுதான் சரி' என்று ஜால்ரா போடுகிறார்கள். நாடு எப்படி உருப்படும்?

இந்த மந்தைக் கூட்டத்தின் பிரதிநிதியாக முல்லா நசிருத்தீனின் கதை ஒன்று வருகிறது.

தட்டில் கேரட்டைக் கொண்டு வைக்கிறார்கள். முல்லா கடித்துவிட்டு "சே! சே!" என்று துப்புகிறார்.

அரசர் கேட்கிறார்: "என்ன முல்லா... எனக்குத் தான் கேரட் பிடிக்காது. நீ விரும்பிச் சாப்பிடுவாயே... ஏன் இப்போது பிடிக்காமல் துப்புகிறாய்?"



முல்லா சொல்கிறார்: "அரசே! நான் உங்களுக்குத் தான் அடிமை. கேரட்டுக்கு அல்ல!"

'நன்மைக்கும் தீமைக்கும் வித்தியாசம் தெரிய வேண்டாமா? இப்படியா கண்ணை மூடிக்கொண்டு தலைவன் சொல்கிறான் என்று முட்டாள்தனத்துக்கு அடிமையாவது... இது என்ன பேதைமை?" என்று கேட்கிறார் ஞானி லாட்சு.

ஜால்ராவின் உச்சம் எந்த அளவுக்குப் போகும் என்பது பற்றி ஒரு பாடல் உண்டு. பாராட்டிப் பாடி

பரிசு பெற்று ஜீவனம் நடத்த வேண்டியிருக்கிறவர் பாடுகிறார். கட்சிக்காரர்கள் தங்கள் தலைவர்களைப் பற்றிப் பாடுவதைப்போல, 'நீ அரிச்சந்திரன். அரிச் சந்திரனின் மறுபிறவி..."

'அரிச்சந்திரனென்று அடாத சொல் சொன்னா யே... யார் கையில் பெண்டு விற்றேன்?' என்று கேட் கிறான் அரசன்.

ஜால்ரா போடுபவரோ தன் அறிவையும் சுய மரியாதையும் இழந்து புகழ்கிறார். பாடப்படுவனோ இவனைவிட மூடன். கேட்கிறான். 'யார் கையில் பெண்டு விற்றேன்?'

தேர்தலின்போது வாக்காளரைப் பேட்டி கண்ட ஒருசிலர், ஒரு நல்ல வேட்பாளரின் பெயரைச் சொல்லி 'அவருக்குத்தானே வோட்டுப் போட்டீர்கள்?" என்று கேட்கிறார். வாக்காளர் சொல்கிறார்: "உண்மைதான். நீங்கள் குறிப்பிடுபவர் நல்லவர்தான். ஆனால், அவருக்கு வாக்குகள் விழாது. ஆகவே யார் ஜெயிப்பாரோ அவருக்கே வோட்டுப் போட்டேன்" என்று! சாய்கிற பக்கமே சாய்வது செம்மறி ஆடுகள் மட்டுமல்ல... கொள் கைப் பிடிப்போ உண்மையில் துணிவோ இல்லாத மனமும்தான்.

"தனித்து நில்! உன் சுதந்திரத்தைப் பறி கொடுக் காதே. ஊர் உலகம் சொல்கிறதே என்று எண்ணி அதை நம்பி ஏற்றுக்கொள்ளத் தேவை இல்லை. அறிவு சுதந்திரத்துடன் பிரபஞ்சத்தை ஆராய்ந்து பார்... எந்தக் கொள்கைக்கும் உன்னை விற்று விடாதே!" என்கிறார் ஞானி லாட்சு.

தனித்து நிற்பவனை, கூட்டத்தில் இருந்து வேறு பட்டுத் துணிவோடு நிற்கும் மனிதனை, கள்ளங் கபட

மற்றவன் என்கிறார். அதாவது, ஒரு குழந்தை போல வாம் அவன்.

படித்தவர்கள்கூட இந்த மந்தைக் கும்பலில் நின்று கொண்டு தனி ஆவர்த்தனம் செய்கிறார்கள். காரணம், சுய ஆதாயம்! பாதுகாப்பு! அநியாயம் நடக்கும்போது, அக்கிரமம் தாண்டவமாடும்போது ஒரு சிலர்தான் அதை எதிர்த்துக் கேட்கும் துணிவு பெற்றிருக்கிறார்கள். இவர்களால்தான் உண்மை நிலைநிறுத்தப்படுகிறது; புரட்சிகள் தோன்றுகின்றன.

ஒரு பக்கம் சாய்ந்து நிற்பது தனிமனித வாழ்வை யும் சமுதாய அமைப்பையும் சீர் குலைக்கிறது. வித்தி யாசமான கருத்துகளால்தான் உலகம் முன்னேறுகிறது. காரணம், அவர்கள் காதில் வருங்காலத்தின் குரல் ஒலிக்கிறது.

ஒவ்வொரு தனி மனிதனிடமும் தனித்தன்மை இருக்கிறது; சுதந்திரம் அவனது பிறப்புரிமை; நேர்மை, உண்மை, நல்லெண்ணம் என்பனவற்றால்தான் இந்தச் சமுதாயம் பரிணாம வளர்ச்சியில் முன்னேறுகிறது.

மகாத்மா காந்தியின் படத்தை முழுப் பக்கத்தில் பிரசுரித்து ஓர் அமெரிக்கப் பத்திரிகை கீழே ஒரு வாசகம் எழுதி இருந்தது — 'ஒரு தனி மனிதனால் மகத்தான மாற்றத்தை உண்டுபண்ண முடியும்' என்று. மாற்றம், வித்தியாசம், வேறுபட்ட கொள்கைகள், தெளிவுகள்! கவனியுங்கள்... எல்லோரும் அறிந்த எளிமையும் உண்மையும் வித்தியாசமாகத் தோன்றுகின்றன. அதன் மூலம்தான், மாறிவரும் உலகில் வித்தியாசத்தின் விதைகளால்தான், பரிணாம வளர்ச்சி நடைபெறுகிறது — அடிப்படை உண்மைகளை நோக்கி.



18

உலகம் புதைஞானம்; புனிதம்!

கவிதை

மனிதர் பலர் உலகின் இயல்பை மாற்ற முயல்கிறார்கள்.
அவர்கள் விரும்பும் விதத்தில்
வெற்றி அடைவதில்லை, பார்த்திருக்கிறேன்.

உலகம் புதைபொருள் கொண்ட புனித பாத்திரம்
திருத்த முயல்பவர்கள் அதை உருக்குலைக்கிறார்கள்
பிடிக்க முயல்பவர்களிடமிருந்தோ அது நழுவி
விடுகிறது.

இவ்வுலகின் உண்மைகள் சில.
சில வழிகாட்டுகின்றன; சில பின்பற்றுகின்றன.
சில வெப்பம் மிகுந்தவை; சில குளிர் கொண்டவை
சில வலிமையுடன்; சில பலகீனமாக.
சில நிதானத்துடன்; சில நிலையற்று
இதுதான் இயற்கை நியதி.

வளர்ந்தவர்கள் – ஞானிகள் –
எதிலும் உச்சநிலைக்குப் போவதை ஒதுக்குகிறார்கள்.
படாடோபங்களைப் புறக்கணிக்கிறார்கள்
ஊதாரித்தனத்தை ஒப்புக்கொள்வதில்லை
அவசரமான முடிவுகளைத் தவிர்க்கிறார்கள்.



விளக்கம்.

கடல் உப்பு இயற்கை தந்த உணவு. அதைச் 'சுத்தப் படுத்துகிறேன் பேர்வழி' என்று வெள்ளை வெளேர் என்ற சிறு படிகங்களாக 'டேபிள் சால்ட்' என்று

விற்றார்கள். பின்னால் கண்டுபிடித்தார்கள், அதனுடன் அயோடின் சேர்க்கவேண்டும் என. கடல் உப்பில் மக்னீசியம் போன்ற பல பொருள்கள் இருக்கின்றன. ஆகவே, கடல் உப்பே மேல் என்று கண்டு பிடிக்கக்கூடும் நாளை! இயற்கையை ஏற்க 'மறுத்து, இயற்கையை மேம்படுத்துவதாக எண்ணி, இயற்கையுடன் விளையாடு கிறார்கள்!

'பிறந்த குழந்தைக்கு சோயா பால் கொடுங்கள். தாய்ப்பால் கொடுத்துவந்தால் பெண்களின் மார்பு அழகு குன்றிவிடும்' என்றார்கள். அதாவது இயற்கை யுடன் — தாய்ப்பாலுடன் — மோதினார்கள். பிறகு கண்டுபிடித்தார்கள் — தாய்ப்பால்தான் சிறந்தது, நோய் எதிர்ப்பு சக்தி கொண்டது என்ற உண்மையை. காற்றில் பெட்ரோல் புகையையும் டீசல் புகையையும் இன்று கலக்கிறார்கள். சாலைகளில் நாம் புகைமண்டலத்தில் நீந்துகிறோம். நம் நுரையீரல்கள் பாழ்படுகின்றன. நச்சுக் காற்றை மூச்சுக் காற்றாக உட்கொண்டால் என்ன ஆகும்? நுரையீரல் பாதிக்கப்படும்.

மனிதன் இயற்கையை மதிப்பதில்லை. நமது குளிர் சாதனப் பெட்டியில் குளிரை ஏந்திச் செல்லும் 'புளூரோ கார்பன்' என்ற வாயு நாளடைவில் காற்றில் கலந்து மனித இனத்துக்குப் பாதுகாப்பாக இருக்கும் ஓசோன் மண்டலத்தில் ஓட்டை போடுகிறது என்று விஞ்ஞானி கள் எச்சரிக்கிறார்கள்.

விஸ்கான்சின் மாநிலத்தில் பயிர்களை அழிக்கும் பூச்சிகளைக் கொல்ல மருந்து தெளித்தார்கள். பூச்சிகள் செத்தன; உண்மை. ஆனால், பத்தாண்டுகள் கழித்து வந்து பார்த்தபோது, அங்கே புதுவிதப் பூச்சிகள் இருந் தன. இந்தப் பூச்சி பழைய பூச்சி போலவே இருந்தது. ஆனால், இதன் தாவங்கட்டையில் ஒரு அழுத்தமான

தோலினால் ஆன பை தொங்கியது. அந்தப் பூச்சிகள் கீழே கிடந்த பூச்சிகொல்லி மருந்துகளைத் தனது பையில் சேகரித்து, எதிரிகள் மீது பீய்ச்சி அடித்துக் கொன்றுகொண்டிருந்தன! சிந்தியுங்கள். ஆறடி உயர முள்ள மனிதன்! பூச்சியோ சின்னஞ்சிறிய ஒன்று. இதில் யார் புத்திசாலி? இதில் யாரை யார் வெல்கிறார்கள்?

இயற்கையை நாம் மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். மதிக்காவிட்டால் நாம்தான் அழிவோம்.

முதலில் வீட்டில் மனைவியை மதியுங்கள்; கணவனை மதியுங்கள்; குழந்தைகளை மதியுங்கள்; பெற்றோரை மதியுங்கள். ஒவ்வொன்றும் ஓர் ஆத்மா.

இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பணியைச் செய்யவே வந்திருக்கிறார்கள். அதிலே யார் பெரியவர்? யார் சிறியவர்?

ஒரு வீட்டில் நடந்தது; சொன்னார் நண்பர். "தெருவில் கோலம்போட அரிசி மாவுக்குப் பதில் விலைகுறைவான சுண்ணாம்புக்கல் மாவை வாங்கிக் கோலம் போட ஆரம்பித்தாள் என் மனைவி. நான் சொல்லிப்பார்த்தேன் — அரிசிமாவைத் தின்ன வரும் எறும்புகளின் சார்பில். அவள் கேட்கவில்லை.

"ஒரு முக்கியமான நாளன்று எங்கள் வீட்டில் திடீரென மின்சாரம் 'கட்' ஆகிவிட்டது. எங்கும் இருட்டு. ஒரு வேலையும் நடைபெறவில்லை. மறுநாள் மின்பணியாளர்கள் வந்தபோது மின்சாரக் கம்பிகள் இணைக்கப்பட்டு இருக்கும் சிறுபொந்தில் எறும்பு மண்ணைக் கொண்டுவந்து தள்ளி, மின்சாரக் கம்பி களின் தொடர்பில் மண்ணைப் போட்டுவிட்டது என்பதைக் கண்டுபிடித்தார்கள்..."

"பார்த்தாயா?" என்று கேட்டார் கணவர்!

"எறும்புக்கு என்ன மின்சார கனெக்ஷனா தெரியும்?" என்று பதிலுக்குச் சொன்னார் மனைவி!

சம்பவங்களுக்குத் தொடர்பு இருக்கிறது என்றும் எடுத்துக் கொள்ளலாம். ஏதோ தற்செயலாக ஏற்பட்டது என்றும் எடுத்துக்கொள்ளலாம்.

ஆனால், இவ்வுலகில் எல்லாமே பரஸ்பரம் சார்ந்து உதவியாகத்தான் படைக்கப்பட்டிருக்கின்றன என்பதுதான் அந்த உண்மை. இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள எல்லாமே ஒரு நிதானத்தில், ஒன்றை ஒன்று மிஞ்சாமல், ஒரு சமதளத்தில்தான் இயங்குகின்றன.

அணுவின் மையத்தில் உள்ள புரோட்டானின் உள் அமைப்பை அறிய அமெரிக்க விஞ்ஞானிகள், அதைப் பில்லியன் டாலர் கருவி கொண்டு உடைக்க முயன்றார்கள். நமது ஊர் யோகிகள் அட்டமா சித்திகளில் ஒன்றான அணிமா (அணுவுக்குள் நுழையும் சக்தி) சக்தி கொண்டு, அதன் அமைப்பை அறிந்து தெரிவித்தார்கள்.

மனிதன் இவ்வுலகில் படைக்கப்பட்டான் என்றால், அது இயற்கைமீது ஆதிக்கம் செலுத்துவதற்காக அல்ல. இயற்கையின் தன்மையை அறிந்து, அதை உதவிக்கு அழைத்து, அதனுடன் அனுசரித்து வாழத்தான்!

சில இடங்களில் பலத்தை உபயோகிக்க வேண்டும். சில இடங்களில் அமைதியாக இருக்க வேண்டும். இவ்வுலக இயக்கத்தில் இரண்டும் தேவை. கடலின் ஆரவாரமும் தேவை; வெட்டவெளியின் மௌனமும் தேவை.

இன்றைய சமுதாயத்தில் புற்றுநோய், எய்ட்ஸ், மாரடைப்பு போன்ற நோய்கள் அதிகமாகின்றன என்

றால், மனிதன் தன் சூழ்நிலையிலோ, தன் உணவிலோ, தன் எண்ணங்களிலோ இயற்கை விதியை மீறுகிறான் என்பதுதான் அர்த்தம்.

அன்றாட வாழ்வில் இயற்கையுடன் அனுசரித்து வாழமுடியுமா?

நிச்சயமாக முடியும்.

முதலில் எறும்புக்குச் சுண்ணாம்புக் கல்லைப் போடாதீர்கள்!




19

செயலற்ற செயல் செய்யும் சாதனை

கவிதை

நியாயத்துடன் நாட்டை நிர்வகி.
வியக்கவைக்கும் வியூகத்துடன் படைகளை நகர்த்து
உலகை அதன்போக்கில் விடு; வெற்றிகொள்வாய்.
இது இப்படி என்று எப்படி எனக்குத் தெரியும்?
இப்படித்தான்:
செய்யக்கூடாதவை என்ற தடைகள் அதிகம் ஆக ஆக
மக்கள் அதிகமாக ஏழைகளாகின்றனர்.

வன்முறை ஆயுதங்களின் புழக்கம் அதிகம் ஆக ஆக
நாடு சீர்குலைகிறது.
அதிபுத்திசாலித்தனமும் தந்திரங்களும் அதிகம் ஆக ஆக
விசித்திரமான காரியங்கள் நிகழ்கின்றன
சட்டதிட்டங்களும் கெடுபிடிகளும் அதிகம் ஆக ஆக
குற்றவாளிகள் அதிகமாகிறார்கள்.
வளர்ந்தவர்கள் என்ன சொல்கிறார்கள்?
நான் அடக்கி வாசிக்கிறேன்; மக்கள் திருந்துகிறார்கள்.
நான் அமைதியை நாடுகிறேன்; மக்கள் நேர்மையுடன்
நடக்கிறார்கள்.



நான் குறுக்கிடுவதில்லை; மக்கள் வளமோடு
வாழ்கிறார்கள்.
நான் ஆசைகளைத் துறப்பதில் ஆசை காட்டுகிறேன்;
மக்கள் எளிய வாழ்வுக்குத் திரும்புகிறார்கள்.

விளக்கம்

செயலற்ற செயல்; முயற்சி இல்லாத• முயற்சி... என்ன அது? 'செயல் இல்லாமல் ஒரு காரியம் ஆகுமா?' என்றால், சில சமயம் காரியம் செய்வதன்மூலம் நம் காரியங்களுக்கு நாமே தீங்கிழைக்கிறோம். சில சமயம் காரியங்களைச் செய்யாமல் விட்டுவிடுவது நல்லது. ஏன்?

'தானே இயங்கும் பிரபஞ்சம்!' இந்தப் பிரபஞ்ச ஓட்டத்தில் நமது நல்லெண்ணம், நமது நல் நோக்கம்

லயம் பெறும்போது காரியங்கள் தாமாக நிகழ்கின்றன. அலட்டிக் கொள்வதனால் பயனில்லை. சுற்றிச் சுற்றி ஓடுவதுகூட செயல்தான்! ஆனால், ஒரு ஊருக்கும் போக மாட்டோம்.

'உலகை அதன் போக்கில் விடு' என்கிறார் ஞானி லாட்சு. நாம் செய்ய வேண்டியதை எல்லாம் செய்த பிறகு, அதற்குமேல் என்ன செய்ய முடியும்? 'ஆண்டவன் விட்ட வழி' என்று எடுத்துக்கொள்கிறோமே, அதுதான் செயலற்ற செயல்.

மனவியல் ரீதியில் பார்த்தோமானால், நிர்வாகத்தில் விடுதலை செய்தல் (Release) 'விட்டுவிடுதல்' என்று இதைச் சொல்வார்கள். ஒரு காரியம் ஆகவேண்டியிருந்தால், அதைப் பற்றி தீவிரமாக ஆராய்ச்சி செய்து, தீவிர ஆர்வத்துடன் செயல்பட்டு, மனத்தால் விட்டுவிட்டோமானால் காரியம் தானே நடக்கும்.

அதையே மீண்டும் மீண்டும் சதா சிந்தித்துக் கொண்டிருந்தால் பயன் தராது. விட்டுவிட வேண்டும்; அதைத் தற்காலிகமாக மறந்துவிட வேண்டும்.

அப்படி விடப்படும் எண்ண சக்திதான் காரியத்தைச் சாதிக்கிறது.

அத்துடன் 'வியூகத்துடன் படைகளை நகர்த்து' என்கிறார் லாட்சு. லார்டு மவுண்ட் பேட்டனும் 'சரியான இடத்தில் துருப்புகளை நிறுத்திவிட்டால் துப்பாக்கியைத் தூக்கவும் வேண்டுமா?' என்பார். அதன்பின் துப்பாக்கியைத் தூக்கிச் சுடவேண்டியதில்லை. எதிரிப்படை தானே பின்வாங்கும். இந்த வியூகம்தான் செயலற்ற செயல். 'கொக்கொக்க கூம்பும் பருவத்து' என்கிறாரே வள்ளுவர். அப்படிக் கொக்கு பல

நாழிகை செயலற்று நிற்கிறதே, அதுதான் செயலற்ற செயல்.

வாழ்வின் இத்தகைய நுட்பமான உண்மைகளை லாட்சு எங்கிருந்து பெறுகிறார்? உலகைப் பார்ப்பதன் மூலம்.

'அது செய்யாதே, இது செய்யாதே' என்று தடைகளைச் சொல்லி ஓயாது குழந்தைகளைக் கண்டித்துக் கொண்டிருந்தோமானால், குழந்தை என்ன ஆகும்? தடைகள் அவனை முடக்கிவிடும்; முன்னேற்ற எண்ணங்களை ஒடுக்கிவிடும். அதாவது அலட்டல், அதட்டல் அதிகம் ஆக ஆக குழந்தை முடங்கிவிடுவது போலத்தான் ஒரு நாட்டு மக்களும் ஏழைகளாகப் போய்விடுவார்கள்.

அலட்டலின் உச்சகட்டம் அதிபுத்திசாலித்தனம்; தந்திரங்கள். ஒரு அதிபுத்திசாலி, என்ன வியூகம் வகுத்து உங்களை வீழ்த்துவான் என்று சொல்லமுடியாது. ஒரு நாட்டில் சட்டதிட்டங்களும் கெடுபிடிகளும் அளவு கடந்து போகும்போது அதை மீறத்தான் மீறுவார்கள். அது நாட்டின் அமைதியைக் குலைக்கும்; குற்றவாளிகளை உருவாக்கும்.

உதாரணமாக, நமது ஊர் தொழிலதிபர்களின் கறுப்புப் பணம். தொழில் செய்பவனுக்கு நியாயமான லாபம் இருந்தால்தான் தொழில் செய்ய முடியும். தன் நேரத்தையும், உழைப்பையும், பொருளையும் அரசாங்க அதிகாரிகளுக்குப் பதில் சொல்லிக்கொண்டிருப்பதிலேயே செலவிடவேண்டி வந்தால் என்ன ஆகும்? குற்றவாளிகள்தான் உருவாவார்கள். சட்டத்தை மீறும் நிர்ப்பந்தம்தான் ஏற்படும்.

'வீணான, நியாயமற்ற தடைகளைப் போடா தீர்கள். கெடுபிடி ஆட்சி செய்யாதீர்கள். வன்முறை ஆயுதங்களையும் அப்படிப்பட்ட மனிதர்களையும் (தாதாக்களையும்) வளர்க்காதீர்கள். அதிபுத்திசாலி களைக் கண்காணியுங்கள்!' - இவைதான் ஆட்சியில் இருப்பவர்களுக்கு — ஐந்து சக்ரவர்த்திகளுக்கு ஆலோ சகராக இருந்த — லாட்சு கூறும் அறிவுரை.

மேலும் கூறுகிறார் லாட்சு:

'மக்களின் அன்றாட வாழ்வில் நான் குறுக்கிடுவ தில்லை. எனவே, மக்கள் வளமோடு வாழ்கிறார்கள்...'

அரசாங்கம் ஒரு தேவையான இடைஞ்சல் என்று சொன்னார் ஒரு அரசியல் ஞானி.

அரசாங்கம் தேவை. ஆனால் இடைஞ்சல் செய்யக்கூடாது. ஆனால் இன்று இடைஞ்சல் தருவதாக இருக்கிறது.

மக்கள் வாழ்வில் எதற்கெடுத்தாலும் அரசு குறுக் கிடக்கூடாது. அப்போதுதான் மக்கள் வளமோடு வாழ முடியும். ஒரு தலைவன் எவ்வளவுக்கெவ்வளவு பணம், பதவி, புகழ் இவற்றையெல்லாம் துறக்கிறானோ (அப்படிப் பதவியில் இருந்து இறங்கியவர் காமராஜர்) அப்போதுதான் அவன் வாழும் வாழ்வு ஓர் எடுத்துக் காட்டாக இருக்கும் மக்களுக்கு.

ஏனெனில், உலக வாழ்வின் ஒரு மிகப்பெரிய தத்துவம் — வாழ்க்கை முறை — எளிமைதான். இன்றைய சமுதாயம் எளிமை, நேர்மை, அஹிம்சை என்ற அடிப்படை உண்மைகளின் எதிர்த்திசையில் வெகு வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

20

இடம் கொடுங்கள்! ஏற்றுக்கொள்ளுங்கள்!



கவிதை

வருவனவற்றை தன்னுள் வாங்கிக்கொள்வதும்
பலவீனமானதும் தண்ணீரைப்போல் வேறில்லை.
எனினும், அசைக்க முடியாததை ஆட்டங்காணச்
செய்கிறது.
கடினமானவற்றைப் பொடியாக்குகிறது.
அதற்கு நிகர் ஏதுமில்லை.
இதற்கு மாற்றாக ஒரு பொருள் இல்லை.
இங்கே மென்மை வலிமையை வெற்றி காண்கிறது;
பலம்குறைந்த ஒன்று பலசாலியை ஆள்கிறது.
உலகில் யாரும் இதை உணர்வதில்லை.
உணர்ந்தவர்களும் இதை உபயோகிப்பதில்லை.
அதனால்தான் ஞானிகள் கூறுகிறார்கள்:
யார் மக்களின் அவலநிலையையும் அழுக்குகளையும்
ஏற்றுக்கொள்கிறார்களோ,
அவர்களே இம்மண்ணின் தெய்வீகம் கொண்ட
தலைவர்கள்.
யார் நாட்டின் துரதிர்ஷ்ட நிலையை
ஏற்றுக்கொள்கிறார்களோ,
அவர்கள் உலகை ஆள்கிறார்கள் – சொர்க்கத்தின்
தேவதைகளாக,
இவ்வுலகில்தான் என்ன முரண்பாடு!

விளக்கம்


தண்ணீரை விரலால் தொட்டால், அது ஈரப் பசையாகத் தோலில் ஒட்டிக் கொள்கிறது; அவ்வளவு மென்மை. அதுவே, ஆறாக ஓடும்போது பாறைகளை யெல்லாம் உடைத்து, உருட்டி, சின்னஞ்சிறு கூழாங்கற் களாக மாற்றுகிறது. பாறையின் இடுக்கில் ஒரு சிறு பிளவு இருக்குமானால், அதில் நீர் புகுந்துவிடும். பனிக் காலத்தில் அது பனிக்கட்டியாக மாறி, விரிவடைந்து பெரிய பாறையையே இரண்டாகப் பிளந்துவிடுகிறது. தண்ணீர் பலவீனமானதுதான். ஆனால், அதுவே பலம் மிகுந்தவர்களை எல்லாம் கதிகலங்கச் செய்கிறது ஆறாக... வெள்ளமாக.

"இது என்ன முரண்பாடு பாருங்கள்!" என்கிறார் ஞானி லாட்சு.

கடினமான ஒன்று மென்மையானதை வெல்வது என்பது சாதாரணமான விஷயம். ஆனால், மென்மை யான, பலவீனமான ஒன்று உறுதியானதை, வலிமை யானதை வெல்லும் என்றால், இந்தியாவில் பிறந்த ஒரு 'அரைநிர்வாணப் பக்கிரி' சூரியனே அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தை வென்ற கதைதான் நினை வுக்கு வருகிறது. மென்மையான ஆயுதம் அகிம்சை - சத்தியம். அதன் எதிரே துப்பாக்கி ஏதும் செய்ய முடிய வில்லை. இதைத்தான் முரண்பாடு என்கிறார்.

"உதாரணம் காட்டி உங்களுக்குச் சொன்னால் இது புரிகிறது. ஆனால், உபயோகிக்கமாட்டேன் என் கிறீர்களே?" இதுதான் லாட்சுவின் கேள்வி.

வாழ்வின் நுட்பங்கள் சின்னஞ்சிறு விஷயங்களாக இருக்கின்றன. தேரின் அச்சாணியும் சிறியதுதான். அது எப்படித் தேருக்கு முக்கியமோ, அப்படி நம் வாழ்விலும்



இந்த நுட்பமான உண்மைகளை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

தண்ணீர் அழுக்குகளையும் கரைத்துக்கொள் கிறது. கல்லின்மீது ஓடுவதானாலும், முள்ளின்மீது நடப்பதானாலும் அதற்கு லட்சியமில்லை. அதாவது — எது இருக்கிறதோ, அதை ஏற்றுக்கொள்கிறது. குறைப் படுவதில்லை; முறையிடுவதில்லை.

அப்படி இருப்பதை ஏற்றுக் கொள்பவன்தான் தலைவன். சாதாரண மக்கள், இருக்கிற நிலைமையைக் கண்டு புலம்புகிறார்கள். புலம்புவதன் மூலம் பிரச்னை யையும் அதன் பாதிப்பையும் துன்பத்தையும் அதிகப் படுத்துகிறார்கள். ஒரு நல்ல தலைவன் என்ன செய் கிறான்? நாட்டின் அவலநிலையை, இதுதான் கொடுக்கப் பட்டிருக்கிறது என்று ஏற்றுக் கொள்கிறான். பின்னர், அதை மாற்றுவதற்கான வழியைக் காண்கிறான்.

"அவர்கள்தான் இந்தப் பூமியைக் கோயிலாக்குபவர்கள் என்று ஞானிகள் குறிப்பிடுகிறார்கள்" என்கிறார் லாட்சு.

ஒரு நாட்டில் புயல், வெள்ளம், பூகம்பம், எரிமலை என்று இயற்கையின் எதிர்பாராத விளைவுகள் நிகழலாம். அது நமக்கு மேற்பட்ட செயல். அதை மேவி வர வேண்டும் என்றால், அவன் எதையும் ஏற்றுக்கொள்ளும் தன்மை பெற்றிருக்க வேண்டும். தண்ணீர் எப்படித் திரவ ரூபத்தில் நீராக, ஆவி ரூபத்தில் நீராவியாக, உறைந்த நேரத்தில் பனிக்கட்டியாக மாறித் தன் பணியைச் செய்கிறதோ, அப்படி ஓர் அரசன் வெப்பத்திலும் குளிர்ச்சியிலும், நன்மையிலும் தீமையிலும் ஒரே நம்பிக்கையுடன் தன்னையும் நாட்டையும் ஆள்கிறான்.

சீன ஞானி தண்ணீரை அடிக்கடி உவமை காட்டுகிறார். ஏனெனில், தண்ணீரின் குணம் அசாதாரணமானது.

வாழ்வில் தடை இருக்கிறதென்றால், அத்துடன் மோதாதீர்கள், போராடாதீர்கள். அதைக் கரைக்க முயலுங்கள். அதை ஏற்றுக்கொள்ளும், அதை ஒப்புக்கொள்ளும் மனப்பக்குவம் தேவை. அப்போதுதான் அதை வெற்றி காணலாம்.

அழுக்கு இருக்கிறதென்றால், சுத்தப்படுத்த முயலுங்கள். குறை கூறிக்கொண்டு நிற்காதீர்கள். தண்ணீர், குப்பையையெல்லாம் கரைத்துக் கொண்டு போய், மீண்டும் தன்னைச் சுத்தப்படுத்திக் கொள்ளவில்லையா?

வீண்பழி சுமத்தப்படுகிறதா? அவப்பெயர் ஏற்படுகிறதா? இன்றைய நிலை அவலமாக இருக்கிறதா? எதிர்பாராத விபத்துக்கள் துரதிர்ஷ்டங்களாக வாழ்வில் முளைக்கின்றனவா?

மோதாதீர்கள். நிலைமை இதுதான் என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். ஏற்றுக்கொள்ளும்போது, அதன் வலிமை குறையும். அதன்பின், அதை மேவி வரும் வழியைக் கவனியுங்கள். மேவி வரும் வழி என்ன? கொஞ்சம் கொஞ்சமாகக் கலப்பதுதான். சமுதாய மாற்றம் ஒரு நாளில் ஏற்படுவதல்ல. மக்கள் மனத்தில் உங்கள் நல்லெண்ணங்கள் நீரோட்டம் போல ஓடிக் கொண்டிருக்கட்டும். பழைய கொள்கைகளின் பிடிப்பு தளர்ந்து போகும். அஹிம்சையை உபயோகித்து, வலிமையை வெல்லலாம் என்பதை 2600 வருஷங் களுக்கு முன் லாட்சு கூறியிருக்கிறார். அதை நிரூபித்துக் காட்டியிருக்கிறார் மகாத்மா காந்தி.

நம்புங்கள்... மென்மை, வலிமையை வெல்லும். பாரதியார் இதைத்தான் 'பகைவனுக்கருள்வாய்' என்று பாடுகிறார். பகைவனிடம் பகைப்பதை விட, அதற்கு முரண்பாடான அன்பைப் பிரயோகியுங்கள் என்கிறார் லாட்சு. உலகில் முரண்பாடுகள் என்று நாம் நினைப் பவையெல்லாம் முரண்பாடுகள் அல்ல, இணக்கத்தின் அறிகுறிகள்.



21

மனிதனும் பிரபஞ்சமும் - ஒரே அச்சில்

கவிதை

உருவத்தைக் கடந்த
ஏதோ ஒன்று இருந்திருக்கிறது.
மூடி மறைக்கப்பட்டு,
வானும் பூமியும் தோன்றுமுன்,
அவ்வளவு அமைதி; அவ்வளவு தனிமை,
எங்கும் வியாபித்து, எவ்வித மாற்றமும் இன்றி.
உலகின் தாய் என்றுதான் இதை
உருவகப்படுத்த முடியும்.

அதன் பெயர், நான் அறியேன்.
பெயரிட வேண்டுமானால் 'டௌ' என்பேன்
பிரபஞ்ச இயக்கம் என்பேன்
அதன் விலாசம் விரும்பி நிர்ப்பந்தித்தால்
'மகத்தானது!' என்றுதான் சொல்ல முடியும்.

மகத்தான ஒன்று என்பது -
கலகலப்பானது - இயக்கம், அதன் பொருள்.

இயக்கம் என்றாலோ அப்பாலுக்கு அப்பால் செல்வது
என்பது அதன் அர்த்தம்.



அப்பாலுக்கு அப்பால் செல்கிறது என்றாலோ
திரும்பி வருவது என்பது அதன் பொருள்.

எனவே
இப்பிரபஞ்ச இயக்கம் மிகப் பெரிய விஷயம்.
வானமும் பூமியும் மிகப் பெரிய இயக்கங்கள்தான்.
தலைவனும் அப்படித்தான்.

இவைதான் இப்பிரபஞ்சத்தின் நான்கு பெரிய
அம்சங்கள்.
அதில் தலைமைப் பண்பும் ஒன்று.

மனிதன் பூமியின் போக்கில் செயல்படுகிறான்
பூமியோ வானின் இயக்கத்துக்கு ஏற்பச் செயல்படுகிறது
வானமோ பிரபஞ்ச இயக்கத்தை முன்மாதிரியாகக்
கொண்டு.
பிரபஞ்ச இயக்கமோ தானே இயங்குகிறது — தன்
திட்டப்படி.

விளக்கம்

'நாம் யார்? எங்கிருந்து வந்தோம்? எங்கே போகி றோம்? ஏன் இந்த வாழ்வு?' என்பன போன்ற கேள்வி கள் நம்முன் அடிக்கடி எழுகின்றன.

இந்தக் கேள்விகளைத்தான் ஆராய்கிறார் ஞானி லாட்சு. நாம் வாழும் இந்த உலகம் — பூமி. நமது ஐம் புலன்களால் நாம் வாழும் பூமியை, காற்றை, தீயை, நீரை, வானத்தை உணர்கிறோம். நாம் வாழும் பூமி பொரு ளால் ஆன உலகம். சட உலகம் என்கிறோம். சும்மா உட்கார்ந்திருப்பவனைப் பார்த்து, "ஏ, ஜடமே!" என்பார்கள். அதாவது, ஆடாது அசையாது எதுவும் செய்யாமல் கல்போல, மரக்கட்டை போல உட்கார்ந்து இருப்பவனை 'ஜடம்' என்கிறோம்.

ஒரு கணம் யோசித்துப்பாருங்கள்... இந்தக் கல்லும் மரக்கட்டையும் உண்மையிலே ஆடாது அசையாது செயல்படாத ஜடமா? கல்லும் சரி, மரக்கட்டையும் சரி, அணுக்களால் ஆக்கப்பட்டவை. அந்த அணுக்களுக் குள்ளும் இயக்கம், ஓட்டம் இருக்கிறது. அணுவில் எலெக்ட்ரான் ஒரு வட்டத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது

என்பது நமக்குத் தெரியும். எனவே, மரக்கட்டையைப் பார்த்து எப்படி நாம் ஜடம் என்று — ஓடாதது, அசையாதது — என்று சொல்ல முடியும்! அதன் ஓட்டம், இயக்கம் நம் கண்ணின் பார்வைக்குத் தெரிவதில்லை... அவ்வளவுதான். அதாவது, மூடி மறைக்கப்பட்டிருக்கிறது என்கிறார் லாட்சு.

நாம் காணும் இந்தப் பிரபஞ்சம் எப்படி உருவாயிற்று; அதில் நாம் எங்கே, எந்தத் தளத்தில், எந்தப் படியில் இருக்கிறோம்; அதற்கும் நமக்கும் உள்ள தொடர்பு என்ன என்ற பெரிய விஷயங்களை இங்கே ஆராய்கிறார். ஞானி அல்லவா...? உண்மைகளைக் காண்கிறார், திரைகளைக் கடந்து. கவிஞர் அல்லவா...? நமக்குச் சொல்கிறார் — தொட்டும் தொடாமலும், மறைத்தும் திறந்தும்.

மூலம் என்ற ஏதோ ஒன்று முதலில் — முழு முதற் பொருளாக — இருந்திருக்கிறது. எப்படி காற்றில் இருக்கும் ஈரப்பசை — நீராவி — நம் கண்களுக்குத் தெரிவதில்லையோ, அதுபோல அது நமக்குத் தெரிவதில்லை. ஆனால், அதுதான் பின்னால் தண்ணீராகி, அதன்பின் பனிக்கட்டியாகி நாம் பார்க்கக்கூடிய திடப் பொருளாக, சடப் பொருளாக, இவ்வுலகமாக மாறியிருக்கிறது.

சடத்தின் நேர் எதிர்ப்பக்கத்தை வெற்றிடம் என்று கூறலாம். அது உருவமற்றது. வானமும் பூமியும் தோன்று முன் அதுதான் இருந்திருக்கிறது. அந்த 'இல்லாத உலகிலிருந்து'தான் நாம் பார்க்கும் உலகம், இருக்கும் உலகம் தோன்றியிருக்கிறது என்கிறார்.

இதையே மிக அழகாகக் குதம்பைச் சித்தர் பாடுகிறார்:

'வெட்ட வெளிதனையே மெய்யென்று இருப்போர்க்குப்
பட்டயம் ஏதுக்கடி குதம்பாய் பட்டயம் ஏதுக்கடி?'

என்று. "வெட்டவெளிதான் மெய், உண்மை, மூலம். அதை அந்த ஞானி கண்டுபிடித்துவிட்டான். அவனைப் போய், 'நீ படித்திருக்கிறாயா? பட்டம் பெற்றிருக்கிறாயா — இந்த உண்மைகளைச் சொல்ல?' என்றா கேட்போம் என்கிறார் குதம்பைச் சித்தர்.

இந்த வெற்றிடமான மூலத்தை மகத்தானது. அதிசயமானது என்று சொல்லும் லாட்சு, அடுத்து அதற்கு விளக்கம் கொடுக்கிறார், கவனியுங்கள்... மகத் தானது என்றால், 'கலகலப்பானது — இயக்கம் அதன் பொருள்' என்று. அதாவது, அசைவைச் சொல்கிறார். "இந்த இயக்கம் அப்பாலுக்கு அப்பாலாகச் செல்கிறது. அப்பாலுக்கு அப்பால் என்றால் திரும்பி வருவது என்று பொருள்" என்று சொல்லி நம்மைத் திகைக்கவைக் கிறார். திரும்பி வருகிறது என்றால் உலகம், பிரபஞ்சம் ஒரு வட்டத்தில், ஒரு பந்து போன்ற உருண்டை வடிவத்தில் இருக்கிறது என்கிறார்.

மரணத்தை எதிர்நோக்கி வாழும் மனிதன் எங்கே செல்கிறான்? மரணமில்லாப் பெருவாழ்வுக்குச் செல் கிறான். தன் விருப்பத்தால் மற்ற உயிர்களை மீட்க மீண்டும் பிறக்கிறான். இப்படித்தான் வாழ்க்கை, வாழ்வு-மரணம் என்று ஒரு வட்டத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது.

வெட்டவெளியிலிருந்து, அசைவில் இருந்து, ஓட்டத்திலிருந்து, இறங்கும் பிரபஞ்சம் இந்தப் பூமியை யும் ஜீவராசிகளையும் மனிதனையும் படைத்திருக்கிறது. இதில் வேடிக்கை என்னவென்றால், அந்தப் பிரபஞ்ச இயக்கம் எந்த அமைப்பில் இருக்கிறதோ, அதே

அமைப்பில்தான் மனிதனும் செய்யப்பட்டிருக்கிறான். 'அண்டத்தில் உள்ளதுதான் பிண்டத்திலும்.' மேலே வானில் எப்படிக் கோள்கள் ஒன்றை ஒன்று சுற்றி வருகின்றனவோ, அதே போலத்தான் அணுவிலும் இயங்குகின்றன. பிரபஞ்ச இயக்கத்தின் ஒழுங்கை பிரபஞ்சலயம் என்கிறோம். அதேபோன்று ஞானியான மனிதனின் வாழ்வை 'ஆன்று அவிந்து அடங்கிய சான்றோன் வாழ்வு' என்கிறோம்.



22

தலைமைக் குணம்

கவிதை

திறமை மிக்க வீரர்கள் போர்க்களத்தில்
போரிடுவதில்லை.
சிறந்த வீரர்கள் தங்கள் கோபத்தை
வெளிப்படுத்துவதில்லை.
மிகச்சிறந்த வெற்றி என்பது பிரச்னைகளில்
மூழ்குவதில்லை.
மனிதர்களைச் சிறப்பாக பயன்படுத்துபவன் ஏதோ
அவர்களைவிட
எளிமையானவன்போல் நடந்துகொள்கிறான்.
இதுதான் போட்டியற்ற நிலையில் விளையும்
மாபெரும் சக்தி.
இதுதான் மனிதத் திறமைகளை உபயோகிக்கும் உபாயம்.
இதுதான் சொர்க்கத்தின் பாதை.
நமது முன்னோர்கள் கண்ட முடிவான உண்மை.
இயற்கையின் நியதி.



விளக்கம்

மனிதனை இயக்குவது எது? அவனது குணங்கள். அவனைச் சிறக்கச் செய்வது எது? தலைமைப் பண்புகள். அந்தத் தலைமைப் பண்புகள் பிரபஞ்ச இயக்கத்தின் விதிகளை ஒட்டி, உயர் வாழ்க்கை நெறிகளாக மலரும் போது அவன் பிரபஞ்சத்துடன் ஒன்றி வாழ்கிறான். அப்போது அவன் பிரபஞ்ச இயக்கத்தை மட்டும் அறியவில்லை.. தானும் அதே அமைப்பில், தானும் அதே விதிகளுக்கு உட்பட்டு, தானும் அதே சக்திகளுடன் படைக்கப்பட்டிருக்கிறோம் என்கிற மாபெரும் உண்மையை — 'தன்னை அறியும் அறிவு' என்று கூறுகிறாரே திருமூலர் அதை — மனிதன் கண்டு

கொள்கிறான். அந்த மாபெரும் சக்தி — பரமாத்மா என்ற பெயரில் இந்தப் பிரபஞ்சமாகப் பரந்து நிற்கும் சக்தி — தன்னுள்ளும் இருக்கிறது — ஜீவாத்மா என்ற பெயரில் என்பதையும், 'தானே அது', தானே அந்தப் பிரபஞ்சத்தின் மூலசக்தி என்பதையும் உணர்கிறான்.

இந்தப் பிரபஞ்சம் எப்படி இயங்குகிறது? "தானே இயங்குகிறது — தன் திட்டப்படி, தன் விதிகளின்படி" என்கிறார் ஞானி. அதைப் புரிந்துகொண்டு அதன் பாதையில் செல்லும் மனிதன் — உயர் வாழ்க்கை நெறிகளுடன் வாழும் மனிதன் — தானே அதுவாகிறான். தன்னை அதற்குக் கொடுத்துவிட்டான், சரணடைந்து விட்டான். தான் அதுவாகிவிட்டான்.

இயற்கையின் அழகைப் பார்த்து ரசிக்கும் பாரதி, இதையே தன்னை மறந்த லயம் தன்னில் இருந்தேன் என்கிறார். தன்னை மறந்து, பிரபஞ்ச இயக்கத்தில் ஒன்றிய நிலையில் ஏற்படும் பாரதியின் அனுபவம் நமக்கும் அவ்வப்போது ஏற்படுகிறது. அதை நிரந்தரமாக்கும்போது அந்த மாபெரும் தெய்வம், அந்தப் பிரபஞ்ச மூலம், சொல்வதெல்லாம் 'என்' மூலம் வெளி வருகிறது. அப்படி வந்தவைதான் வேத உபநிடதம், திருமூலர், திருக்குறள், நால்வர் தேவாரம், பட்டினத்தார் பாடல், அருட்பா எல்லாம், எல்லாம். இதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? பூமியின் போக்கில் செயல்பட வேண்டும்.. வானின் போக்கில் செயல்பட வேண்டும். பிரபஞ்ச இயக்கத்தின் போக்கில் செயல்பட வேண்டும். 'அவன்' போக்கில் செயல்பட வேண்டும்.

போரில் வெற்றி என்பது வன்முறையைக் காட்டித்தான் பெற வேண்டும் என்பதல்ல. போர்க் குணம் நிரந்தரப் பகைமையையும், உயிர் நஷ்டத்தையும்,

பொருள் நஷ்டத்தையும் உருவாக்கும் இதனால் இரண்டு பேருக்குமே நஷ்டம்.

ஒரு பிரச்னையை விவாதிக்கிறோம். அப்போது நம் கோபத்தை வெளிப்படுத்துகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே எதிரியும் கோபப்படுகிறான். ஒரு சுடு சொல் அவனிடமிருந்தும் புறப்படுகிறது. எனவே, கோபத்தைக் காட்டாமல், வெளிப்படுத்தாமல் செயல்படும்போது நம் முழுத்திறமையும் உணர்வும் தம் காரியத்தில் ஈடுபடுகிறது; காரியத்தைச் சாதிக்கிறது.

ஒரு பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்றால் அந்தப் பிரச்னையில் மூழ்கிவிடக் கூடாது. 'பிரச்னை ஏன் ஏற்பட்டது? எதனால் ஏற்பட்டது? இதன் விளைவு கள் என்ன? இது தேவையா?' என்று பிரச்னைக்கு வெளியே சென்று சிந்திக்க வேண்டும். அப்போதுதான் பிரச்னை தீரும்.

பிரச்னை வரும்போது ஆணவத்தை உபயோகித் தோமானால், "நீ என்னை அவ்வளவு கேவலமாக எண்ணிவிட்டாயா? உனக்குச் சரியாகப் பாடம் கற்பிக் கிறேன்" என்று பழிதீர்க்கும் வஞ்சம் எதிரியிடம் வளர் கிறது.

மாறாக, கெட்டிக்காரன் ஆணவமாக நடந்து கொள்வதில்லை; எதிரியை மதிக்கிறான். சமமாக நடத்துகிறான். தன் எளிமையால் மரியாதையால் அவன் உள்ளத்தைத் தொடுகிறான்.

யார் சக்தி மிகுந்த சாதனையாளர்கள்? யார், எளிமையும், எதையும் சிறப்பாகச் செய்யும் நுட்ப அறிவையும் பெற்றிருக்கிறார்களோ அவர்கள்தான். ஒரு தலைவன் சதாசர்வ நேரமும் எதிரிக்கு ஈடுகொடுத்துக் கொண்டிருக்கவேண்டும் என்பதில்லை. எதிரியும்

எதிர்க்கட்சியினரும் நம்மை இப்படித் திசைதிருப்புவார் கள். நாம் நம் கோபத்தைக் காட்டிப் பதிலுக்குப் பதில் சொல்லிக்கொண்டிருந்தோமானால் எங்கும் போக மாட்டோம். தலைவனுக்குத் தேவை, உணர்வுகளைக் கடந்த அடக்கம்; வலிமையை மறைக்கும் எளிமை; கோபத்தைக் காட்டாத இனிமை. இவைதான் அதிசயங் களைச் சாதிக்கின்றன.

போர், வன்முறை என்ற ஒன்று எங்கிருந்து எழுகிறது? எல்லாமே மனித மனத்தில் எழும் அதிருப்தி, பொறாமை, ஆணவம், சுயநலம், வெறுப்பு, வீம்பு என்கிற அற்ப எண்ணங்களிலிருந்து எழுகின்றன. ஒரு மாபெரும் தலைவன், இந்த மனவியல் உண்மைகளைத் தெரிந்து கொண்டவன், பிரச்னையின் மூலத்துக்கே போகிறான்; அவற்றைச் சமப்படுத்துகிறான்.

வெறுப்பு வெறுப்பைத்தான் வளர்க்கும்; ஆணவம் வீம்பைத்தான் வளர்க்கும்; கோபம் பகையைத்தான் வளர்க்கும். எனவே, இவற்றின் நேர் எதிர் குணங்கள் தான் இவற்றைச் சமனப்படுத்தும்; பகையின் மூல காரணங்களை அழிக்கும். தீயவை தீய குணங்களால் அழிக்கப்படுவதில்லை. தீயவை நல்ல குணங்களால் தான் உருமாற்றம் பெறுகின்றன.

வலிமைக்குப் பதில் மென்மைதான்
கோபத்துக்குப் பதில் அன்புதான்
பகைமைக்குப் பதில் உறவுதான்
அதிகாரத்துக்குப் பதில் எளிமைதான்.

இதை எல்லாம் தலைவன் எங்கு கற்றுக் கொண் டான்? இயற்கையைப் பார்த்து, பிரபஞ்ச இயக்கத்தைப் பார்த்து, அன்பால் ஒவ்வொன்றும் இணைக்கப்

பட்டிருப்பதை அறிந்து; ஒன்றுக்கொன்று உதவியாக படைக்கப் பட்டிருப்பதை உணர்ந்து.

ஏன் அவை ஆக்கிரமிக்க விரும்புவதில்லை? தன் கொள்கைகளுக்கு ஏற்ப மற்றவற்றை மதமாற்றம் செய்ய விரும்புவதில்லை?

அது பிறருடைய உரிமைகளில் தலையிடுவதாகும். அதன் நீண்ட காலப் பலன் வஞ்ச உணர்வு, பழிதீர்க்கும் குணம், வன்முறை, போர் — இவைதான்.

இது தேவையில்லை; இது விவேகமுமல்ல. தேவைப்படுவது இன்று ஞானம். ஞானம் என்பது இந்தப் பிரபஞ்சத்தின் உண்மைகளை, உள்ளதை உள்ள படி உணர்வது; அது பிறர் உரிமைகளில் தலையிடுவ தில்லை; அத்துடன் எதையும் எதிர்பாராது செய்யும் பரஸ்பர உதவி என்ற குணத்தால் இந்தப் பிரபஞ்சம் இயங்குகிறது. இதை யார் கண்டு பிடித்தார்கள்? நம் முன்னோர்கள். உலகையும் பிரபஞ்சத்தையும் பார்த்து, அறிந்து, நமக்கு வழிகாட்டுகிறார்கள். இது காலங்கால மாக நல்லோர்கள், வளர்ந்தவர்கள் கண்ட பாதை.

போட்டியற்ற நிலைதான் உலகின் உயிர்நிலை; உயர்நிலை. போட்டி போட்டுக்கொண்டு போனோமா னால் எங்கே போவோம்? நாமும் அணுகுண்டு செய் கிறோம்; பாகிஸ்தானும் செய்கிறது. நாமும் ஏவுகணை செய்கிறோம்; பாகிஸ்தானும் செய்கிறது. இதற்கு முடி வேது? அணுகுண்டும் ஏவுகணையும் அழிக்கத்தான் பயன்படுமே ஒழிய, ஆக்கசக்தியாக அல்ல.

போட்டி ஆணவத்தை வளர்க்கிறது. ஆணவம் சுய நலத்தையும் பொறாமையையும், வஞ்ச உணர்வையும் வன்முறையையும் வளர்க்கிறது.

இந்தப் போட்டி போட்டு ஜெயிக்கும் குணத்தைத் தான் 'இன்று பள்ளிக்குழந்தைகள் முதல் மார்க் வாங்க வேண்டும் என்பதிலிருந்து விளையாட்டில்கூட ஜெயிக்க வேண்டும் என்பது வரை' விளைவுகளைப் பற்றிய விவேகமில்லாமல் வளர்த்து வருகிறோம்.

உலகில் இன்றும் போட்டியற்ற வாழ்க்கை நடத்தும் பழங்குடி மக்கள் வசிக்கிறார்கள்; வாழ்கிறார்கள்.

நாமோ நாகரிமடைந்தவர்கள்! போட்டியும் அதன் விளைவுகளும்தான் நாகரிகமா? முன்னேற்றமா?

மனநிறைவும் இனிய உறவுகளும் அல்லவா நம் லட்சியமாக இருக்க வேண்டும்...

எங்கோ போகிறோம்! எங்கே இந்த மனித இனத்தை இழுத்துக்கொண்டு போகிறோம்? சிந்தியுங்கள்!

23

உள்ளத்திலே ஒரு லயம்



கவிதை

உனது உள்ளத்தையும் உடலையும் ஒன்றிணைத்து
உன்னால் பிளவின்றி நிற்க முடியுமா?

உனது உயிர்மூச்சைக் கட்டுப்படுத்தும்போது
பிறந்த குழந்தையின் மென்மை உனக்கு வருமா?

உனது உள் உணர்வுகளைச் சுத்தப்படுத்தும்போது
அது கறை ஏதுமின்றி இருக்குமா?

மக்களிடம் அன்புகாட்டி வழிநடத்தும்போது
இருக்க முடியுமா உன்னால், தந்திரமில்லாமல்?

சொர்க்கத்தின் கதவுகளைத் திறக்கும்போதும்
சாத்தும்போதும்
பெண்மையின் தன்மையாய் மாற முடியுமா?

தெளிவாக எல்லாவற்றையும் தெரிந்துகொள்ளும்போது
உன் தர்க்கவாத அறிவால் அதை பின்னப்படுத்தாமல்
இருக்க முடியுமா?

உற்பத்தி செய்; உரம் ஊட்டு.
உருவாக்கு; உடைமை ஆக்கிக்கொள்ளாதே.
கட்டுப்படுத்து; சார்ந்து நிற்காதே.

அரசனாக அணைத்துச் செல் – ஆதிக்கம்
செலுத்தாதே.

இதுதான் இவ்வுலகின் மறை ஞானம்
மறைந்து கிடக்கும் ஞானம்.

விளக்கம்

உடல் பொருளால் ஆனது. உள்ளமோ பொருள் கடந்த ஒன்றால் ஆனது. இதுதான் இவ்வுலகின் இரட்டைத்தன்மை. இந்த இரண்டுமே ஒரு மூலத்திலிருந்து உற்பத்தி ஆயின. எனவே, உள்ளத்தையும் உடலையும் ஒன்றுபடுத்தும்போது மனிதன் மூல நிலைக்கே போய்விடுகிறான்.

இவ்வுலகில் பொருளும் சக்தியும் ஒன்றை ஒன்று அனுசரித்துச் செயல்படுகின்றன. அதே போலத்தான் ஒளியும் இருளும்; நன்மையும் தீமையும். ஒரு பக்கமும் சாயாமல் நிற்கும் நடுநிலையில்தான் நாம் இந்த உலகில் வாழக் கற்றுக்கொள்ளவேண்டும். அதாவது, விருப்பு வெறுப்பற்ற நிலை, பாரபட்சம் இல்லாமல் உண்மை அறியும் நிலை.

'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமைவேண்டும்' என்று வடலூர் வள்ளலார், உள்ளமும் உடலும் ஒன்றாமல் இருப்பவர்களைப் பற்றித் தான் பாடுகிறார். சொல்வதொன்று, செய்வதொன்று என்ற நிலை பிரபஞ்ச நியதிக்கு எதிரானது.

கண்ணுக்குப் புலனாகாத ஆன்மீகச் சக்தியையும் கண்ணுக்குப் புலனாகும் பொருள்நிலையையும் நாம் சேர்த்து உபயோகிக்கும்போதுதான் வாழ்வு சிறக்கும். ஆன்மீக அடிப்படையில்லாத – உள்ளத்தில் நேர்மை



யில்லாத — உலக வாழ்க்கை, சரிவிலும் துன்பத்திலும் தான் முடியும்.

நல்லெண்ணத்துடன் வாழ வேண்டுமென்று தீர்மானிக்கிறோம்; அன்புடன் பழகவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறோம். வருகிற ஒருவரின் முகத்தைப் பார்த்த உடனேயே, அவர் உதிர்க்கும் வார்த்தைகளைக் கேட்ட உடனேயே நமது மனஅமைதி குலைகிறது.

பேசுபவரது பொறாமை, ஆணவம், தற்பெருமை, அலட்சியப்போக்கு எல்லாமே நம்மை நிலைகுலைய வைத்துவிடுகின்றன.

ஞானி லாட்சு கேட்கிறார்; 'உன் உள் உணர்வுகளைச் சுத்தப்படுத்தும் போது, அது கறை ஏதுமின்றி இருக்குமா?' என்று. உள்ளத்தைச் சுத்தப்படுத்தி வைத்துத்தான் காலையில் வாழ்வைத் துவங்குகிறோம். ஒரு மனிதரின் வரவால், அது இப்போது கறைபடிந்து விட்டது. நமக்கு வேண்டுவது நிதானம்; நிலைகுலையாத பொறுமை.

இதோ, ஒரு தலைவன்... நெஞ்சினிக்கப் பேசுகிறான்... என்ன அடுக்குமொழி! அழகு தமிழ்! 'உண்மையைச் சொல்கிறேன்' என்று சொல்லி, நம்மை நம்பவைக்கிறான். இவனைத்தான் 'பொய்யுடை ஒருவன் சொல் வன்மையினால் மெய்போலும்மே... மெய்போலும்மே' என்று தமிழ்ப் பாடல் கூறுகிறது.

தலைவனைப் பார்த்து, 'மக்களை வழிநடத்தும் நீ தந்திரமில்லாமல் செயல்பட முடியுமா?' என்று கேட்கும் ஞானி லாட்சு, அடுத்து நம்மை அசர வைக்கிறார்!

'சொர்க்கத்தின் கதவுகளைத் திறக்கும்போதும் மூடும்போதும் — அதாவது, தலைவனே நீ நாட்டுக்குப் பல நன்மைகளைச் செய்யும்போது — உனக்கு ஏன் ஆரவாரம், ஏன் படாடோபம், நீ செல்லும் வழியெல்லாம் மின்வெளிச்சம்? அலங்கார வளைவுகள் இல்லாவிட்டால், நீ நுழையமுடியாதா...? அரசாங்கம் என்பது இருப்பதே தெரியாமல் அல்லவா இயங்க வேண்டும்? இது தெரியாதா உனக்கு?' என்று ஐந்து மாபெரும் மன்னர்களுக்கு ஆலோசகராகவும் அமைச்சராகவும் இருந்த மனிதர் கேட்கிறார்!

அடுத்து ஞானி சொல்லாமல் சொல்கிறார், ஒரு நுட்பமான விஷயத்தை! 'நீ சொர்க்கத்தின் கதவுகளைத் திறக்கும்போதும் மூடும்போதும் உன் செயல் பெண்மை யின் தன்மையில் இயங்குமா?' என்கிறார்.

அது என்ன, பெண்மையின் தன்மை? கணவன்-மனைவி உறவில், பெண்கள் பெண்மைக்கே உரிய அமைதியுடன் தன்னைக் காட்டிக்கொள்ளாமல் உடல் உறவில் செயல்படுவதைச் 'செயலற்ற செயல்' என்று குறிப்பிடுகிறார். Passive ஆக அங்கே செயல் இருக்கிறது! ஆனாலும் செயலற்றது போன்ற ஒரு மாயை! அரசாங்கத் தலைமை அப்படித்தான் செயலேதும் செய்யாதது போலச் செயல் புரிய வேண்டும் என்கிற இந்தத் தத்துவத்தைத் தன் கவிதைகளில் பல இடங்களில் ஞானி குறிப்பிடுகிறார்.

இதில் மென்மை மிகுந்த உளவியல் உண்மை களைக் குறிப்பிட்ட லாட்சு, கவிதையின் அடுத்த நாலு வரிகளில் ஒரு தலைவனின் வெளிப்படையான செயல் எப்படி இருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

நாம்தான் குழந்தைகளை உருவாக்குகிறோம்; அவர்கள் நமது சொந்த உடைமைகளல்ல. நாம் மற்றொரு மனிதப் பிறவியைத் திருமணம் செய்து கொள்கிறோம்; மனைவி, நமது உடைமையல்ல; வாங்குவதும் விற்பதும் போன்ற ஒரு பொருளல்ல; அவள் தனித்தன்மையும் சுதந்திரமும் கொண்ட ஒரு மனித ஆத்மா.

அரசன்தான்; நாட்டின் தலைவன்தான்; நாட்டு மக்களைக் காப்பாற்றுகிறான்; நன்மை செய்கிறான்; ஆனாலும் இந்த உரிமையை முன்வைத்து அவர்களை அடிமை போல் நடத்தக்கூடாது.

கட்டுப்படுத்தலாம், உதவலாம். ஆனால், அவர்கள் நம்மைச் சார்ந்து நிற்கும்படி ஆக்கக்கூடாது. எதற்கும் நம்மை அண்ணாந்து பார்க்கும்படி, நமது அங்கீகாரத்துக்காகக் காத்திருக்குமாறு செய்யக்கூடாது. தலைவன் 'நான் பதவியில் இருக்கிறேன்' என்கிற ஆணவம் தலைகாட்ட நடக்கக்கூடாது என்று வெளிப்படையான உண்மைகளைக் கூறுகிறார்.

ஞானி லாட்சு காட்டும் உளவியல் பண்புகள், வாழ்வியல் உண்மைகள் நமக்கும் நம் தலைவர்களுக்கும் குடும்பத்துக்கும் நாட்டுக்கும் வெளிச்சம் காட்டும் விளக்குகளாக இருக்கின்றன.

பின்குறிப்பு: *சுமார் 2600 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட இந்தக் கவிதையில் — இந்தக் கவிதையில் மட்டுமே — மூச்சுக் கட்டுப்பாடு-பயிற்சி பற்றிய குறிப்பு (மூன்றாவது வரியில்) வருகிறது. இதற்கு விளக்கம் எழுதும் அறிஞர் ஆர்.பி. பிளாக்னி, சீனாவில் பல ஆண்டுகள் மதபோதகராகவும் ஆசிரியராகவும் பணியாற்றியவர்.*

'இந்திய யோகத்தில் வரும் பிராணாயாமம் பற்றி இங்குதான் குறிப்பிடப்படுகிறது...' என்று எழுதுகிறார். "எனினும், இது இந்தியாவில் இருந்து வந்த யோகப் பயிற்சி முறை என்று சொல்ல முடியாது. உலகெங்கும் அங்கங்கு ஞானிகள் தோன்றியிருக்கிறார்கள்; இவற்றை அறிந்திருக்கிறார்கள் என்பதே உண்மை" என்றும் குறிப்பிடுகிறார்.

24

மன அமைதிதான் எல்லாம்



கவிதை

வாழ்வு வெளியேறுகிறது; மரணம் நுழைகிறது.
பத்தில் மூன்று பேர் வாழ்வை வாழ்கிறார்கள்.
பத்தில் மூன்று பேர் சாவை நோக்கிச் செல்கிறார்கள்.
பத்தில் மூன்று பேர் செத்துக்கொண்டே வாழ்கிறார்கள்.

ஏன் இப்படி...?

அனுபவிப்பதே வாழ்க்கை என்று அளவு கடந்த
நிலையில் வாழ்கிறார்கள்
பக்குவப்படாதவர்கள்.

நான் கேட்ட அளவில்
எந்த மனிதன் இந்தப் பூமியில் அமைதியுடனும்
உயிரினங்களுடன் ஒத்தும் வாழ்கிறானோ
அவனே வாழத் தெரிந்தவன்.

அவன் காட்டின் குறுக்கே
நடக்கலாம்
காண்டாமிருகமோ புலியோ
அவனைச் சீண்டுவதில்லை.

புலியின் நகங்கள் அவனைக் கீற
உடலில் இடம் இல்லை.

காண்டாமிருகம் தன் கொம்பைப்
பதிக்க அவனில் இடமில்லை.

போர்க்கருவிகள் உள்ளே புகப்
போக்கிடமில்லை.

ஏன் இப்படி...?
அவன் சாவைக் கடந்தவன்;
சாகாத மனிதன்.

விளக்கம்

காலம் என்பது ஒரு நீண்ட படுதா. அதில் பிறப்பு இறப்பு என்ற இடைவெளியில், நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் கால அவகாசத்தில் வாழ்கிறோம்.

வாழத் தெரிந்தவர்கள்; வாழத் தெரியாது, உண்டு உறங்கி, உறவாடி வாழ்க்கையை முடித்துக்கொள்பவர் கள்; பிறவியே துன்பம் என்றெண்ணி வாழ்ந்து முடிப்பவர்கள் என்று மூன்று விதங்களிலும் வாழ்க்கை நடக்கிறது.

வாழத் தெரிந்தவன், வாழ்வின் தத்துவத்தை அறிந்தவன், தத்துவத்தின் உண்மைகளை உணர்ந்தவன். உணர்ந்தவன் தத்துவத்தை வசீகரிக்கிறான்; தத்துவம் அவனாகிறது.

அது என்ன தத்துவம்..?

அமைதியான மனநிலையின் அற்புதங்களை அறிவதுதான் அது.



'ஏன் இப்படி..?' என்று இரண்டு முறை கேள்விகளை எழுப்புகிறார் லாட்சு.

அனுபவிப்பதே வாழ்க்கை அல்ல. 'கசப்புத் தராத இன்பம் என்று எதுவுமே கிடையாது' என்கிறார் ஸ்ரீ அரவிந்த அன்னை.

நாகரிகமே தெரியாத தென் அமெரிக்கப் பழங்குடி மகனைப் போய்க் கேட்டார்கள்: "ஐயா... இவ்வாழ்வில் நீங்கள் தெரிந்து கொண்டது என்ன...?" என்று. அவர்

சொன்னார்: "மலை, நதி, மேகம், வானம், கல், மண், புல் பூண்டு எல்லாவற்றிலும் உயிர் இருக்கிறது. இரண்டாவதாக, நாம் எல்லோரும் சகோதரர்கள்" என்றார்.

இந்தப் பழங்குடிமகன் எங்கே இந்த மாபெரும் உண்மைகளைக் கற்றார்..?

அவர் இயற்கையுடன் வாழ்கிறார். இயற்கையுடன் அனுசரித்து வாழ்கிறார். இயற்கையாகிப் போனார். அதுதான் உண்மை. அந்த மாபெரும் உண்மையைத் தான் "எந்த மனிதன் இந்தப் பூமியில் அமைதியுடனும் உயிரினங்களுடன் அனுசரித்தும் வாழ்கிறானோ, அவன் வாழத் தெரிந்தவன்" என்கிறார் லாட்சு.

அவன் காட்டில் நடக்கிறான்; கரடியோ, காண்டா மிருகமோ அவனைச் சீண்டுவதில்லை; புலி, அவனைப் புசிப்பதில்லை. காட்டில் அவன் புலியைப் பார்ப்ப தில்லை. காட்டில் உலவும் மற்றொரு ஜீவனைப் பார்க் கிறான். தன்னொத்த சக பயணியைப் பார்க்கிறான்.

"இவ்வுலகிலுள்ள எல்லாப் பொருள்களும் ஜீவ ராசிகளும் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டிருக் கின்றன" என்கிறார் விஞ்ஞானி டேவிட் பாம்.

அமெரிக்க டெலிவிஷனில் ஒரு சமயம் ஒரு நிகழ்ச்சியை ஒளிபரப்பினார்கள். பதினோரு வயது நிரம்பாத மெக்ஸிகோ நாட்டுச் சிறுவன், தன் பைக்குள் தினமும் தேள், நட்டுவாக்காலி போன்றவற்றை எடுத்துக் கொண்டு பள்ளிக்கு வருகிறான். அவை அவனைக் கடிப்பதில்லை. அவன் நண்பர்கள் ஆச்சரியப்படு கிறார்கள்.

"இதுபோல, பாம்பை நீ தொட முடியுமா?" என்கிறார் டெலிவிஷன் பேட்டியாளர்.

"ஓ! முடியுமே!" என்கிறான் சிறுவன்.

காட்டுக்குச் செல்கிறார்கள். அங்கே, தொலைவில் ஒரு மலைப்பாம்பு. சிறுவன் அதை உற்று நோக்குகிறான். பிறகு, அதனிடம் சென்று அதைத் தொடுகிறான். தடவிக் கொடுக்கிறான். பாம்பு அவனை ஒன்றும் செய்ய வில்லை.

"ஏன் இப்படி?" என்று கேட்கிறார் ஞானி லாட்சு.

அந்தச் சிறுவன் தன் மனத்தால் உறவு கொண் டாடுகிறான், மற்றொரு சக பயணியுடன். உறவு அப்படித்தான் இருக்கவேண்டும்.

"உள்ளது மலர்ந்தது" என்கிறார் ரமண மகரிஷி. "உள்ளே இருப்பதற்கேற்ப, நம் மனநிலைகளுக்கேற்ப உடல் செயல்படுகிறது; அதுமட்டுமல்ல... நம் எண்ணங் களுக்கும் மனநிலைக்கும் ஏற்ப, நம் சூழ்நிலையே மாறுகிறது" என்கிறார் ஜேம்ஸ் ஆலன்.

இப்படியும் நடக்குமா என்று கேட்பவர்களுக்கு, சந்தேகப்படுபவர்களுக்கு, ஒரு சம்பவம் —

இரண்டு நாட்டுப் போர்ப்படைகள் மோதிக் கொள்ளத் தயாராக இருக்கின்றன. எந்த நேரத்திலும் யாரும் ஈட்டியை விட்டெறியலாம். அம்பைத் தொடுக்க லாம். சவுக்கைச் சொடுக்கி, தேரை முடுக்கிப் போர்க் களத்தை அதிரவைக்கலாம்.

இப்படிப்பட்ட போர்க்களத்திலே திடீரென்று ஓர் அமைதி!

இந்த நாட்டின் படைக்கெல்லாம் தலைமை தாங்கும் அரசன், சட்டென்று தன் குதிரையிலிருந்து குதிக்கிறான். இரண்டு படைகளுக்கும் இடையே உள்ள வெட்ட வெளியில் இறங்கி நடக்கிறான். எதிரியை நோக்கி... தன்னந்தனியனாக!

எதிரிப்படையும் எதிரி மன்னனும் ஒரு கணம் வியந்து, சிலையாய் நிற்கிறார்கள்.

தனியே நடந்துவரும் அரசன்மீது யாரேனும் அம்பை ஏவி, ஒரு கணத்தில் அவனைக் கொன்றிருக்க முடியும். ஆனால், எதுவும் நடக்கவில்லை.

ஒரு மனிதனது மனநிலை, எத்தகைய மாறுதலை எதிரிப்படையிடமும் அந்த அரசனிடமும் ஏற்படுத்துகிறது என்பதைக் கவனியுங்கள். இப்போது வாருங்கள், லாட்சுவின் வரிகளுக்கு...

'ராணுவத்தினரின் போர்க்கருவிகள் உள்ளே புகப் போக்கிடமில்லை' என்ற வரிகளைக் கவனியுங்கள். அவன் அரசன்; அவன் ஞானி; அவன் ராஜரிஷி; அவன் சாகத்துணிந்தவன் என்பதல்ல விஷயம். அவன் சாகாத மனிதன் என்பதுதான் நுட்பமான, உயர் உண்மை.

25

சொர்க்கம் என்பது இங்கேதான்!



கவிதை

லட்சிய தேசம்.
நாடு சிறியதுதான்
மக்கள்தொகை கொஞ்சம்தான்.
உழைப்பைக் குறைக்க உதவும் கருவிகள் அபரிமிதம்.
ஆனால், மக்கள் உபயோகிப்பதில்லை.

மரணம் முக்கியமான நிகழ்ச்சிதான்
எனினும் மக்கள் அதிலிருந்து
விடுபட்டு வெளியேற நினைப்பதில்லை.

அங்கே போக்குவரத்துக்கு
வண்டிகளும் படகுகளும் இருக்கின்றன.
அதில் அவர்கள் சவாரி செய்வதில்லை.

போர்த்தளவாடங்கள்
இருக்கின்றன
அவற்றை வெளியே தெரியும்படி வைப்பதில்லை.

கணக்குகளை, 'கயிற்றில் முடிச்சுப் போட்டு'
கவனத்தில்
வைத்துக் கொள்கிறார்கள்.
ஆனந்தமாக உணவை அனுபவிக்கிறார்கள்.
அழகாக உடுத்துகிறார்கள்.

அமைதியான நாடு,
பழக்க வழக்கங்களோடு உயர்பண்புகளோடு.
அடுத்த தேசம் பார்க்கும் தூரத்தில்தான் —
குரைக்கும் நாயின் சப்தம் கேட்கும் தூரம்.
கோழி கூவுவது காதில் விழும்.

விளக்கம்

எங்கள் ஊர்ப் பக்கம்... சிறிய கிராமம். ஊர்களின் கோடியில், தனித்து, போக்குவரத்துச் சாலை இருக்கிறது. அருகிலே சலசலக்கும் ஓடை. பச்சைப் பசேலென்ற வயல்கள். காலையில் எழுந்ததும் ஏர்க்கலப் பையைத் தூக்கிச் செல்கிறார்கள். உச்சிவெயில் வருமுன்னே மனைவி கஞ்சிக்கலயத்துடன் வருகிறாள். வயல்மேட்டிலே அவர்களது விருந்து — ஊர்க்கதைகளைப் பேசியபடி.

அமைதி, இனிமை. எங்கு பார்த்தாலும் இயற்கை. மக்களும் அதே இயற்கையின் அன்புடன், பண்புகளுடன். அடுத்த கிராமத்துக்குக்கூடப் போகாத மக்கள் இருக்கிறார்கள். இங்கு இல்லாதது அங்கு என்ன இருந்துவிடப்போகிறது!

கள்ளங்கபடில்லாத மக்கள். எல்லா ஊரிலும் ஏற்படுவது போல, காலையும் மாலையும் தினமும் வந்து போகிறது இங்கும்! சாவைக்கூடச் சகஜமாக எடுத்துக் கொள்கிறார்கள். இதைச் சொர்க்கபூமி என்று சொல்லாமல், வேறு எப்படி அழைப்பது..?

நாம் வாழும் இன்றைய உலகம் எப்படி இருக்கிறது? நகரங்களில் நாம் காண்பதென்ன? ஓட்டம், அவசரம், வேகம், நிதானமின்மை, படபடப்பு.



அமைதியான கிராமத்தில் வாழ்பவர்கள் எல்லாம் இயல்பாக வயோதிகம் எய்திச் சாகிறார்கள். நகரத்து மனிதனோ... ரத்த அழுத்தத்தினால், மன நெருக்கடியால், அதனால் ஏற்படும் வயிற்றுப் புண்ணால், மாசுபட்ட காற்றால், அதனால் ஆஸ்துமாவால்... அடப் பாவமே, ஏன் இப்படி இத்தனை இடர்களிடையே நரகத்தில் வாழப் பிரியப்படுகிறான்.? வீட்டிலே நிம்மதியாகச் செத்துப் போகாமல், ஆஸ்பத்திரியில் சென்று செத்துப்போக ஏன் ஆசைப்படுகிறான்..? கேள்விகள்... கேள்விகள்..

ஞானி லாட்சு கடைசியாக் அந்திமக் காலத்தில் நகரைவிட்டு வெளியேறுகிறார். அந்தக் கிராமத்தின் தனிமை, அமைதி, அழகு... இதை நோக்கித்தான் சென்றிருக்க வேண்டும். ஊரில் பார்க்கிறார். உழைப்

யைக் குறைக்கும் உபகரணங்கள் அங்கே ஏராளம்; எனினும் மக்கள் உடலால் உழைத்து, தசையும் உடம்பும் வியர்வையில் பளபளப்பதையே விரும்புகிறார்கள்.

வண்டிகளும் படகுகளும் இருக்கின்றன. அடுத்த ஊருக்குப் போக வேண்டிய அவசியமென்ன..? எல்லாம் இங்கேயே கிடைக்கிறது. அந்தக் காலத்தில் கணக்கு களை, கயிற்றில் முடிச்சுப் போடுவதன் மூலம் கணக்கு வைத்துக்கொள்வார்களாம் (எழுத்தும் சுவடியும் வராத காலம்). அப்படியே வாழ்க்கை செல்கிறது. இவை யெல்லாம் புற விஷயங்கள்; வெளிவிஷயங்கள்.

ஆனால், எது முக்கியம்..?

மனநிறைவு, மகிழ்ச்சி, ஆனந்தம், அமைதி... இதற் காகத்தான் வாழ்கிறோம். ஆகவே, அவர்கள் சாப்பிடு வதை அனுபவித்துச் சாப்பிடுகிறார்கள்; அவசரமாக அல்ல! அழகாக உடுத்துகிறார்கள். அழகாக உடுத்தி னாலே, ஓர் உற்சாகம் ஏற்படும். அப்படிப்பட்ட மக்க ளுக்குப் பக்கத்து நாட்டுக்குப் போய்ப் பார்க்க வேண் டும் என்ற எண்ணம்கூட இருப்பதில்லை... அடுத்த ஊரிலிருந்து நாய் குரைக்கும் சப்தம்கூட காதில் விழுகிறதாம். அவ்வளவு அருகில் இருந்தும் அங்கே போகும் எண்ணம் எழுவதில்லை. அவ்வளவு திருப்தி!

இதுதான் சொர்க்கபூமி! இடம் — எல்லோரும் வாழும் அதே மண்தான். அதே வண்டிமாடுகள்தான். பயிர், பச்சை, அறுவடைதான். வீடு, உடை, சுத்தி, உளி, கத்தி என்று எங்கும் இருப்பவைதான். அதை அவர்கள் கையாளும் விதம் ஒரு பெரிய 'சிம்பொனி' - இசைக் கச்சேரி போல் இசைவாக நடைபெறுகிறது. ஆனால், அமைதியாக... ஆகா..!

இதுதான் சொர்க்கபூமியோ?

26



ஆசையின் பின்னால் ஓட்டமா!

கவிதை

வாழ்வில் எது முக்கியம்?
பெயரா, புகழா, மனநிறைவா?
எப்போது வாழ்வு அர்த்தமுள்ளதாகும்?
மனிதாபிமானத்துடன் வாழ்வதிலா?
பணம் சேர்ப்பதிலா?
வாழ்வில் துன்பம் தருவது எது?
லாபமா, நஷ்டமா?
அதிகமான ஆசை அநாவசியச் செலவுகளில் முடிகிறது.
அளவுக்கு மீறிச் சேர்ப்பது அழிவில் கொண்டு விடுகிறது.
போதுமென்ற மனம் பெற்றிருக்கும்போது
பழிச்சொல் நம்மைப் பாதிப்பதில்லை.
எடுத்த காரியத்தை எப்போது நிறுத்தவேண்டும் என்ற
நிதானம் இருக்கும்போது
ஆபத்துக்கள் அணுகுவதில்லை.
இவனே: வாழத்தெரிந்த மனிதன்
காலத்தை வென்றவன்!

விளக்கம்

ஒரு சமயம் முல்லா நசிருத்தீன், 'அடுத்த தெருவில் விருந்து நடைபெறுகிறது' என்ற வதந்தியைக் கிளப்பி


விட்டார். கேட்டவர்கள் எல்லாம் அங்கே ஓடத் துவங்கி னார்கள். சிறிதுநேரம் கழித்து, எல்லோரும் ஓடுவதைப் பார்த்த முல்லா 'ஏதோ விஷயமிருக்கிறது!' என்று தானும் ஓட ஆரம்பித்தார்.

அன்றிலிருந்து இன்றுவரை கதை இதுதான். எங்கே ஓடுகிறோம், ஏன் ஓடுகிறோம் என்பதைப் பற்றி நினைத்துப் பார்க்காமலேயே மனிதன் ஓடுகிறான்; அவன் வாழ்நாள் முழுதும் ஓடிக்கொண்டிருக்கிறான். பெயருக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டு ஓடுகிறார்கள். பதவிக்கும் பணத்துக்கும் ஆசைப்பட்டு எதையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள்.

வாழ்வில் அமைதி, மகிழ்ச்சி, மனநிறைவு — இது தான் முக்கியம். ஆனால், இதைப் பணயம் வைத்து விட்டு மக்கள் ஓடுகிறார்கள். வாழ்வின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி ஆனதும் மனிதனுக்கு மனத் தேவைகள் ஆரம்பமாகின்றன. தன்னை உலகம் கண்டு கொள்ள வேண்டும்; பாராட்ட வேண்டும் என்று நினைக்கிறார்கள். பணம், பதவி, புகழ் என்று வரிசை யாகச் செல்லும் ஆசைப்படிகளில் புகழ்தான் உச்சம்.

பணம் படைத்த ஒரு தொழில் அதிபரிடமோ அல்லது பதவியில் தங்கிவிட்ட ஒரு தலைவனிடமோ இத்தகைய பலவீனத்தைக் கண்டுகொண்ட ஜால்ரா கும்பல் 'அவன் அவதாரப் பிறவி' என்று சொல்லி அவனைக் கீழே தள்ளுவதற்காக உயரத்தில் சிலை எழுப்பி விடுகிறது.

பணம் இன்னொருபக்கம். பணத்தின் வலிமை யினால் பணத்தின் அதிகாரத்தினால் வீட்டை வாங்கலாம்.. மனிதர்களை வாங்கலாம்.. அதிகாரிகளை, அமைச்சர்களை வாங்கலாம்.. என்றெல்லாம் திட்டமிடு



பவர்கள் முடிவில் நீதிமன்றத்தின்முன் நிறுத்தப்படு கிறார்கள்; சிறைவாசம் செய்கின்றனர்.

"பணம், பணம் என்று பணத்தைச் சேர்ப்பவன், திருடனை உருவாக்குகிறான்" என்கிறார் ஞானி லாட்சு.

"வாழ்வில் எது துன்பம்? லாபமா, நஷ்டமா?" என்று ஒரு சூட்சுமமான கேள்வியை எழுப்புகிறார்.

"நஷ்டம் துன்பம் தரும்; லாபம்தான் இன்பம்" என்றுதான் எல்லோரும் பதில் சொல்வோம்.

அநியாய விலைக்கு விற்று லாபம் சம்பாதிப்பவன் — ஒரு பொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதை வைத்து மக்களை வருத்தியோ ஏமாற்றியோ பணம் சம்பாதிப் பவன் — நியாயத்தையும் நேர்மையையும் மன நிம்மதி யையும் பறிகொடுக்கிறான். அப்படிப் பெறும் லாபம் அவனுடன் ஒட்டுவதில்லை. நாளை எங்கோ அடி விழுகிறது. அப்படி அடி விழும்போது 'இது எதனால்?' என்று அவனால் புரிந்துகொள்ள முடிவதில்லை. ஏனெ னில், மேலே விழுந்த அடியின் காரணம் — நியாயத்தின் காரணம் — மறைந்து கிடக்கிறது. வாழ்வின் பல நியாயங்களும் மறைந்துதான் கிடக்கின்றன.

'எதையும் வீணாக்காதீர்கள்; யாரையும் வீணாக் காதீர்கள்' என்பதுதான் ஞானி லாட்சுவின் வாழ்வியல் கொள்கை. எனவேதான் அதிக ஆசைப்பட்டு அநாவசிய மான பொருட்களை வாங்காதீர்கள் என்கிறார்.

மனித வாழ்வில் தேவை என்ற அடிப்படை ஒன்று இருக்கிறது. ஆசை என்பது அதன் எதிர்ப்பதம். தேவை யையும் ஆசையையும் இணைத்து ஒரு கோடு போடுங்கள். தேவையின் பக்கத்திலோ, ஆசையின் பக்கத்திலோ நாம் ஒரு குறுக்குக்கோடு போட்டு நம் ஆசைக்கு ஓர் எல்லை கட்ட வேண்டும். அப்படிப் போடாவிட்டால் நாம் ஆசையின் பின்னால் ஆயுள் பூராவும் ஓடிக்கொண்டிருப்போம்.

'வாங்கு.. அனுபவி செலவழி' என்று தேவைக்கு மேற்பட்ட தூண்டுதல்களை இன்று விளம்பரங்கள் ஏற்படுத்துகின்றன.

இப்படி நம்மைத் தூண்டுபவனும் தவறு செய் கிறான். தூண்டடப்படுவனும் தவறு செய்கிறான்.

தூண்டுபவன் பேராசைக்காரன். ஏமாற்றுக்காரன். தூண்டடப்பட்டுப் பொருளை வீணாக்குபவன் தன் சந்ததிகளின் எதிர்காலத்தில் கைவைக்கிறான்.

போதும் என்ற மனம் தேவையுடன் நிறுத்திக் கொள்கிறது. சுயகட்டுப்பாடு கொண்ட மனம் அது. பிரபஞ்ச நியதியை உணர்ந்த மனிதன் அவன். எதற்காக மனிதன் மாளிகை கட்டுகிறான்? குடியிருக்கவா? பிறர் மெச்சவா? பிறர் தன்னை உயர்வாக எண்ணவேண்டும் என்பதற்கா? மனிதன் தனக்காக வாழ்வதை மறந்து விட்டான்; பிறர் எதிர்பார்ப்புக்காக வாழத் துவங்கி விட்டான்.

மனிதாபிமானம் என்பது, மனிதனுக்கு மனிதன் காட்டும் பரஸ்பர அன்பானது, மரியாதையைக் கடந்து எல்லா ஜீவராசிகளிடமும் இயற்கையின் எல்லா அம்சங்களிடமும் காட்டுவதாக இருக்கவேண்டும் என்கிறார் ஞானி லாட்சு.

வாழ்வில் நிதானமும் சமநிலையும் தேவை என்கிறார் ஞானி.. ஒரு கிண்ணத்தில் தேநீர் ஊற்றும் போது அது நிரம்பி வழிவதற்கு முன் நிறுத்துகிறோமே அதுபோல. வாழ்வின் ஒவ்வொரு செயலிலும் எப்போது நிறுத்த வேண்டும் என்ற நிதானம், கட்டுப்பாடு, அழகின் உணர்வு இருக்கவேண்டும். இல்லாவிடில் ஆபத்துகள் அணுகும் என்று எச்சரிக்கிறார்.

பேச்சாகட்டும், உணவாகட்டும், செடிக்குத் தண்ணீர் விடுவது ஆகட்டும், போராகட்டும், அமைச்சரவை விஸ்தரிப்பு ஆகட்டும் — எங்கே நிறுத்த வேண்டும் என்ற சுயகட்டுப்பாடு மிக அவசியம். ஏனெனில், இந்தப் பிரபஞ்சம் ஓர் எல்லையில், ஒரு நிதானத்தில், ஓர் ஒழுங்கில்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது — நுட்பமான உண்மைகளைப் போதித்த வண்ணம்.

27

மூலத்துடன் தொடர்பு...



கவிதை

ஆதிகாலத்திலிருந்து எல்லாம் மூலமான ஒன்றுடன்
இணைந்துதான்
இயங்குகின்றன.

சொர்க்கம் மூலத்துடன் இணைந்தது; தெளிவு பெற்றது.

பூமி மூலத்துடன் தொடர்புகொண்டது நிலையாக
இயங்கியது.

மனித ஜீவன் மூலத்துடன் உறவுகொண்டது
படைப்பாற்றலைப் பெற்றது.

பள்ளத்தாக்குகள் மூலத்திடம் முறையிட்டன நீர் நிரம்பி
வழிந்தது.

தலைவர்கள் மூலத்தை உணர்ந்தார்கள் ராஜரிஷிகள்
ஆனார்கள்.

எல்லாமே – மூலம் என்ற முழுமை தந்த விளைவுதான்.
தெளிவைப் பெறாத சொர்க்கம் சிதறி இருக்கும்.
நிலைபேறற்ற பூமி, பூகம்பத்தால் ஆடிப்போயிருக்கும்.
தெய்வீகப் படைப்பாற்றல் இல்லாத ஜீவன் மரித்திருக்கும்.
நிரம்பி நிற்காத பள்ளத்தாக்குகள் காய்ந்து போயிருக்கும்.
ராஜரிஷியாக இல்லாத தலைவர்கள் சரிந்திருப்பார்கள்.

உயரத்தில் வைக்கப்பட்டவர்கள் எளிமையானவர்களால்
ஏற்றப்பட்டவர்கள்தான்.

அடித்தளம்தான் அஸ்திவாரம்.
எனவேதான், மேலிடம் 'தனிமை நிறைந்தது' ஆதரவற்ற
இடம்' என்று சொல்கிறார்கள்.

அடிமட்டத்து ஆதரவின் அவசியத்தைத்தானே இது
காட்டுகிறது!
வண்டியின் பல்வேறு பாகங்களைக் குவித்த தொகுப்பு
வண்டியாகி விடாது.
மரகதமணியின் ஒளியாகத் தலைவர்கள் பிரகாசிக்கத்
தேவையில்லை.
மரகதமும் அடிமட்டத்துக் கற்கள்தான் என்று
அறியட்டும்; போதும்.

விளக்கம்

"மூலமான ஒன்று இருந்தது. அதிலிருந்துதான் எல்லாமே வந்தது. வந்த எல்லாமே மூலத்துடன் தொடர்பு கொண்டிருக்கிறது..." என்கிற பேருண்மையை அழகாக வரிசைப் படுத்துகிறார் ஞானி லாட்சு.

ஒரு மாபெரும் சக்தி மூலமாக இருக்கிறது — எங்கும் பரந்து, எல்லாவற்றிலும் நிறைந்து. அதை உணர்ந்த ஒரு சிலரே அதனுடன் தொடர்பு கொள் கிறார்கள். இதனால் எல்லாமே நிறைவுபெற்று வாழ் கிறார்கள்.

எல்லாவற்றிலுமே இறைவனைக் காணும் குணம் இருப்பதை மிக அழகாக வரிசைப்படுத்துகிறார் லாட்சு.

பூமி மூலத்துடன் தொடர்பு கொண்டிருப்பதால் தானே ஈர்ப்பு சக்தியால் இயங்கிக்கொண்டிருக்கிறது.



அதேபோல, தலைவர்கள் அந்த மூலத்துடன், தெய்வீகத் துடன், அந்த மாபெரும் சக்தி நிலையுடன் தொடர்பு கொண்டால் ராஜரிஷிகள் ஆவார்கள் என்கிறார்.

"மூலத்துடன் தொடர்புகொண்டால் மனிதன் உருமாற்றம் பெறுகிறான்..." என்கிறர்ர் அரவிந்த அன்னை. "அன்பு, ஞானம், எளிமை, ஒத்திசைவு என்று மனிதனின் அடிப்படை குணங்களே மாறுகின்றன" என்கிறார் அவர். இப்படி அடிப்படைக் குணங்கள் மாறியபோது, ஒரு புதுப் பொலிவும் அழகும், ஒரு புத்துணர்வும் இனிமையும் நட்பும் அவர்களிடம் வெளிப்படுகின்றன என்பதைக் கண்டுபிடித்திருக்கிறார் கள் மனவியல் அறிஞர்கள்.

இந்த உலகப் பேருண்மையை உணர்ந்து அதைப் பின்பற்றி ஆட்சிபுரிவதற்குப் பதிலாக, வெறும் அரசியல் வாதியாக, சாணக்கியர்களாக, சர்வாதிகாரியாக, படை பலத்தை உபயோகித்தால் போதும் என்றுதான் தலைவர்கள் நினைக்கிறார்கள்.

ராஜரிஷியாக ஆக முடியாதவர்கள் சங்கடப்படு கிறார்கள்; அவமானப்படுகிறார்கள்; சிறை செல்கிறார் கள்; தண்டனை பெறுகிறார்கள்.

"உன்னை உயரே ஏற்றியவர்கள் எளிய அடி மட்டத்து மக்களே" என்பதை ஞானி கூறும்போது, நமக்கு நினைவுக்கு வருவது வியட்நாம் யுத்தம்தான். 'வியட்நாமில் என்ன நடக்கிறது? யார் போரிடு கிறார்கள்? யார் தலைமை தாங்குகிறார்கள்?' என்பதை அமெரிக்க ஜனாதிபதிகள் அறிந்துகொள்ளவில்லை. போர்த் தளபதிகளும், ராணுவக் காரியதரிசியும் சொன்னதை நம்பினார்கள். அதுமட்டுமல்ல... அமெ ரிக்கப் பத்திரிகைகளும் மக்களும் மாணவர்களும் இது பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதையும் அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. இந்த இரண்டு இடத்திலும் அடிமட்டத்து மக்களின் தொடர்பு விட்டுப் போய் விட்டது. விளைவு..? சரித்திரம் காணாத தோல்வி; அவப்பெயர்.

தலைவன் மரகதமணியை அணிந்திருக்கலாம். ஆனால், ஜொலிப்பில் மயங்கிவிடக்கூடாது.

எல்லாமே மூலத்துடன் தொடர்பு கொண்டுதான் இயங்குகின்றன என்ற உண்மை புரியும்போது, ஏன் தலைவர்கள் ஆன்மீக அடிப்படையைப் புறக்கணிக் கிறார்கள்?

ஒன்று — அறியாமை.

இரண்டாவது — தங்கள் கைக்குள் உலகமே இருக்கிறது என்கிற ஆணவம்.

"மனித ஜீவன் மூலத்துடன் தொடர்பு கொள்ளும் போது படைப்பாற்றலைப் பெறுகிறது..." என்கிறார் லாட்சு. "ஒரு பொருளை உற்று உற்றுப் பார்க்கும்போது, அதைப் பற்றி சதா சிந்திக்கும்போது, அது பூரணமாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும்; அது நம்முடன் உறவாடும்; உதவும்" என்பதுதான் அணுவியல் கண்ட உண்மை; உபநிடதம் சொன்ன உண்மை.

படைப்பாற்றல் எனும் புதியவை காணும் மனோ பாவமும் செயலும்தான் ஒரு நாட்டின் வளர்ச்சியை இருபத்தோராவது நூற்றாண்டில் நிர்ணயிக்கப்போகிறது என்று 'வருங்காலக் கணிப்பாளர்கள்' கூறுகிறார்கள். அதற்கு விஞ்ஞானிகளுக்கு மட்டுமல்ல, ஆட்சியாளருக்கும் அரசியல்வாதிக்கும்கூடத் தேவையானது — மூலத்துடன் தொடர்பு; ஆன்மீக அடிப்படை.



28

மனத்தைத் திறக்கும் மார்க்கம்

கவிதை

நல்லவர்களுக்கு நான் நல்லவன்
அல்லாதவர்களுக்கும் நான் நல்லவனே
ஏனெனில் நல்லெண்ணம் சக்தி மிகுந்தது.
நியாயமாக நடப்பவர்களிடம் நியாயமாக நடக்கிறேன்
நியாயமற்று நடப்பவர்களிடமும் நியாயமுடன்தான்
ஏனெனில் நம்பிச் செயல்படுவது சக்தி மிகுந்தது.
வளர்ந்தவர்கள், திறந்த மனம் கொண்டவர்கள்,
மக்களின் தேவைகளோடு மனங்களோடு ஒன்றி
வளர்ந்து உருவானவர்கள் உலகைக் கவர்கிறார்கள்.

அடிப்படை சக்தியுடன் ஒன்றி

அவர்கள் தங்களை அடிமட்டத்திலிருந்து
அந்நியப்படுத்திக்கொள்வதில்லை.

உலக மக்கள் கண்கள் மூலம் காதுகள் மூலம்
அறிந்து கொள்கிறார்கள்.

பெரியவர்களோ அத்துடன் திறந்த மனத்தைக்கொண்டு
பார்க்கிறார்கள்.

குழந்தைகள்போல.



விளக்கம்

மனிதன் நாளும் தன் அனுபவங்களிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு வளர்கிறான். முன்னைவிட மேம்பட்டவனாகத் தன்னை உருவாக்கிக் கொள்கிறான்; அறிவைப் பெறுகிறான். அறிவின் உச்சம்தான் தன்னை

அறியும் அறிவு. தான் ஓர் ஆத்மா, மரணமில்லாத ஜீவன், இந்தப் பிரபஞ்சத்தை இயக்கும் மாபெரும் சக்தியிலிருந்து தோன்றிய ஒரு சிறுபகுதி என்ற உணர்வு; உறவு.

வளர்ச்சிக்கு என்ன வேண்டும்? திறந்த மனம் வேண்டும். ஒன்றைத் தெரிந்துகொள்வதற்கு முன்பே ஒரு தீர்மானமான அபிப்பிராயம் கொண்டிருப்போமானால், மனக்கதவை முன்பே சாத்திவிடுகிறோம். திறந்த மனத்துடன், 'அதிலும் ஏதாவது உண்மை இருக்கக் கூடும்' என்ற எண்ணத்துடன், நல்லவற்றை, புதியனவற்றை ஏற்றுக்கொள்ளும்போதுதான் நாம் வளர்கிறோம்.

குழந்தை மனம் எதையும் நம்புகிறது. அதுபோல, வளர்ந்தவர்கள் எல்லாக் கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் வாங்கிக் கொள்கிறார்கள். திறந்த மனம் தான் வளர்ச்சியின் அறிகுறி.

தத்துவஞானி ஜேம்ஸ் ஆலன் சொல்கிறார்: 'வாழ்வின் முக்கியமான உண்மைகள் இரண்டு — திறந்த மனமும் தவறைத் திருத்திக்கொள்ளும் மனப்பக்குவமும் தான்.' 'மனப்பக்குவம்' என்ற வார்த்தையைக் கவனியுங்கள். தவறை ஒப்புக்கொள்ளத் துணிவு வேண்டும்; பெருந்தன்மை வேண்டும். அது ஒரு வளர்ந்த பண்பு; அவர்கள் பக்குவப்பட்ட மனிதர்கள்.

மற்றவர்கள் கண்களால் பார்க்கிறார்கள். வளர்ந்தவர்களோ மனத்தால் பார்க்கிறார்களாம்! ஒவ்வொரு மனிதனிடமும் ஓர் ஆத்மா இருக்கிறது என்பதை, வாழ்க்கைப் படிப்பினைப் பெற வந்த ஆத்மாவாக நாம் மனிதனைப் பார்ப்பதைக் கற்றுக் கொள்ளும்போது உலகத்திலுள்ள அனைத்து மீதும் நமக்கு அன்பு ஏற்படும். அவர்கள் குறைகளைக் காணும்போது பரிவு ஏற்படும்.

இதைத்தான், இந்தப் பரிவைத்தான் அடுத்த வரிகளில் சொல்கிறார் லாட்சு. 'நல்லவனுக்கு நான் நல்லவன், பொல்லாதவனுக்குப் பொல்லாதவன்' என்று தான் பெருமையுடன் பலர் பேசுவதைக் கேட்கிறோம்.

எங்காவது பகையைப் பகையால் வெல்ல முடியுமா? தீயைத் தீயால் வெல்ல முடியுமா? தீப்பற்றி எரியும்போது மேலும் தணலைக் கொட்டினோமானால் தீ குறையுமா? தீயைத் தண்ணீரால்தான் அணைக்க முடியும். அதைப்போல பகையை அன்பினால்தான் வெல்ல முடியும். அதுதான் நிரந்தரம்.

பகையை அன்பினால் வெல்ல முயலாமல் இருந் தோமானால் என்ன நேருகிறது நமக்கு? நமது மனத்தில் பகைவனைப் பற்றி வெறுப்பு, கோபம், ஏமாற்றப்பட்ட உணர்வு, அவமானப்பட்ட நினைவு, பழிவாங்கும் எண்ணம், அவனுக்குத் தீங்கு நேர வேண்டும் என்று சாபமிடும் உள்ளம் – இவை எல்லாம் நம் மனத்தில் குடிகொள்கின்றன.

பகைவனை நினைக்கும் ஒவ்வொரு முறையும், நம் உடல் முறுக்கேறுகிறது; உள்ளம் ஒருமுனைப்பட்டு ஒரு காரியத்தில் ஈடுபட மறுக்கிறது.

இந்தப் பகை எண்ணம் நம்மையே அழிக்க முயல் கிறது. பகை என்று போனால், நாம் ஒன்று செய்ய, அவன் பதிலுக்கு ஒன்று செய்ய... அது தலைமுறை தலைமுறையாகத் தொடர்கிறது.

அதைத்தான் சொல்கிறார் ஞானி லாட்சு: 'நல்லவனுக்கும் நல்லவன். பொல்லாதவனுக்கும் நான் நல்லவன் என்று. தேவை: மனமாற்றம். நம் எண்ணங் களில் மாற்றம். அதே போல் எதிரியின் உள்ளத்திலும் நாம் மாற்றத்தை உண்டுபண்ண முடியும். அப்படி ஒன்றுபட்ட இசைவுடன் வாழ்வதுதான் இந்தப் பிரபஞ்சம் காட்டும் உண்மை.

இதைத்தான் 'பகைவனுக்கருள்வாய்' என்று கடவுளை நோக்கிப் பாடத் துவங்கும் பாரதியார், 'நன்னெஞ்சே!' என்று முடிவில் தன் நெஞ்சைப் பார்த்துச் சொல்கிறார். மாற்றம் நம் நெஞ்சில், நெஞ்சின் ஆழத்தில் துவங்க வேண்டும்.

இதை மிக அழகாக வள்ளுவரும் கூறுகிறார் — "கெடுதல் செய்பவர்களுக்கும் நாம் நல்லது செய்வது நல்லது; அதன்பின் அவர்களே தாங்கள் செய்த தீயசெயலை எண்ணி வெட்கப்படுவார்கள்" என்று.

இங்கே இன்னும் ஒருபடி மேலே சென்று, பொல்லாதவருக்கும் நல்லவனாக இருப்பதில் நன்மை என்னவென்றால், நல்லெண்ணம் வலிமை மிகுந்தது என்பதுதான். நல்லெண்ணம் சக்தி மிகுந்தது. இது எப்படி என்று கேள்வி எழலாம்.

'உலகில் அதர்மம் தலைதூக்கும் போது நான் உடல் எடுக்கிறேன். உண்மையை நிலைநிறுத்த அவதரிக்கிறேன்' என்கிறது பகவத்கீதை.

நவகாளி படுகொலையின்போது உண்ணாவிரதமிருக்கும் காந்தி, ஈனஸ்வரத்தில் சொல்கிறார்... 'உண்மை வெல்லும் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது' என்று. உண்மை, நல்லெண்ணம், நேர்மை, சமத்துவம் இவை எல்லாம் வேறுவேறு வார்த்தைகள். எல்லாம் உலகம் ஓர் உயர்நெறியில் இயங்குவதைத் தான் புத்தரிலிருந்து காந்தி வரை கண்டுபிடித்தார்கள்; போதித்தார்கள். வாழ்க்கை என்பது தேவனாகும் முயற்சி. அதை நோக்கித்தான் பரிணாம வளர்ச்சி சென்று கொண்டிருக்கிறது. (Evolution) தீய எண்ணங்களை நாம் அனுப்பும் நல்லெண்ணம் வலியிழக்கச் செய்து விடுகிறது. வாழ்வின் தாத்பரியமே நல்லெண்ணம் என்ற ஒரு சொல்லில் அடங்கி இருக்கிறது..

29

சின்னச் சின்ன துவக்கம்!



கவிதை

அசையாமல் அமைதியாக இருப்பதை எளிதில் பிடிக்கலாம்
துவங்கப்படாத நிலையில் திட்டமிடுதல் சுலபம்.
ஈயத்தகடுகளை எளிதாக உருக்கலாம்.
பொடியான பொருளைக் கரைப்பது சுலபம்.

பெரிதாக வெடிக்குமுன் காரியங்களைக் கவனி.
குழப்பம் வருமுன் ஒழுங்கு செய்துவிடு.

கையால் அணைக்கமுடியாத மரம்
சிறிய குருத்தாகத்தான் வளர்கிறது.

ஒன்பது மாடிக் கட்டடம்
கைப்பிடி மண்ணிலிருந்துதான் உருவாகிறது.

ஆயிரம் மைல் பயணம்
உங்கள் பாதங்களிலிருந்துதான் துவங்குகிறது.

ஆக்கிரமிக்கும் காரியம் கெட்டுவிடுகிறது.
எட்டிப்பிடிக்கும் காரியம் நம்மைவிட்டு நழுவுகிறது.
வளர்ந்தவர்கள் செயல்படுவதில்லை.
எதையும் கெடுப்பதில்லை.

ஆனால், பலர் வெற்றி கைக்கு வரும் நிலையில்
காரியத்தைக் கோட்டை விடுகிறார்கள்.

வளர்ந்தவர்களின் ஆசை,
ஆசைகளற்று இருப்பதுதான்
கிடைத்தற்கரிய பொருளில் நாட்டம் வைப்பதில்லை
படிக்காமலே கற்றுக்கொள்கிறார்கள்.
எதிலும் அடிப்படையைத்
தேடுகிறார்கள்.
இயல்பான ஓட்டத்துக்கு உதவுகிறார்கள்
எதிலும் குறுக்கிடாமல்.

விளக்கம்

ஆழ்ந்து சிந்திக்கும்போதுதான், நடக்கும் சம்பவத்தின் காரணத்தை அறியும்போதுதான் வாழ்வின் நுட்பமான உண்மைகள் விளங்கும். பலர் மேலோட்டமாக வாழ்க்கையை நடத்துகின்றனர். வாழ்வை இயக்கும் நுட்பமான விஷயங்கள்தான் மீண்டும்-மீண்டும் தொழில் நிர்வாகத்திலும் வருகின்றன. அறிந்தவர்கள் பிழைக்கிறார்கள். அறியாதவர்கள் திரும்பத் திரும்பத் தவறு செய்கிறார்கள்.

காரியங்கள் தாமாக நிகழ்வதில்லை. முன் கூட்டியே நாம் திட்டமிடவேண்டும். முதலில் மனக் கண்ணால் பார்க்க வேண்டும். பின், தாளில் எழுத வேண்டும். அப்போதுதான் செய்ய வேண்டிய காரியங்கள் ஒவ்வொன்றும் தென்படும்... தெளிவுபடும்.

நாட்டின் பல பிரச்னைகளும் அப்படித்தான். மக்களிடம் அதிருப்தி மேவுகிறது. கூட்டம் போடுகிறார்கள் என்றால், உடனடியாகக் காரணத்தை அறிய முற்பட்டுச் செயல்படவேண்டும். இல்லாவிட்டால்,



நாட்டில் பொருள்சேதமும், பஸ் சேதமும், உயிர்ச் சேதமும்தான் ஏற்படும்.

'அண்டை பகை நாடுகள் சிறியவை, அவை நம்மை ஒன்றும் செய்ய முடியாது' என்று அலட்சியம் செய்வது ஆபத்தில் முடியும்.

திருவள்ளுவர் சொல்கிறார், 'இளைதாக முள்மரம் கொல்க' என்று. 'முள்மரத்தை வளர விடாதே, சின்னதாக இருக்கும்போதே வெட்டிவிடு! ஏன் அப்படிச் சொல்கிறார்? கருவேல மரங்களை வளர விடுவோமானால், அதன் முள்கிளைகள் கீழே விழுந்து, பின்னால் நாம் அதை நெருங்கக்கூட முடியாது!

நாட்டில் பொருளாதார மந்தம் ஏற்படுகிறது என்றால், அதைத் தொழிலதிபர் முன்கூட்டியே நன்கு உணர்கிறார். செலவினங்களை வெகுவேகமாகக் குறைக்கிறார். அதே சமயம், கஷ்ட காலங்களைக் கடக்க முன்பே ஓரளவு சேமித்து வைக்கிறார்.

மனிதனுக்குத் தேவையான இந்த முக்கிய குணத்தைத்தான் ஆங்கிலத்தில் — Initiative — 'துவங்குதல்', 'தானாக இறங்குதல்,' 'முன்னேற்பாடு செய்தல்' — என்பார்கள். பொதுவாக, இந்தக் குறை இந்தியர்களிடம் காணப்படுவதாகச் சமுதாய இயல் அறிஞர்கள் கூறுகிறார்கள்.

ஏரிக்கு அருகில் வாழும் நாம் நீந்தக் கற்றுக் கொண்டிருந்தால்தான் பிழைக்கமுடியும். நம் வீட்டுக் குழந்தைகளைக் காப்பாற்ற முடியும். 'இவனை ஏரியில் பிடித்துத் தள்ளினால்தான் நீந்தக் கற்றுக்கொள்வான்' என்று தானாகத் துணிந்து இறங்கும் குணமில்லாதவர்களை ஏகடியம் செய்கிறது உலகம்!

கையால் பிடிக்கமுடியாத மரம் சிறிய குருத்தாகத்தான் வளர்கிறது. வீட்டுக்கு அருகில் வளர்த்தோமானால், அது நம் வீட்டு அஸ்திவாரத்தையே ஆட்டங்

கண்டுவிடச் செய்துவிடும். 'ஆயிரம் மைல் பயணம் முதல் காலடி எடுத்துவைப்பதில்தான் துவங்குகிறது. எனவே... இறங்கு, நட துவங்கு. அது சுலபம் என்பதைக் காண்பாய்' என்கிறார் ஞானி லாட்சு. நாம்தான் இறங்க வேண்டும். நமக்காகப் பிறர் இறங்க முடியாது.

லாட்சு மற்றொரு நுணுக்கமான, நாம் அன்றாடம் அனுபவிக்கும் உண்மையைத் தெளிவுபடுத்துகிறார். நம்மில் பலரும் உறவை முன்வைத்து உரிமை கொண்டாடுகிறோம். இவர் என் பணியாள், இவள் என் மனைவி, இவன் என் மகன் என்று உரிமையுடன் பிறர் மீது ஆதிக்கம் செலுத்த முற்படுகிறோம். ஆணையிடுகிறோம். 'அப்போது காரியங்கள் கெடுகின்றன, கவனியுங்கள்!' என்கிறார் லாட்சு. "ஆக்கிரமிக்கும் காரியம் கெட்டு விடுகிறது" என்கிறார் ஞானி.

'மனிதர்களுக்கிடையே ஒருவருக்கொருவர் மன அளவில் செல்லும் தூரத்துக்கு ஓர் எல்லை இருக்கிறது. அதற்குமேல் செல்ல முடியாது, செல்லக்கூடாது' என்று எச்சரிக்கிறார்கள் மனவியல் அறிஞர்கள்.

எந்தக் காரியம் செய்தாலும் — கவனம், கவனம்; விழிப்பு உணர்வு, விழிப்பு உணர்வு என்று — நாம் கண்காணித்துக் கொண்டே இருக்க வேண்டும். இதை எவ்வளவு அழகாகச் சொல்கிறார் லாட்சு! 'வெற்றி கைக்குள் வந்துவிட்டது என்று எண்ணும்போது கூட, அது உன்னைவிட்டுப் போய்விடும் — நீ கண்காணிக்காவிட்டால்!' என்கிறார். நுட்பமான விஷயம்! ஒரு காரியத்தை ஆரம்பித்துவிட்டு, எல்லாம் கீழே இருப்பவர்கள் பார்த்துக்கொள்வார்கள் என்று ஒரு பொழுதும் ஒரு நாளும் இருக்க முடியாது... இருக்கக்கூடாது.

எதையும் கண்காணிக்க வேண்டும் என்று சொல்லும் ஞானி லாட்சு, அடுத்த வாக்கியத்திலே 'சில சமயம் தானாக எல்லாம் நடைபெறும், நீ குறுக்கிடாதே' என்கிறார்.

இது பெரிய முரண்பாடாகத் தெரிகிறது. எப்போது தானாக நடக்கும்? எப்போது நாம் கண்காணித்துக் குறுக்கிட வேண்டும்? 'திருத்தக்கூடியவற்றைத் திருத்துகிற துணிவையும், திருத்த முடியாதவற்றை ஏற்றுக் கொள்கிற மனப்பக்குவத்தையும், திருத்தக்கூடியது எது — திருத்த முடியாதது எது என்கிற வித்தியாசத்தைப் புரிந்துகொள்கிற விவேகத்தையும் பெறு' என்று சொல்கிறது அமெரிக்கப் பழமொழி ஒன்று.

'சில சமயம் காரியங்கள் தானாகச் செயல்படும் குறுக்கிடாதே' என்பதை ஞானி லாட்சு அடிக்கடிக் கூறுகிறார். அதைச் **செயலற்ற செயல்** என்கிறார்.

உலகில் எல்லாமே பருவகாலம் போல, ஓர் ஒழுங்கில்தான் நிகழ்கின்றன. பருவகாலத்துக்கு முன்போ, பருவகாலம் கடந்தோ காய்கறி விதையைப் பயிரிட்டால், அது பலன் தருவதில்லை. அதாவது, இந்த உலகம் ஓர் ஒழுங்கில், ஒரு லயத்தில் இயங்குகிறது. அதில் குறுக்கிடும்போது எல்லாமே சீர்குலைந்து போகிறது. விஷயம் அறிந்தவர்கள், உலகின் அந்த இயல்பான ஓட்டத்தில், பிரபஞ்ச லயத்தில் தாங்களும் செல்கின்றனர். எல்லாம் எளிதாக இயங்குகிறது.

சில சமயம் நாம் செய்ய வேண்டியதைச் செய்துவிட்டுப் பொறுத்திருந்தோமானால் போதும், காரியம் தானே நடைபெறும். இது நுட்பமான மனவியல் உண்மை.

ஒரு காரியம் முடிவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கும்போது, 'நாம் விரும்பும் முடிவு நிச்சயமாக நடக்கப்போகிறது' என்று நாம் பெருமைப்படக்கூடாது, தம்பட்டம் அடிக்கக்கூடாது.

'நடந்தாலும் நடக்கும். நடக்காமல் போனாலும் போகும். பார்ப்போம்' என்கிற விருப்புவெறுப்பற்ற — ஆசைகளற்ற — மன நிலையைக் கொள்ள வேண்டும் என்கிறார்கள் மனவியல் அறிஞர்கள்.

ஒரு காரியம் நடந்துகொண்டிருக்கும்போது, நாம் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்தால், நாம் வாழ்கிற நிகழ்காலத்தைக் கோட்டை விட்டுவிடுவோம்.

பொருளைக் கடந்த உலகில் நிகழ்காலம் மட்டுமே இருக்கிறது. இறந்த காலம், எதிர்காலம் என்பது ஏதுமில்லை. நாம் நிகழ்காலத்தில் செய்யவேண்டியதில் கவனமாக இருந்தோமானால், எதிர்காலம் தானே நல்லதாக அமையும். எனவே, எப்போதும் 'நிகழ்காலத்தைக் கவனியுங்கள்' என்பார்கள் புத்த ஞானிகள்.

அத்துடன் பிரபஞ்ச ஓட்டத்தில், லயத்தில் இணைந்துவிடுவது நல்லது. எடுத்த காரியத்துடன் மனம் ஒன்றிவிட்டால் (பாடகர் இசையுடன் ஒன்றிவிடுவதுபோல) அதுவே நம்மைச் சரியான பாதையில் அழைத்துச் செல்லும். அதுவே வழிகாட்டும். எத்தனை நுட்பமான உண்மை இது!



30

மூன்று நகைப்பெட்டிகள்

கவிதை

பார்ப்பவர்கள் சொல்கிறார்கள் –
நமது பாதை பழுதுபட்டது,
கொள்கை கேலிக்குரியது என்று.
உண்மையிலேயே
உயர்வானதாய் இருப்பதனால்தான்
முட்டாள்தனமானது என்ற முரசொலி.

சாயம் போகாமல் காணாமல் போகாமல்
நிலையாக நிற்கிறதே அதுதான்
அதன் உயர்வின் சூட்சுமம்.
முன்னோர்கள் பயந்த
மூடக்கொள்கையாயிருந்தால்
எப்போதோ போயிருக்கும் இடம் தெரியாமல்
என்னிடம் இருப்பதோ
மூன்று நகைப்பெட்டகங்கள்.

முதலாவது, கருணை
இரண்டாவது, சிக்கனம்

மூன்றாவது, தலைவனாகத்
தன்னை முன்னிறுத்தாமை.

இன்றைய 'வீரம்'
கருணையை அறிவதில்லை.
தாராளம் சிக்கனத்தை இழந்து நிற்கிறது.
தலைமை அடக்கத்தை மறந்து...

கருணையில்லாத துணிவு
சிக்கனமில்லாத வள்ளல் குணம்
அடக்கமற்ற தலைமைப் பண்பு
அழிவு அருகில் வருவதன் அடையாளம்.

போரில் தொடர்ந்த வெற்றிக்குக்
காரணம் கருணைதான்.
தற்காத்துக் கொள்பவனைத்
தாங்கி நிற்பது கருணைதான்.

கருணையே ஆயுதமாக -
கடவுள் காப்பாற்றுபவராக -
உலகம் உருள்கிறது.

விளக்கம்

'என்னிடம் மூன்று நகைப்பெட்டிகள் இருக்கின்றன' என்று ஆரம்பிக்கிறார் ஞானி லாட்சு. அவற்றைத் திறந்து மூன்று அழகிய ரத்தினங்களை எடுத்து வெளியே வைக்கிறார். மூன்றும் வாழ்க்கைக்குத் திசைகாட்டும் மணி விளக்குகள்!

முதலாவது கருணை உள்ளம் என்று சொல்லும் போதே, நமக்கு வள்ளலாரின் 'அருட்பெருஞ்சோதி

தனிப்பெருங்கருணை' என்ற வாசகம்தான் நினைவுக்கு வருகிறது.

'கருணையும், சிவமே பொருள் எனக்காணும் காட்சியும் பெறுக...'

என்று 'கருணைதான் சிவம். கருணையினால் நீ இறைநிலை அடையலாம்' என்று இறைவனே தனக்கு அறிவித்ததாகச் சொல்கிறார் ராமலிங்க அடிகள்.

ஞானி லாட்சுவுக்கும் இறைவன் இப்படி அறிவித்ததாகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில் ஞானி லாட்சு, வள்ளலார் போன்ற ஞானிகள் அந்தப் பிரபஞ்ச இயக்கத்துடன் ஒன்றிவிட்டவர்களல்லவா...?

சொல்கிறார் ஞானி லாட்சு: "வீரத்தின் வழியே வெற்றி காண்பவன், சாதாரண வழி அறிந்த சாதாரண மனிதன்.

'வீரத்தைக் கடந்த வீரம்' என்ற ஒன்று இருக்கிறது. அதுதான் கருணை. உயர் தர்மநெறி. இதனால் நாமும் வாழ்கிறோம். அவனும் வாழ்கிறான். நாமும் உயர்கிறோம். நம் எதிரியும் உயர்கிறான். நிரந்தரத் தீர்வு தருவது இது ஒன்றுதான்..."

வீரத்தின் உள்நோக்கம் என்ன? ஆணவம். வீரத்தின் வெளிப்பாடு என்ன? வன்முறை. இதை நாம் கடந்து செல்லவேண்டும் என்கிறார் லாட்சு. வன்முறையின் எதிர்ப்பதம் கருணை. அன்பு, பரிவு, மன்னிக்கும் மனோபாவம்.

'பகைவன், பகைவனே அல்ல... நீதான் அவனை அப்படிப் பார்க்கிறாய்! அவனிடமும் நல்ல குணங்களும் உயர் பண்புகளும் இருக்கின்றன. நீ அதைத் தொடு...' என்கிறார் பாரதியார், 'பகைவனுக்கருள்வாய்' என்கிற பாடலில்.

“புகையினால் மூச்சுத் திணறுகிறது... கண்கள் கசி கின்றன. பார்வை பழுதுபடுகிறது. ஆனால், புகையைச் சற்று விசிறினோமானால், சிறிது காற்றை அளிப்போ மானால், அது தீயாக எரிகிறது. அந்தத் தீயின் வெப்பம் குளிரைப் போக்குகிறது. அதன் ஒளி தெளிவைக் கொடுக்கிறது. நெருப்பு, சோறைப் பொங்க வைக்கிறது. எனவே, புகையைப் பார்க்காதே. புகைக்குள் வாழ்க் கைக்கு உதவும் தீ இருப்பதைப் பார்...” என்கிறார் பாரதி. “புகை நடுவினில் தீ இருப்பதைப் புவியில் கண்டோமே...’ என்று பாடுகிறார்.

கருணை உள்ளம் கொண்டவர்கள் மற்றவர்களில் தன்னைப் பார்க்கிறார்கள். முல்லைச் செடியின் கஷ்டத்துடன் ஒன்றிவிடுகிறார் வள்ளல் பாரி. மயிலின் தவிப்புடன் ஒன்றி விடுகிறார் பேகன். அந்த ஒன்றிய நிலையிலேயே அவர்கள் மற்றோர் ஆத்மாவைக் காண் கிறார்கள். எல்லாவற்றிலும் இறைவனைக் காண் கிறார்கள்.

அதனால்தான் ராமலிங்க அடிகள், ‘தயை, இரக்கம், அன்பு, கருணை - இவைதான் வாழ்க்கையின் அடித்தளம். சன்மார்க்க நெறி கருணையையே அடித்தள மாகக் கொண்டிருக்கிறது’ என்றார். ‘ஆன்மநேய ஒருமைப்பாடு’ என்று ஒன்றியநிலை பற்றியும் கூறினார்.

தாராள குணம் சிக்கனத்தை இழந்து நிற்கிறது; தலைமை அடக்கத்தை மறந்து நிற்கிறது என்று ஞானி லாட்சு கூறும்போதும் நாம் இரண்டு விஷயங்களைப் பார்க்கிறோம். ஒன்று - ஆன்மீக உலகம். இரண்டாவது - நாம் வாழும் இந்தப் பொருளாலான உலகம்.

‘தாராள குணம் இல்லாத சிக்கனமும் சரியல்ல; சிக்கனமில்லாத தாராள குணமும் சரியல்ல’. ஆகவே,

வாழ்க்கை இரண்டின் சமநிலையால் இணைக்கப்பட வேண்டும். இங்கே தாராளமும் உண்டு. சிக்கனமும் உண்டு. அதாவது, நடுநிலை. இதையே வேறுவிதமாகச் சொன்னால், விருப்பு வெறுப்பற்ற சமநிலை. இதுதான் யோகம் என்கிறது பகவத்கீதை.

'அதே சமநிலையை அன்றாட வாழ்விலும் கடைப்பிடி. நீ உயர்வாய்' என்று இல்லாத உலகையும் இருக்கும் உலகையும் இணைக்கிறார் லாட்சு.

தலைமை அடக்கத்தை மறந்து நிற்கிறது என்னும் போது ஆணவத்தை குறிப்பிடுகிறார் ஞானி. தான் என்ற அகங்காரம், "நான், எனது, எனக்கு"என்ற அகங்காரம், சுயநலத்தையும், பொறாமையையும், வஞ்ச குணங்களை யும், பகைமையையும், அளவு கடந்த ஆசைகளையும் மனிதனுள் வளர்க்கிறது. இவை எல்லாவற்றையும் வளர்ப்பது ஆணவம்தான் என்பதை உணர்ந்த சைவ சித்தாந்தம் "ஆணவம், கன்மம், மாயை" என்று சொல்லி எல்லா காமக் குரோத குணங்களையும் ஆணவத்தினுள் அடக்கியது. சர்வாதிகாரம் என்பதுதான் ஆணவத்தின் உருவம்.

உலக வாழ்வில் சமநிலை - சமத்துவம் நிலவட்டும். உலகிலுள்ள எல்லாவற்றிலும் கடவுள் இருக்கிறார் — பரம்பொருள் இருக்கிறது — என்பதை உணர்ந்து இவ்வுலக வாழ்க்கையை அன்பால், கருணையால் இயக்கு என்கிறார்.

ஆணவத்தை அழித்து, எளிமையை முன் வைத்து உலக இயக்கத்திற்கு உன் பணியைச் செய்ய நீ ஒரு கருவியாக இருக்கிறாய் என்பதை உணர் என்கிறார் ஞானி.

லாட்சு உலக மகா ஞானி. 2600 ஆண்டுகளுக்கு முன்பே சொல்லிவிட்டுப் போயிருக்கிறார். மகான் ராம லிங்க அடிகளும் அதைத்தான் சொல்கிறார். காலம், தேசம் இவற்றையெல்லாம் கடந்த உண்மைகளை, ரத்தினங்களை நம் ஞானிகள், நமக்காக விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

பெட்டியைக் காப்பதில் அர்த்தமில்லை. பெட்டி யில் எல்லாம் இருக்கிறது என்று சொல்லிக் கொள்வதில் அர்த்தமில்லை. ரத்தினங்களான உயர்பண்புகளுடன் ஒன்றி வாழும்போதுதான் மனிதன் தேவனாகிறான்.

வாழ்க்கை — தேவனாகும் முயற்சி.



31

எளிமை என்பது ஆசை அற்றது

கவிதை

பிரபஞ்ச இயக்கத்தில் ஆட்டபாட்டமில்லை;
செயல்படுவதாகத் தெரியவில்லை.

அது ஆடாமல் இருக்கும் அமைதியுமல்ல
செயல்படாமல் எதுவும் விடப்படுவதும் இல்லை.

தலைவர்கள் இதைப் புரிந்து கொள்வார்களானால்
எல்லாக் காரியங்களும் இயல்பாகச் செயல்படும்.

தானே செயல்படும் துடிப்பை எளிமை எனலாம்.
பெயரோ புகழோ – எளிமைக்கு ஏதும் ஆசை இல்லை.
ஆசை இல்லாதபோது எல்லாம் லயத்தில் ஓடுகின்றன.
உலகம் அப்போது நிலைபெற்று இயங்குகிறது.

ஆசையால் தூண்டப்பட்டு செயல்பட விரும்பும் துடிப்பை
"எளிமை, எளிமை" என்று அமைதிப்படுத்துவேன்.

அந்த எளிமையை வேறு பெயரிட்டு அழைக்க முடியாது
அது ஆசை அற்றது.

ஆசை இல்லாதபோது, நல் உறவு என்ற லயத்தில்
எல்லாம் இயங்குகின்றன.

உலகின் இயல்பான ஓட்டம்;
தானே இயங்கும் பிரபஞ்சம்.

விளக்கம்

'செயலற்ற செயல்' என்ற வார்த்தையை கேள்விப் பட்டிருக்கிறீர்களா? சப்தமில்லாத சப்தம். ஆடாத நடனம். பேசாத பேச்சு என்று பல விஷயங்கள் நம் சிந்தனையை நிறைக்கின்றன. நம் கண்களுக்கு நாம் வாழும் பிரபஞ்சம் செயல்படுவதாகத் தெரியவில்லை. ஆனால் அது ஆடாமல் அமைதியாகவும் இல்லை. காரியங்கள் நடக்கவேண்டியவை எதுவும் நிறுத்தப்பட வில்லை. இதைத்தான் தானே இயங்கும் பிரபஞ்சம் என்கிறோம்.

யோகி ராம் சுரத்குமார் சொல்வார்:

"இந்த பிச்சைக்காரன் அதிகம் படித்தவனல்ல" என்பார். ஆனால் அவருடைய வீட்டிலோ நிறைய புத்தகங்களும் பத்திரிகைகளும் கூடம் தாழ்வாரம் பூராவும் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். இவ்வளவு நூல்களை வைத்துக் கொண்டு "படித்தவனல்ல" என்று சொல்கிறீர்களே என்று கேட்டால் சிரித்துக் கொண்டே சொல்வார்: "அவர்கள் இந்த இடத்தை உணர வேண்டும்." "இங்கு நிலவும் அமைதியை - தெய்வீகப் பேருணர்வை — உணர வேண்டும்" என்பார். அங்கே நடப்பது பேசாத பேச்சு; புகட்டப்படாத ஞானம். ஆனாலும் குருவுக்கும் சீடர்களுக்கும் இடையே ஏதோ நடந்து கொண்டிருக்கிறது. அதுதான் சப்தமில்லாத சப்தம்.

சிவன் கோயிலுக்குப் போனோமானால் அங்கே தட்சிணாமூர்த்தி தன் நான்கு சீடர்களுடன்

அமர்ந்திருப்பார். அங்கும் அதுதான் – மவுன போதனை – நடைபெறுவதாகக் கூறுவார்கள்.

இதை அன்றாட வாழ்வில் நாம் கொண்டு போனால் எப்படி இருக்கும்? அங்கே தலைவர்கள் ஆள்பவர்களாக இருக்கமாட்டார்கள்; மாறாக வழிகாட்டுபவர்களாக இருப்பார்கள். இயல்பாக நடக்குமாறு, எங்கும் சுதந்திரமும் கட்டுப்பாடும் செயல்படும்படிப் பார்த்துக் கொள்வார்கள்.

கல்கி கூறுகிறார்: “நான் அலை ஓசையை எழுதவில்லை. என் கதா பாத்திரங்கள் ஆரம்பித்தன. அதைத்தான் நான் எழுதினேன்” என்கிறார் செயலற்ற செயல் என்ன என்பது இப்போது நமக்கு நன்கு புரியும்.

“தானே செயல்படும் துடிப்பை எளிமை எனலாம்” என்கிறார் ஞானி லாட்சு. அங்கே ஆரவாரமில்லை. பகட்டு இல்லை. ஜோடனை இல்லை. எனவே எளிமையாக நடக்கிறது என்கிறார்.

எளிமை என்பது பெயரையோ, புகழையோ நாடுவதில்லை. எளிமை என்றவுடன் நமக்கு மகாத்மா காந்திதான், வினோபா பாவே தான் நினைவுக்கு வருகிறார்கள். இடுப்பில் ஒரு துண்டு. கையில் ஒரு கழி, மண்ணாலான சிறிய வீடு வார்தாவில். நாட்டின் பெருந்தலைவர்கள் எல்லாம் அங்கே நாட்டின் முக்கியமான பிரச்சினைகளை விவாதித்துக் கொண்டிருப்பார்கள். காந்தி எழுந்து ஓடுவார். “எங்கே போகிறீர்கள்?” என்று கேட்பார்கள். ஆட்டுக்குப் புல் போட வேண்டிய நேரம் என்று அந்த வாயில்லாத ஜீவனைக்கூட முக்கியம் கொடுத்து கவனிக்கும் எளிமை, கருணை. எளிமை எது தேவையோ அத்துடன் நிறுத்திக் கொள்கிறது. மன நிறைவடைகிறது. ஆசையில்லை.

எளிமையாக வாழ்பவர்களிடம் எந்த எதிர் பார்ப்பும் இல்லை. எனவே நிம்மதியாக வாழ்கிறார்கள். எந்த ஆசையும் இல்லை. எனவே ஓட்டம், மன உளைச்சல், தவிப்பு என்ற ஏதும் இல்லை. அங்கே ஆணவம் இல்லை. பொருள் சேர்க்கும் பற்று இல்லை. அறிவும் உணர்வும் அவர்களைத் திருப்புவதில்லை. அந்த எளிமை - செயலற்ற செயல் - அவர்களை அதே போல் இயங்கும் பிரபஞ்ச லயத்துடன் இணைக்கிறது. அவர்கள் தொடுவதில் நிதானம் நிற்கிறது.

எளிமையின் எதிரி யார்? படாடோபம், ஆடம் பரம், சுயநலம் ஆணவம் - இவைதான். இவ்வுலகின் அடிப்படை எளிமைதான். பால் வீதிகளும் சூரிய குடும்பங்களும் இருப்பது தெரியாமல் இயங்குகின்றன. எளிமை மிக்க அற்பக் காளான் பெனிசிலின் என்ற அரிய உயிர் காக்கும் மருந்தைத் தருகிறது.

$E = MC^2$ என்ற பொருள் சக்தியாக மாறும் கணக்கின் அடிப்படையைக் கவனியுங்கள். ஒரு எளிய — சின்னஞ்சிறிய — சிக்கல் இல்லாத — குழப்பமற்ற சிறிய கணக்கு அது.

பார்க்கப் போனால் பிரபஞ்சமே எளிமையில் தான் அடங்கி இருக்கிறது.

எளிமை என்பது சமநிலையும் கூட. எளிமை நமது ஆசைகளை எல்லாம் துறந்துவிடச் சொல்லவில்லை. புவியீர்ப்பு சக்தி எப்படி சூரியனிடமிருந்து அப்பால் விலகியும் போகாமல், நெருங்கியும் போகாமல் ஒரு எல்லைக் கோட்டில் நிலைத்து இயங்குகிறதோ, அதுபோல நாம் ஆசையை நிர்வகிக்க வேண்டும். அப்போது எங்கும் சமதளம் நிலவும்.

நிதானம், நடுநிலை, சமதளம், தேவையுடன் நிற்கும் நிலை, விருப்பும் வெறுப்புமின்றி, இன்ப துன்பத்தை சமமாக பார்க்கும் மனோபாவம் எல்லாம் எளிமையில் அடங்கி இருக்கிறது.

எளிமை மகிழ்வையும் மன நிறைவையும் தருகிறது. அதுதான் வாழ்வில் நாம் அடைய விரும்பும் லட்சியமும் கூட!

32

சும்மா இருக்கும் சுகம்!



கவிதை

கல்வியாளனாக வேண்டுமானால் நாளும் படி

பிரபஞ்சப் பாதையைப் புரிந்து கொள்ள
எளிமையை அறிந்து கொள்

கழித்துக் கழித்து, குறைத்துக் குறைத்து
எளிமையாக்கிக் கொண்டே போனால்

மிஞ்சுவது பூஜ்யம்; சூன்யம்

'சும்மா இருக்கும் சுகம்' தான் கடைநிலை.

அங்கே செயலே இல்லை

ஆனால் காரியமோ நடந்தேறி இருக்கிறது.

செயலற்ற செயல் என்பது இதுதான்.

செய்யாமல் விட்டுவிடும் சோம்பலல்ல இது.

நடக்க வேண்டியது தானே நடக்கிறது

ஏனெனில் அமைதியில் இயங்குவது பிரபஞ்சம்.

முயற்சி முயற்சி என்று நீ முனையும் போது
உன்னை முன்னிறுத்துகிறாய்;

இயற்கை நிலை குலைகிறது
வெற்றியோ காணாமல் போகிறது.

விளக்கம்

ஞானி லாட்சு இங்கே மிக அற்புதமான, யாரும் சொல்லாத, ஒரு உண்மையைச் சொல்கிறார். “செயலற்ற செயல்” என்ற சொல் தொடர்தான் அது. செயல் இல்லாமல் காரியம் நடப்பதில்லை. இதுதான் இவ்வுலக இயற்கை.

இவ்வுலகம் நிலம் நீர் காற்று தீ ஆகாயம் (வெட்ட வெளி) என்ற ஐந்து விதமான பொருட்களால் ஆனது. இது பொருள் உலகம். வீடு கட்டுகிறோம் — பொருள். நெல்லும் கோதுமையும் சோளமும் விளைவிக்கிறோம் - பொருள்கள். தொழிற்சாலை, விமானம், ஏவுகணை, உணவு காற்று நீர் எல்லாம் பொருட்கள் - இது பொருட்களால் ஆன உலகம்.

அதே போன்று நாம் எண்ணிய மாத்திரத்தில் எதுவும் நிகழ்ந்து விடுவதில்லை. ஆசைப்பட்டுவிட்டால் அது தானே வந்து விடுவதில்லை. இவ்வுலகில் எதையும் அடைய உழைப்பு தேவை. எனவே செயல் (கருமம்) தான் இவ்வுலகின் அடிப்படை உண்மை.

இங்கேதான் ஞானி லாட்சு சொல்கிறார் கல்வியாளனாவதற்கு அறிவு தேவை. அதுபோல, பிரபஞ்சப் பாதையை அறிவதற்கு எளிமை தேவை - எளிமையான கடைசி நிலை: சாந்தம், அமைதி, மோனம், செயலற்ற செயல் என்கிறார்.

நமது செயலில்தான் இவ்வுலகம் உருவாக்கப் பட்டிருக்கிறது. காற்றடிக்க மணல் மேடு உருவானது. எரிமலை வெடிக்க, புதிய தீவு உருவாகிறது. இப்படி

செயல்தான் இவ்வுலகை ஆள்கிறது. இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆனால், சில உண்மைகள் இருக்கின்றன. அவை வெளியே தெரிவதில்லை; எளிதில் புலப்படுவதில்லை. அவை நுட்பமானவை. இப்படிப்பட்ட நுட்பமான உண்மையை மறைந்து கிடக்கும் நியாயங்கள் என்கிறார்.

நமக்குள்ளே ஆத்மா என்ற மாபெரும் சக்தி, இறை சக்தி இருக்கிறது என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? இதுதான் மறைந்து கிடக்கும் நியாயம்; மறைந்து கிடக்கும் உண்மை.

தியானம் செயலற்ற செயல்தான். என்ன செய்கிறோம்? உடலைத் தளர்த்துகிறோம். உள்ளத்தைத் தளர்த்துகிறோம்; மன நெருக்கடி, தவிப்பு, படபடப்பு என்ற இவற்றிலிருந்து உடலையும் உள்ளத்தையும் தளர்த்துகிறோம். மனத்தில் பல எண்ணங்கள் அலைமோதுகின்றன. அன்றாடப் பிரச்சினைகள் என்ன நேருமோ என்ற பயங்களை மனத்தில் எழுப்பிய வண்ணம் இருக்கின்றன.

எண்ணமற்ற நிலைக்கு தியானம் செய்பவன் செல்கிறான். ஆழ்ந்த அமைதி, சாந்தம், மோனம், செயல்கடந்த நிலை. பொருள் கடந்த — எண்ணம் கடந்த — நிலையில் மனிதர் தூங்குகிறார் என்று பிறர் நினைக்கக்கூடும்.

பாடுகிறார் பத்திரகிரியார்:

"தூங்காமல் தூங்கி சுகம் பெறுவது எக்காலம்?"

தூங்கினாற்போல இருக்கிறது. ஆனால் தூங்க வில்லை! மனிதர் சும்மா இருக்கிறார், ஏதும் செய்யாமல் அதைத்தான் வேறோரிடத்தில்" சும்மா இருப்பதே சுகம்" என்கிறார்கள்.

ஞானி லாட்சு "எளிமையாக வாழ்" என்கிறார். தேவைகள் அதிகமின்றி, அந்த எளிமையையும் மிக எளிமையாக்கி கழித்துக் கழித்து, குறைத்துக் குறைத்துக் கொண்டே போனால் என்ன ஆகும்? பூஜ்யம் தான் மிஞ்சும். செயலற்ற அமைதி நிலைதான் அந்தக் கடைசி நிலை. சும்மா இருக்கும் நிலை.

பூமியும் சரி, சந்திரனும் சரி, சூரியன் செவ்வாய் யுரேனஸ் என்று எத்தனையோ கோள்கள் இருக்கின்றன. இவை இயங்குவது நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. தானே இயங்கும் பிரபஞ்சம் இது.

வயிற்றில் ஒரு புண், ஒரு உறுத்தல் என்றால் உடல் தானாக அதைக் குணப்படுத்தவோ, உறுத்தலை வெளித்தள்ளவோ முயல்கிறது. தானே இயங்குகிறது.

அதே போல, நாம் செயல்படாதபோது நம்மைக் கடந்த ஒன்று நமக்குத் தெரியாமல் செயல்படுகிறது. உலகிற்காக, பொது நன்மைக்காகச் செயல்படுகிறது. "அதைப் புரிந்து கொள்! அந்தப் பாதையில் செல்! இயற்கையுடன் ஒத்து வாழ்! பிரபஞ்சலயத்தில் செல்!" என்பதுதான் ஞானி லாட்சு கூறும் நுட்பமான உண்மை;

ஆனால் மனிதன் என்ன செய்கிறான்? ஒரு தலைவன் என்ன செய்கிறான்? எல்லாமே தன்னால் தான் நடக்கிறது என்று எண்ணிக் காரியம் ஆற்றுகிறான். ஆற்றிக் கொண்டே போகிறான். செய்ய வேண்டியதைச் செய்த பின் அதை விட்டுவிட வேண்டும். அதற்குமேல் நம் கையில் இல்லை. கடமையைச் செய்வதற்குத்தான் நீ அதிகாரி. அதன் பலனுக்கு நீ அதிகாரி அல்ல என்கிறது பகவத்கீதை. கடமையைச் செய். அத்துடன் நிறுத்திக் கொள். தானே இயங்கும் பிரபஞ்சம். ஒரு காரியம் நடந்து சரியாக முடிவதில் எத்தனையோ விஷயங்கள்,

சிறு சிறு செயல்கள் இருக்கின்றன. அவை எல்லாம் ஒன்றுசேர்ந்து, இணைந்து அவையவை தன் காரியத்தைச் செய்யும் போதுதான் ஒரு காரியம் நிறைவேறுகிறது. ஓரளவுதான் நம் வேலை. செய்ய வேண்டியதைச் செய்வது. அதற்குமேல் நம் கையில் இல்லை. எது நல்லதோ அது நடக்கும் என்கிறது கீதை.

இதையே இன்றைய நிர்வாகத்தில் நிர்வாகத்தின் நுட்பமான அறிவாகப் பயன்படுத்துகிறார்கள். ஒரு திட்டம் போடுவோம். அதில் நம் கைக்கு மீறிய பல விஷயங்கள் இருக்கும்.

என்ன எண்ணுகிறோம் — "நடக்க வேண்டியது நடக்கும். இனி ஏதும் நம் கையில் இல்லை" என்று விட்டுவிடுகிறோம். நம் மனத்திலிருந்து அகற்றி விடுகிறோம் தற்காலிகமாக. நம் மனத்தில் பாதிப்பு, உளைச்சல், கவலை இருக்குமானால் அந்த உளைச்சல் சக்தியே காரியத்தைச் சிதறடித்துவிடும்.

அப்படிச் செய்ய வேண்டியதைச் செய்துவிட்டுப் பின் சும்மா இருப்பதைத்தான் நிர்வாகத்தில் Release என்று சொல்கிறார்கள் — விட்டுவிடுவது.

சொல்கிறார் ஞானி — "விட்டுவிடுவது என்றால் காரியம் ஆகாமல் நின்றுவிடுவது ஆகாது. காரியம் நிறைவேறி இருக்கும்."



33

உள் நோக்கமற்ற தலைமைக்குணம்

பாடல்

உச்ச நிலையில் இருப்பவர்களின் அதிகாரமும்
செல்வாக்கும் உண்மையிலே ஆற்றல் அற்றவை

பார்வைக்கு அது சக்தி கொண்டதுபோல் தோன்றுகிறது
— தன்னை மறைத்து.

மோசமாக உபயோகிக்கப்படும்
அதிகாரமும் செல்வாக்கும் சக்தி கொண்டவை

அதனால்தான் அது சக்தி இல்லாதது போல்
தோன்றுகிறது.

அதிகாரம் உயர்ந்த இடத்தில் இருக்கும்போது
அது செயல்படுவதில்லை
எல்லாம் தானே நடக்கிறது
அதற்கு உள் நோக்கம் இல்லை

மோசமானவர்களின் அதிகார சக்தி செயல்படுகிறது
அவர்களுக்கு உள் நோக்கம் இருக்கிறது.

கொடுக்கும் வள்ளல் குணம் இருக்கிறதே
அது நல்ல பணி; அதற்கு உள் நோக்கமில்லை

உயர்ந்த வாழ்க்கை நெறிக்கு லட்சியம் உண்டு
உள் நோக்கமில்லை

போலியான நன்னடத்தை செயல்பட்டாலும்
பலன் இருப்பதில்லை

எனவே தன் வலிமையைக் காட்ட
முண்டாவை உயர்த்துகிறது

வாழ்க்கைப் பாதையைத் தவறவிடும் போது
அதிகாரத்தைக் கொண்டு சாதிக்கிறது

அதிகாரத்தை விடும்போது கொடைக்குணத்தில்
மனம் ஈடுபடுகிறது

கொடைக்குணம் போகும்போது சமுதாய நலம்
என்ற பெயரில் காரியம் துவங்குகிறது

சமுதாய நலத்தைத் தாண்டினால் ஊர் உலகிற்காக
மனிதன் 'நன்னடத்தை'யில் இறங்குகிறான்!

நல் நடத்தை என்று இவர்கள் பேசுவது கூட
மேல் ஓடு போல; இவர்கள் உண்மை அறியாமல்

பிரபஞ்சத்தின் எதிர்காலத்தைக் கணிப்பவர்கள்
பார்ப்பதெல்லாம் மேலோட்டைத்தான்
அதன் அடிப்படையை அறிவதில்லை

எனவே

எதையும் தாங்கும் சக்தி கொண்டவர்களால்
கனமான விஷயங்களை ஊடுருவ முடியும்
அழகான மேல் பூட்டுடன் நின்றுவிடாமல்
உண்மைக்குள் புகமுடியும்

ஆகவே
ஒன்றை விடு
மற்றதை எடுத்துக்கொள்.

விளக்கம்

வளர்ந்து உருவானவர்களின் சக்தி தடுக்க முடியாத ஒன்று. ஏனெனில் அதில் கனம் இருக்கிறது. நடைமுறை உண்மை இருக்கிறது. எல்லாவற்றையும் விட அது உள் நோக்கம் அற்றது.

தலைவர்கள் தங்களுக்கு இருக்கும் அதிகார சக்தியைக் காட்டும்போது தங்கள் வலிமையைக் காட்ட முனைகிறார்கள். தாழ்கிறார்கள். பல வேறு வியூகங் களை வகுக்கிறார்கள். சாணக்கியத்தின் சூத்திரக் கயிற்றை இயக்குகிறார்கள்.

அவர்களது அதிகார குணம் மேலே தெரியும் கானல் நீரைத்தான் பார்க்கிறது. அதற்குப் பின்னால் இருக்கும் உண்மையைப் பார்ப்பதில்லை. ஞானி லாட்சு சொல்கிறார்: உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் தங்களிடம் எல்லா அதிகாரமும் இருந்த போதிலும் அதை உபயோகிப்பதில்லை; அவர்கள் அப்படிச் செயல் படுவதில்லை. அவர்களிடம் அதிகாரம் இருப்பதுதான் எல்லோருக்கும் தெரிகிறதே, பிறகு ஏன் அதிகாரத்தை உபயோகிக்க வேண்டும்? ஆகவே உயர்ந்த மனிதர்கள் தங்கள் அதிகாரத்தைப் பிரயோகிக்காமலே காரியத்தை சாதித்துக் கொள்கிறார்கள்.

உயர்ந்த பண்பும் அறிவும் இல்லாதவன்தான் படா டோபம் செய்வான்; ஆரவாரம் செய்வான்; பழி தீர்க்க முயல்வான். அதுவே அவனைக் காட்டிக் கொடுத்து விடும் - அவனிடம் உண்மை இல்லை என்பதை;

நியாயம் இல்லை என்பதை! தலைவர்கள் வெளிப்படையாக ஒரு காரியம் செய்வார்கள். பலரும் இது நல்ல காரியம்தான் என்று பாராட்டுவார்கள். ஆனால் அதற்கு உள் நோக்கம்மிருக்கும். உதாரணமாக தேர்தலுக்கு முன்பு பல திட்டங்களை அறிவிப்பார்கள். கஜானாவில் பணமில்லாதபோதும் கடன் வாங்கிச் செய்வதாக இறங்குவார்கள். மக்கள் இதை நம்புவார்கள். அவர்களுக்கு இருக்கும் உள் நோக்கம் மக்களை இப்படி வசீகரித்து — ஏமாற்றி — தேர்தலில் ஜெயிக்கலாம் என்பதுதான்.

பல பதவிகளிலும் தங்கள் கட்சிக்காரர்களை, தங்களுக்குச் சாதகமானவர்களை அமர்த்துவார்கள். ஏதோ புதிய துறைகளை ஏற்படுத்துவது போலவும், திறமைசாலிகளை அங்கே நியமிப்பது போலவும் மக்களை நம்ப வைப்பார்கள். உள் நோக்கம் இருக்கும் அவர்கள் மூலம் அரசு செலவழிக்கும் பணத்திலிருந்து தங்கள் வருமானத்திற்கு வழி செய்திருப்பார்கள்.

ஞானி என்ன சொல்கிறார்?

“தலைமைப் பதவி ஒரு வாய்ப்பு. உனக்காக உள்நோக்கம் கொண்டு எதையும் செய்யாதே. ஊர் உலக நன்மைக்காக எதையும் செய். ஏனெனில் பொது மக்களில் பலர் உன்னைவிட புத்திசாலிகள் ஏராளமாக இருக்கிறார்கள். உன் உள் நோக்கத்தை அம்பலப்படுத்தி னால் நீ தாழ்ந்து போவாய்” என்று.

அதிகாரத்தின் உச்சியிலும் சரி, நடுவிலும் சரி, கடைநிலையிலும் சரி, அதிகாரம் பெற்றிருப்பவர்கள் எப்படிச் செயல்பட வேண்டும்?

சொல்கிறாரே வள்ளுவர் “கடிதோச்சி மெல்ல எறிக” என்று, அதுபோலச் செயல்படவேண்டும். காவல்

துறையினரிடம் கையில் தோட்டாக்கழி இருக்கும். கூட்டத்தினரைப் பார்த்து அடிப்பதுபோல் தூக்கி பாவனை செய்வார்கள். பின் அந்தக் கழியை வைத்து நெக்கித் தள்ளுவார்கள். அப்படித்தான் அதிகாரம் செயல்பட வேண்டும்.

காவல் துறையிலிருந்து தலைமைக் காரியதரிசி வரை இங்கே பாடம் கற்றுக்கொள்ள நிறைய இருக்கிறது.

மாற்று உதாரணம் காட்டுகிறார் ஞானி. தெருவிலே ஒரு பிச்சைக்காரன். கந்தல் துணி; காய்ந்த உடல்; ஒடுங்கிய கண்கள். "ஐயா! சாப்பிட்டு மூன்று நாளாயிற்று" என்கிறான். நாம் உடனே உள்ளே சென்று வீட்டில் இருப்பதை அவனுக்களித்து அவன் சாப்பிடுவதைப் பார்த்து மனமகிழ்கிறோம். எந்த விதமான உள் நோக்கமுமில்லை.

இதையே வள்ளுவரும் சொல்கிறார். நீ வள்ளல் போல் தர்மம் செய்யும் போது, உள் நோக்கத்துடன் அதைச் செய்வாயானால் தம்பீ, அது தர்மமல்ல – அது வியாபாரம்! என்கிறார். வியாபாரத்தில்தான் நாம் ஒன்றை வாங்க ஒன்றைக் கொடுக்கிறோம். எனவே வலது கை கொடுப்பதை இடது கை அறியாதவாறு கொடுக்க வேண்டும் என்பார்கள்! என்ன உயர்ந்த பண்பு! மிக அழகாகச் சொல்கிறார் ஞானி.

சரியாக வாழத் தெரியாத மனிதன்தான் அதிகாரத்தை — வன்முறையை — பயன்படுத்துகிறான். அதிகாரத்தை ஆணவமாகவோ, வன்முறையாகவோ உபயோகிக்கக் கூடாது என்று அவன் உணரும்போது அவன் மனிதனை மனிதனாகப் பார்க்கிறான். அப்போது அவனுக்கு எப்படி உதவலாம் என்று எண்ணுகிறான். வள்ளல் குணம் மேவுகிறது. கொடைக்

குணம் கொடுக்கும் குணம் போகும்போது ஊர் உலகம் நன்றாக இருக்க வேண்டும் என்ற சமுதாய நலம் மனத்தில் எழுகிறது. சமுதாய நலம் மேவும்போது அவன் தன் வாழ்க்கையின் ஒவ்வொரு செயலையும் கவனித்து நல் நடத்தை கொண்ட மனிதனாய் மாறுகிறான் என்கிறார்.

இதையே மாற்றி, நல் நடத்தை கொண்ட மனிதனாக வாழ்க்கையைத் துவங்கும்போது தயாளகுணம் மேவுகிறது; அவன் அதிகாரத்திற்கு வந்த போதும் அதை உபயோகிப்பதில்லை என்றும் நாம் இதைப் படிக்கலாம்.

நல் நடத்தை என்னும்போது ஞானி லாட்சுவுக்கு ஒரு சந்தேகம் வருகிறது. நல் நடத்தை என்று காவி வேஷம் போடும் பெரிய மனிதர்களின் நினைவு வருகிறது. அதைத்தான் இத்தகைய போலித்தனமான வாழ்க்கையை "மேல் ஓடு" "வெளி வேஷம்" என்று சாடுகிறார்.

எதிர்காலத்தைப் பற்றிக் கணிக்கும் விற்பன்னர்கள் நம்மிடையே இருக்கிறார்கள். நாம் வாழும் உலகமோ மாறிக் கொண்டே இருக்கிறது. இந்த மாற்றம் எப்படி இருக்கும் என்று சொல்வது மனிதனின் மேல்தோலைத் தொடுவது போலத்தான்.

பிரபஞ்சத்தின் எதிர்காலத்தைக் கணிப்பதைவிட பிரபஞ்சத்தின் அடிப்படை உண்மைகளை அறிய வேண்டும். அப்படி அறிந்து நம் அன்றாட வாழ்க்கையை நிகழ்காலத்தில் அமைத்துக் கொள்வோமானால் எப்போதுமே மகிழ்வுடன் வாழலாம். எனவே பிரபஞ்ச உண்மைகளை, மாறா உண்மைகளை, நியதிகளை அறிந்து கொள்ளுங்கள் என்கிறார்.



34

அருவத்தின் உருவம்!

கவிதை

பார்க்கப்படுகிறது; ஆனால் உருவம் தெரிவதில்லை
அருவம் அதன் பெயர்.
கேட்கப்படுகிறது; ஆனால் காதில் விழுவதில்லை
மௌனம் அதன் பெயர்.
போய்ச் சேர்ந்தோம்; ஆனால் பெற்றோம் இல்லை
புலனாகாதது அதன் பெயர்

இம்மூன்றும் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டவை.
எனவே அவை கலந்து ஒன்றுபோல் செயல்படுகின்றன.

இருள் எழும்போது அங்கே வெளிச்சமில்லை
அது அடங்கும்போது அங்கே இருளில்லை
முடிவில்லாமல் இந்தப் "பெயரற்ற ஒன்று" தொடர்கிறது
எழுவதும் திரும்பி வருவதுமாக
– சூன்யத்தை நோக்கிய பயணம்.

அதனால்தான் இதை "அருவத்தின் உருவம்"
என்கிறார்கள்
"சூன்யத்தின் தோற்றம்" என்கிறார்கள்.

அதனால்தான் இதை "நழுவுவது; பிடிபடாதது"
என்கிறார்கள்.

நெருங்கிச் சென்றால் அதன் துவக்கமோ தெரிவதில்லை.
தொடர்ந்து சென்றாலோ முடிவும் தெரிவதில்லை.

இந்தப் பழம்பெரும் பிரபஞ்ச இயக்கத்தைப்
பிடித்துக்கொள்
இன்றைய நடைமுறை நிலவரத்தை உன் கைக்குள்
கொண்டுவா
இப்போது நீ பிரபஞ்ச துவக்கத்தை – மூலத்தை –
அறிந்து கொள்வாய்
இதுதான் நம்மை மூலத்துடன் இணைக்கும் கயிறு.

விளக்கம்

ஞானி லாட்சுவின் கவிதைகளில் இது மர்மம் நிறைந்த பகுதி. என்ன மர்மம் இங்கே? கண்களால் பார்க்க முடியாது, காதால் கேட்க முடியாது, புலன்களால் அறிய முடியாது என்று சொல்லி "இவை எல்லாம் அது இல்லை" என்று இல்லாததைச் சொல்லி இருப்பதை விளங்க வைக்கிறார்.

இது இல்லை – அது இல்லை என்று கழித்துக் கொண்டு வந்தோமானால் ஏதோ ஒன்று மிஞ்சுகிறது. அதுதான் அது! குழப்பமா?

நம் வாழ்வில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. சிக்கல்கள், துன்பங்கள், ஏமாற்றங்கள் – –! "எப்படிச் சமாளிப்பது?" என்று நாம் தவித்துப் போகிறோம். வழி புரியவில்லை. இந்த சமயம் திடீரென்று எதிர்பாராத சம்பவம் – யாரோ ஒருவர் உதவுகிறார் – எல்லாம் சரியாய்ப் போகிறது.

"இதை எதிர்பாராமல் நிகழ்ந்தது" என்கிறோம். நம்முடைய சக்திக்கு அப்பாற்பட்டு இது நிகழ்கிறது. இது எப்படி நிகழ்ந்தது என்கிற காரண-காரியம் எதுவும் இல்லை.

"உள் உணர்வு" என்பது இதுதான். நமது நினைவு மனத்தைக் கடந்து, சம்பவங்களை நினைவு வைத்திருக்கும் ஆழ் மனத்தைக் கடந்து, நமது மனமானது எங்கோ உள்ள பிரபஞ்ச மனத்தைத் தொடுகிறது. பிரபஞ்ச சக்தியைத் தொடுகிறது. அது உதவ நமது பிரச்னை உடனே முடிகிறது. இந்த பிரபஞ்ச சக்தி - இந்தப் பிரபஞ்சப் பேரறிவு - நம் உள்ளுணர்வின் மூலம் நம் நினைவு மனத்தில் இறங்குகிறது. உதவுகிறது. அதே போல நம் சூழ்நிலையையும் பாதித்து நம் லட்சியத்திற்கேற்ற ஒரு சூழ்நிலையை அங்கே உருவாக்குகிறது.

இந்த பிரபஞ்ச சக்தி நாளும் நமது சூழ்நிலையில் வெப்பதட்பத்தையும், பருவ காலங்களையும், இரவு பகலையும், வெள்ளத்தையும் பஞ்ச காலங்களையும் மாற்றி மாற்றி உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

சரித்திர ஆசிரியர்கள் "சரித்திரம் திரும்புகிறது" என்பார்கள். "முன்பும் இப்படித்தான் நடந்தது. அதே போல இப்போதும் நடக்கிறது" என்பார்கள். இப்படி பிரபஞ்ச இயக்கத்தின் போக்கை உணர்ந்தவர்கள் தங்கள் வாழ்வையும் நாட்டின் வாழ்வையும் காப்பாற்று கிறார்கள்.

தமிழிலேயே பாபநாசம் சிவன் எழுதிய ஒரு பாடல் உண்டு

"சராசரங்கள் வரும் சுழன்றே
சகடுபோல் உன்னருளால்"

சகடு என்றால் சக்கரம்போல என்று பொருள் எதுவும் புறப்பட்ட இடத்திற்கே திரும்பி வருகிறது.

எனவே தீமை பிறருக்குச் செய்தால் அது ஒருநாள் நமக்குத் திரும்பிவரும். பயிர்களைக் காக்க பூச்சி மருந்து தெளிக்கிறோம். பூச்சிகள் செத்துப்போகின்றன. ஆனால் அந்த பூச்சி மருந்து செடியின் மீதும் பட்டு அதன் உள்ளுக்கும் போய், அதை நாம் உணவாக சாப்பிடும் போது நம் உடலைப் பாதிக்கிறது.

"முற்பகல் செயின் பிற்பகல் விளையும்" இதுதான் இந்த இயற்கை சக்கரம். ஆக இயற்கை என்ன செய்கிறது? நாம் பூச்சியை பூச்சி மருந்து மூலம் கொன்றால், பூச்சி மருந்து அதை ஏவியவனையும் பாதிக்கிறது. அதாவது இயற்கையின் போக்கில் நாம் போக வேண்டும். வாழவேண்டும்; இயற்கையை பாழ்படுத்தினால் அதன் விளைவை நாம் அனுபவிக்க வேண்டும். இதைத்தான் சொல்கிறார் லாட்சு.

அதே போல, நம் வாழ்வின் அமைப்பை, பிரச்னைகளின் சரியான முடிவை உள் உணர்வு மூலம் அறியலாம். எது வரப்போகிறது, அப்படி ஒரு சம்பவம் நிகழக் காரணம் என்ன என்று தெரிந்து கொள்ளும் போது நாம் நம்மாலானவரை சம்பவங்களை மாற்ற முயலலாம்; வெற்றி பெறலாம்.

ஞானி என்ன சொல்கிறார்?

அதிகம் விவரிக்காமல் – சொல்லாமல் சொல்லும் விஷயம் என்ன?

நாம் வாழும் இவ்வுலகம் பரிணாம வளர்ச்சி நோக்கி நம்மை மேம்படுத்தி பூரணமாக்கும் பணியில் நாளும் போய்க் கொண்டிருக்கிறது. அந்த பிரபஞ்ச இயக்கத்தைப் புரிந்து கொண்டோமானால் பிரபஞ்ச

இயக்க உண்மைகளை உணர்ந்து உயர் வாழ்வு வாழலாம் என்பதுதான்.

அப்படி ஒரு சக்தி இவ்வுலகில் இருக்கிறது. அதைக் கண்ணால் காதால், பார்க்கவோ கேட்கவோ முடிய வில்லை. அந்த தெய்வீகப் பேருணர்வை, பேருண்மை களை உங்கள் உள் உணர்வு மூலம் புரிந்து கொள்ளுங் கள் என்கிறார்.

அருவம் என்றாலே உருவமற்றது என்று பொருள். ஞானி சொல்வதோ அருவத்தின் உருவம்! இல்லாததை நீ இருக்கும் உலகிற்கு எடுத்து வா என்பதுதான். சப்தம் எழுப்பினால் காதில் நன்கு விழும். சப்தமில்லாது எப்படி சப்தத்தை எழுப்ப முடியும்? நம் காது கேட்காததை (Ultra sonics) நாயின்காது கேட்கிறது. நம்முடன் உலகம் முடிந்து விடுவதில்லை. வேறு ஒரு நிலையும் இருக்கிறது. அதையே ஞானி லாட்சு கூறுகிறார் இரண்டாவது வரியில். "கேட்கப்படுகிறது ஆனால் காதில் விழுவதில்லை. மௌனம் அதன் பெயர்" என்கிறார்.

புத்த ஞானி சொல்லும் ஒரு கை தட்டும் சப்தத்தைக் கேட்டிருக்கிறீர்களா?

நண்பர்களே, மௌனம் அதன் பெயர்.

கண்ணால் பார்ப்பது பொருள்; உருவம்.

பொருள் கடந்த நிலை சூன்யம்; வெட்டவெளி. அங்கே பார்வையில் ஏதும் இருப்பதாகத் தெரிய வில்லை. ஆனால் அங்கும் ஏதோ இருக்கிறது; நம் கண்களுக்குத்தான் தெரிவதில்லை.

22 ஆயிரம் மைலுக்கப்பால் வெட்ட வெளியில் விண்வெளிக்கூடம் பூமியைச் சுற்றுகிறது. அதன் மூலம் அமெரிக்காவில் நடப்பதை அதே சமயம் இந்தியாவில்

நாம் பார்க்க முடிகிறது! வெட்டவெளி எனப்படும் ஆகாயத்திலிருந்து நாம் பெறுகிறோம்.

யோசித்துப் பார்த்தால் ஆகாயம் கூட நமக்கு இன்று பயன்படுகிறது.

நிலம் நீர் தீ காற்று ஆகாயம் என்ற பஞ்ச பூதத்தில் மனிதன் இது நாள்வரை (ether) ஈதர் எனப்படும் ஆகாயத்தின் பயனை தன் வாழ்வில் உணர்ந்ததில்லை. ஆனால் இன்று, அந்த பொருள் கடந்த வெட்டவெளி நமக்கு அதிகமாகப் பயன்படுகிறது! ஞானி லாட்சு ஒரு திரிகால ஞானி!



35

தன்னை வெல்லும் உபாயம்

கவிதை

பிறரைப் புரிந்து கொள்பவன் புத்திசாலி
தன்னை அறிந்து கொள்பவன் ஞானி.

பிறரை வெற்றி கொள்பவன் பலம் படைத்தவன்
தன்னை வெற்றிகொள்பவன் உள்வலிமை கொண்டவன்

போதும் என்ற மனநிறைவு கொண்டவன் செல்வந்தன்
சளைக்காது போராடுபவன் லட்சியத்தில் நிலைத்து
நிற்பவன்

பதவியைத் தக்கவைத்துக் கொள்பவன் வாழ்க்கை
சகிப்புத் தன்மையுடன் நீள்கிறது
மனிதன் இறக்கிறான்; ஆனாலும் மறக்கப்படுவதில்லை
அவன் சாவதில்லை; அவன் நீண்டகால
ஆயுள்கொண்டவன்

விளக்கம்

நாம் இவ்வுலகில் மனிதர்களுடன் பிறந்திருக்கிறோம். வாழ்க்கைச் சம்பவங்கள் நம்முடன் மோதுகின்றன. இயற்கையின் சீற்றங்கள் நம்மை மோதுகின்றன - இடி, மின்னல், புயல், வெள்ளம்,

பூகம்பம், எரிமலைக்குழம்பு என்று எல்லாம் ஒரு சமயம் இல்லாவிட்டால் மற்றோர் சமயம் நம்மை ஆட்டுவிக்கின்றன.

நம்மோடு பழகும் மனிதர்களை நாம் புரிந்து கொள்ளவேண்டும். வாய்ப் பேச்சுக்குப் பின்னால், சிரிக்கும் முகத்திற்குப் பின்னால், உதவ வரும் கைகளுக்குப் பின்னால், அவர்களது உள்நோக்கம் என்ன, அவர்கள் நடை உடை பாவனைகளால் எப்படிப்பட்டவர்கள் என்பதை அறிந்து கொள்ளவேண்டும். மனிதர்களை நல்லவர்களா, தீயவர்களா என்று உணரும் விவேகம் நமக்கு வேண்டும். இயற்கைச் சம்பவங்களை வருமுன் உணர்ந்து பாதுகாப்புடன் வாழவேண்டும் இதுதான் புத்திசாலித்தனம்; வாழ்விற்கு வேண்டிய உலகஞானம். வாழும் உலகை, நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

அதோ போகிறார் தெருவில் ஒரு மனிதர்! நீண்ட தாடி. குறைந்த ஆடை. ஒரே சிரிப்பு! கலகலப்பு! 'அவர்தான் ஞானி திருமூலர்' என்று சொல்கிறார்கள். நாம் அவர்முன் பணிவுடன் நிற்கிறோம். "உன்னை அறிந்து கொண்டாயா? ஊர் உலகம், புவியியல், பொருளாதாரம், சமுதாயம், கணிதம், உயிரியல் அரசியல் என்று எல்லாம் நிறையப் படித்திருக்கிறாயே, நீ உன்னை அறிந்து கொண்டாயா? இவ்வுலகின் பிரச்சினைகளுக்கு ஈடு கொடுத்து என்னால் வாழ முடியவில்லை என்று அலறுகிறாயே, உனக்குத் தெரியுமா உன்னுள் மாபெரும் சக்தி இருக்கிற தென்பது?" என்று கேட்கிறார். "அதைத் தெரிந்து கொண்டால் இந்த உலகம் உனக்குக் கட்டுப்படும்; பஞ்ச பூதங்களான நிலம் நீர் தீ காற்று வான் என்ற எல்லாம் உன் சொல்லுக்குக் கட்டுப்பட்டு உதவ முன்வரும். இந்த

ஆதாரங்களின் அடிப்படையில் அல்லவா நீ உலக வாழ்வைத் துவங்கவேண்டும்; அதன் அடிப்படையில் அல்லவா நீ வாழ முயலவேண்டும்" என்று சொல்கிறார்.

என்ன சொல்கிறார் ஞானி?

"தன்னை அறிந்திடில் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னை அர்ச்சிக்க தான் இருந்தானே"

என்று பாடுகிறார்.

உன்னை அறிந்து கொள். தன்னை அறியும் அறிவு என்றொரு அறிவு இருக்கிறது; அதைப் படி, தெரிந்துகொள். உன்னுள் இருக்கும் மாபெரும் சக்தி என்ற ஜீவாத்மாவை அறிந்துகொள். தம்பி! இப்போது நீதான் பரமாத்மா. நீதான் கடவுள். கடவுள் உள்ளேதான் இருக்கிறார். உன்னுள் இருக்கிறார்" என்கிறார். ஞானி லாட்சு சொல்கிறார். "தன்னை அறிந்து கொள்பவன் ஞானி" என்று. "ஒரு வேளை திருமூலரைத்தான் சொல்கிறாரோ? தன்னை அறிந்த மனிதர் இவர்" என்று நாம் எண்ணுகிறோம்.

ஞானி லாட்சு நமது திருவள்ளுவரைப் போல. உலக வாழ்வை வெறுப்பவர் அல்ல; உலக வாழ்வை வாழ்வாங்கு வாழும் முறையைச் சொல்லிக் கொடுப்பவர். ஆனால் திருவள்ளுவருக்கு 400 ஆண்டு களுக்குமுன் சீனாவில் வாழ்ந்தவர். ஐந்து சக்கரவர்த்தி களுக்கு ஆலோசகராக இருந்து உலக வாழ்வில் ஆழமாக ஈடுபட்டவர்; உணர்ந்தவர்.

சட உலகில் நாம் வாழும் உலக வாழ்க்கையும் தேவை. அதே போல சடப் பொருளைக் கடந்த மென்மையான சூட்சும உலகம்தான் இந்த உலகை

உருவாக்கியது. எனவே அதன் உண்மைகளையும் தெரிந்து கொண்டு உபயோகிக்க வேண்டும் என்று சொல்பவர். உண்மை அதுதான். அதனால்தான் அவர், "இவ்வுலகில் வாழ புத்திசாலியாக, உலக ஞானம் பெற்றவனாக இரு. அத்துடன் தன்னை அறியும் அறிவைப் பெற்ற ஞானியாகவும் இரு. இரண்டும் தேவை" என்று சொல்லாமல் சொல்கிறார்.

பிறரை வெற்றி கொள்பவன், பலம் படைத்தவன், படை உள்ளவன், பலசாலி. ஆனால் தன்னை வெற்றி கொள்பவன் இருக்கிறானே அவன் உள் வலிமை கொண்டவன் - வைராக்யம் படைத்தவன் என்கிறார். படைத் தலைவனுக்குச் சளைக்காத மனமும் வைராக்யமும் இல்லை என்றால் எப்படி வெற்றி காண முடியும்? இரண்டும் தேவை. படை பலமும் வைராக்யமும் இரண்டுமே முழு அளவில் தேவை என்று உள் வலிமையைப் பாராட்டுகிறார் பலம் - பலசாலி எல்லோரும் அறிகிற விஷயம். உள் வலிமை - வைராக்யம் தெரியாத விஷயம், ஆனால் மிகத் தேவையான குணம்.

அடுத்து நம் 21ஆம் நூற்றாண்டைப் பார்த்து, உலகிற்கு பணம் பண்ணும் வழிகாட்டும் அமெரிக் காவைப் பார்த்துச் சொல்வதுபோலச் சொல்கிறார்.

"ஓடு ஓடென்று ஓடுகிறீர்களே! என்ன சாதித்தீர்கள்? எதற்காக ஓடுகிறோம், எங்கே ஓடுகிறோம் என்று ஏதாவது சிந்தித்தீர்களா? வாழ்வின் லட்சியம் நமது ஓட்டத்தின் முடிவில் நாம் மனநிறைவுடன் வாழ வேண்டும் என்றுதானே ஓடுகிறோம்! ஆனால் நடப்ப தென்ன? மன நிறைவு முக்கியம் என்பதை மறந்து ஓட்டம்தான் லட்சியம் என்றா ஓடுவது என்று பரிகசிக் கிறார்.

பணம் சம்பாதிக்கத்தான் ஓடுகிறோம். ஆனால் யார் செல்வந்தன்? "பணம் சம்பாதிக்கும் லட்சியம் மன நிறைவுதான் என்பதை உணர்ந்து மன நிறைவுடன் வாழ்கிறானே அவனல்லவா செல்வந்தன்?" என்று சொல்கிறார். "ஆம், சுவாமி, ஆம்!" என்று நாம் லாட்சுவை ஏற்றுக் கொள்கிறோம்.

லட்சியத்தை அடைவதுதான் மனநிறைவு; சாதனை. அந்த லட்சியத்தை எப்படி அடைய முடியும்? லட்சியத்திலிருந்து ஒரு சிறிதும் பிறழாது - தன் லட்சியத்தை அடிக்கடி மாற்றிக் கொள்ளாமல் - அதே குறி என்று சளைக்காத மனத்துடன் போராடுகிறானே அவன்தான் வெற்றி பெறுகிறான் என்கிறார். வெற்றி பெற நமக்கு லட்சியத் தெளிவும், லட்சியத்தை அடைவோம் என்பதில் உடும்புப் பிடியும், இடையே வரும் களைப்பு, தளர்வு, சோர்வு, தோல்வி என்பவற்றினால் பாதிக்கப்படாத உள்ளம், சளைக்காத மனம் தேவை என்கிறார்.

அடுத்தாற் போல மற்றும் ஒரு மாபெரும் உண்மையை நமக்குத் தெளிவு படுத்துகிறார். பல பேர் வாழ்க்கை நடத்துகிறார்கள் எப்படி? மன்னிக்கவும்; தாலுக்காபீசிலே பிறந்து, தாலுக்காபீசிலே வளர்ந்து, தாலுக்காபீசிலே தாசில்தாராக மலர்ந்து வாழ்க்கையை முடித்துக் கொள்பவர்கள் ஏராள பேர் இருக்கிறார்கள் தாலுக்காபீஸ் என்றில்லை. ஆசிரியராக, டெலிபோன் ஆபரேட்டராக, அரசியல்வாதியாக. இப்படி இப்படி, இவை எல்லாம் அதைத் தேர்ந்தெடுப்பதும் முடிவில் அதிலிருந்து ஓய்வு பெறுவதும் தவறான - அல்லது கேவலமான - வேலை என்று சொல்வதாக ஒரு கணமும் நினைக்காதீர்கள்.

இவர்கள் தங்களுக்கு - தங்களின் திறமைக்கெல் லாம் ஒரு வாய்ப்பைக் கொடுக்காதவர்களாய் - இதுதான் இன்னபடி என்று நம் தலையில் எழுதப் பட்டது என்று எல்லாவித இடர்ப்பாடுகளையும் சகிப்புத்தன்மையுடன் பொறுத்து வாழ்கிறார்கள். இதனால் வாழ்க்கை நீள்கிறது வேலையைத் தக்க வைத்துக் கொள்வதுதான் லட்சியம். இதை சகிப்புத் தன்மையால் சாதிக்கிறார்கள் என்று ஞானி சொல் வதை அனுபவப்பட்ட நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்மை நாமே காட்டிக் கொள்ளாதவர் களாக வாழ்வை நீட்டிக்கிறோமே என்று ஆதங்கப்படு கிறார் ஞானி லாட்சு.

அடுத்த கடைசி வரியில் தன் முத்திரையைப் பதிக்கிறார் ஞானி - "மனிதன் இறக்கிறான். ஆனாலும் அவன் மறக்கப்படுவதில்லை - அவனே நீண்ட ஆயுள் பெற்றவன். அவன் மரணமடைவதில்லை." யார் வாழ்கிறார்கள்?

உலகுக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட வர்கள். தங்கள் எண்ணத்தால், சொல்லால், செயலால் உலகை உயர்த்தியவர்கள் சாவதில்லை, என்றும் வாழ்கிறார்கள். ஏனெனில் அவர்கள் செய்த பணிகளின் நலனை இன்றும் மக்கள் அனுபவித்துக் கொண்டிருக் கிறார்கள்.

ஒரு புத்தர், ஒரு காந்தி, ஒரு விவேகாநந்தர், ஒரு பாரதி — எத்தனை எத்தனை ஞானிகள், யோகிகள், தலைவர்கள்!

வாழ்வை நீட்டிப்பது பற்றியும் சாகாமல் வாழும் பெருமக்கள் பற்றியும் ஞானி லாட்சு சொல்வதை நமது பாரதி அழுத்தந்திருத்தமாக, கன்னத்தில் அறைவது போலப் பாடுகிறார்.

தேடிச்சோறு நிதம் தின்று – பல
சின்னச் சிறுகதைகள் பேசி – மனம்
வாடித்துன்ப மிக உழன்று – பிறர்
வாடப் பல செயல்கள் செய்து – நரை
கூடிக் கிழப்பருவமெய்தி – கொடுங்
கூற்றுக்கு இரையெனப் பின்மாயும் – பல
வேடிக்கை மனிதரைப் போலே – நான்
வீழ்வேன் என்று நினைத்தாயோ?"

என்று காளியைப் பார்த்து கர்ஜிக்கிறார். அதே சமயம் சொல்கிறார் எதற்கு வந்தேன் இவ்வுலகிற்கு, என்று

கிருத யுகத்தினைக் கேடின்றி நிறுத்த
விரதம் நான் கொண்டனன், வெற்றி
தருஞ்சுடர் விநாயகன் தாளிணை வாழியே"

என்று பாடுகிறார்.

பாரதியின் விரதம் என்ன விரதம் என்பதைக் கவனியுங்கள். கிருத யுகத்தினைக் கேடின்றி நிறுத்த விரதம் கொண்டிருக்கிறாராம்! ஆகா! ஆகா!

மற்றோரிடத்தில் சொல்கிறார்.

"சொல்லடி சிவசக்தி எனைச்
சுடர்மிடும் அறிவுடன் படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே"

என்று.


அதனால்தான் புத்தரும் ஏசுவும் காந்தியும் பாரதியும் இறப்பதில்லை; இன்றும் வாழ்கிறார்கள்.

சீனஞானம்

வாழ்க்கை வெளிச்சம்

டாக்டர்.

எம்.எஸ்.உதயமூர்த்தி



கங்கை புத்தக நிலையம்